YARL OSAI
# யாழ் ஓசை

ஓசை : 01 | நாதம் : 06 | வெள்ளிக்கிழமை 10.12.2010 | வார இதழ் | விலை : ரூபா 15.00

# ஜனாதிபதி-தமிழ் மக்கள் உறவுக்கு லண்டன் ஆர்ப்பாட்டம் தடையல்ல!

**அரசாங்கம் அறிவிப்பு; தமிழ்க்கட்சிகளுடன் உறவு தொடரும் எனவும் தெரிவிப்பு**

லண்டனில் ஜனாதிபதி தங்கியிருந்த வேளையில் புலிகளின் செயற்பாட்டாளர்கள் 250 அல்லது 300 பேர் மேற்கொண்ட ஆர்ப்பாட்டமானது ஜனாதிபதிக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் காணப்படுகின்ற நெருங்கிய உறவுக்கு எந்தவகையிலும் தடையாகவோ பாதிப்பாகவோ அமையாது. அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருங்கிய மற்றும் (6 ஆம் பக்கம் பார்க்க)



பொம்மைவெளிப் பிரதேசத்தில் வெள்ளத்தின் மத்தியில் குடிதண்ணீரைப் பெறும் பெண்...

## தமிழ் அரசியல்கைதிகள் இன்று அடையாள உண்ணாவிரதம்

**பொது மன்னிப்பு அல்லது பிணை வழங்குமாறு கோரிக்கை**

தமிழ் அரசியல் கைதிகள் சர்வதேச மனித உரிமை தினமான இன்று அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். தம்மைப் பிணையில் விடுவிக்க வேண்டும் அல்லது பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய (6 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டனுக்கு 'நாட்டாமை' செல்லவில்லை அரச தலைவர் ஒருவரே விஜயம் செய்தார்

**அமைச்சர் கெஹெலிய விசனம்**

ஐந்து நட்சத்திர ஜனநாயகம் குறித்து பேசும் பிரிட்டனில் தனது நாட்டில் தடை செய்யப்பட்டுள்ள புலிகள் அமைப்பின் கொடியினை ஏந்திவந்த சுமார் 4,000 பேரை தடுக்கமுடியாமல் போய்விட்டதே என்பது தொடர்பிலேயே நாங்கள் சிந்திக்கின்றோம். சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதாகக் கூறும் நாட்டில் இவ்வாறு நடைபெற்றுள்ளது என்பதனை நாம் மனதில் கொள்ளவேண்டும். இது குறித்து விளக்கமளிக்க வேண்டும் என்ற நிலை வந்தால் அது தொடர்பில் பிரிட்டனும் ஒக்ஸ்போர்ட் யூனியனும் அப்பகுதிக்குரிய (6 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் வட-கிழக்கு மக்களுக்கு கடவுளே துணை

**ஜே.வி.பி.யின் செயலாளர் ரில்வின் சில்வா**

(லியோ நிரோஷ தர்சன்)

மழைவெள்ளத்தால் 8 பேருக்கும் அதிகமானோர் பலியாகியுள்ளதுடன் ஒரு இலட்சத்து 28 ஆயிரத்திற்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்துள்ளனர். முழு நாடே வெள்ளத்தில் மூழ்கும் போது அரசாங்கம் தானும் தன்பாடும் என மௌனமாக இருக்கின்றது என்று குற்றம் சுமத்தியுள்ள ஜே.வி.பி., வெள்ளநீரால் பாதிக்கப்பட்டிருக்கும் வடக்கு கிழக்கு மக்களுக்கு கடவுளே துணை எனவும் சுட்டிக்காட்டியது. (6 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கட்சிகளின் அரங்கத்துடன் கூட்டமைப்பு நாளை பேச்சுவார்த்தை

## சிறந்த சந்தர்ப்பம் என்கிறார் குமரகுருபரன்

தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாளை சனிக்கிழமை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது. கொழும்பிலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு மாலை 4.00 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள், பலதடவைகள் ஒன்றுகூடி இனப்பிரச்சினைக்கான தீர்வு மற்றும் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம், உடனடிப் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்திருந்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும் சந்தித்து பேசுவதற்கான தமது விருப்பத்தினையும் தமிழ்க்கட்சிகளின் அரங்கத்தின் தலைவர்கள் பல தடவைகள் வெளிப்படுத்தியிருந்தனர்.

இதற்கான உத்தியோகபூர்வ கடிதத்தினையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கும் அனுப்பி வைத்திருந்தனர். இந்தநிலையில் தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தினரை சந்திப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமக்குள் ஆராய்ந்து வந்தது.

இந்த நிலையிலேயே தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தினரை சந்திப்பதற்கு தயார் என்று கூட்டமைப்பின் செயலாளரும் எம்.பி.யுமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தில் அங்கம் வகிக்கும் புளொட் அமைப்பின் தலைவர். தர்மலிங்கம் சித்தார்த்தனிடம் சந்திப்புக்கான இடத்தையும் தினத்தையும் மாவை சேனாதிராஜா எம்.பி. தெரிவித்துள்ளார்.

தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளைச் சேர்ந்த ஒவ்வொரு பிரதிநிதிகளை அடங்கிய குழுவினரையே தாம் சந்திக்க விரும்புவதாகவும், மாவை சேனாதிராஜா எம்.பி. அறிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வினை ஒன்றிணைந்து காணவேண்டும் என்பதே தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தின் நிலைப்பாடாகும். இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தக் கிடைத்தமை சிறந்த சந்தர்ப்பமாகும் என்று அரங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜனநாயக மக்கள் முன்னணியின் செயலாளர் என். குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

## மீண்டுமொரு ஆயுதப் போராட்டத்துக்கு அரசாங்கம் வித்திட்டுள்ளது - ஜே.வி.பி.

(லியோ நிரோஷ தர்ஷன்)

வடக்கு - கிழக்கு மக்களுக்கு துரோகம் செய்து மீண்டும் ஒரு ஆயுதப் போராட்டத்திற்கு அரசாங்கம் வித்திட்டுள்ளது என்று குற்றம் சுமத்தியுள்ள ஜே. வி. பி.யின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா, லண்டன் பயணத்தின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டை இழிவுபடுத்தியுள்ளதுடன் புலிகளுக்கும் உயிர் கொடுத்துள்ளார் எனவும் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

தவறுதலான வழிகாட்டலின் அடிப்படையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ லண்டன் பயணத்தை மேற்கொண்டு தானும் அவமானப்பட்டு நாட்டையும் தலைகுனிய வைத்துள்ளார்.

'ஒக்ஸ்போர்ட்' யூனியனில் பேசுவதன் மூலம் தனக்கு பேரும் புகழும் கிடைக்குமென நம்பி ஜனாதிபதி அங்குள்ள அதிகாரிகளின் எச்சரிக்கைகளையும் மீறி லண்டன் சென்று தலைகுனிய வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் முடங்கிக் கிடந்த சர்வதேசத்தின் புலிக் கட்டமைப்பு மீண்டும் உயிர் பெற்றுள்ளது.

இதனால் மீண்டும் உள்நாட்டில் போராட்டங்கள் வெடிக்கும் சூழல் உருவெடுத்துள்ளது. யுத்தம் முடிவடைந்து ஒரு வருடமும் 6 மாதங்களும் கடந்துள்ள நிலையில் இன்று இலங்கை வாழ் மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்க முடியாத நிலையே தோன்றியுள்ளது. இன்னும் தடுப்பு முகாம்களில் உள்ள தமிழ்க் கைதிகள் தொடர்பான பிரச்சினையும் முடிவுக்கு கொண்டு வரப்படவில்லை. இவ்வாறானதொரு சூழலில் புலிகளின் அடுத்த போராட்டமொன்றிற்கான சூழலை தற்போதைய அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

## சுன்னாகம் ரயில் நிலையத்தில் குடியிருந்த 29 குடும்பங்கள் வெளியேற்றம்

(நமது நிருபர்)

வட பகுதிக்கான ரயில் பாதை அமைக்கும் முகமாக சுன்னாகம் ரயில் நிலையத்தில் குடியிருந்த 29 குடும்பங்கள் அங்கிருந்து வேறிடங்களுக்கு நேற்று முன்தினம் மாற்றப்பட்டுள்ளனர்.

கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த இம்மக்கள், சுன்னாகம் ரயில் நிலையக் கட்டடத்தில் அமைக்கப்பட்ட நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்தனர். கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் ரயில் நிலையத்தில் குடியிருக்கும் மக்களை வேறிடங்களுக்கு மாற்றுமாறும், ரயில் பாதை அமைப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ரயில் நிலையத்தில் தங்கியிருந்த குடும்பங்களில் சிலர் மீளக் குடியேறுவதற்கு அனுமதிக்கப்பட்ட பகுதியான கட்டுவனுக்கு சென்றுள்ள அதேவேளை ஏனையவர்களில் 10 குடும்பங்கள் தமக்கென பல லட்சம் ரூபாய்கள் செலவில் சொந்தக் காணிகளை கொள்வனவுசெய்து சென்றுள்ளனர். இன்னும் ஒரு பகுதியினர் அளவெட்டி மற்றும் மல்லாகம் பகுதிகளிலுள்ள நலன்புரி நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான வீடுகள் மற்றும் குழாய்க் கிணறுகளை அமைப்பதற்குத் தேவையான உதவிகளை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் வழங்க முன்வந்துள்ளன.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் ரயில் பாதை அமைப்பதற்கான முன்னேற்பாடுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுன்னாகம் ரயில் நிலையப் பகுதியில் ரயில் பாதை, ரயில் நிலையம் ஆகியன அளவிடப்பட்டு மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனினும் யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் ரயில் பாதையை அண்டிய குடியிருப்புக்கள், கடைகள், கட்டடங்கள் ஆகியன அகற்றப்படாது இருக்கிறது.

கடந்த தைமாதம் ரயில் பாதை அமைப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.



இலங்கை கடற்படையின் 60 ஆவது ஆண்டு நிறைவு விழா காலிமுகத்திடலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதன் போது கடற்படை அதிகாரி ஒருவருக்கு ஜனாதிபதி சின்னம் சூட்டுவதை படத்தில் காணலாம்.

## கைவிடப்பட்ட நிலையில் ஒருநாள் குழந்தை மீட்பு

(எம். நேசமணி)

பிறந்த ஒரு நாளேயான குழந்தையொன்றினை நிக்கவரெட்டிய கல்மில்லேவ பாடசாலைக்கருகில் கைவிட்டுச் சென்ற இளம் தாயொருவரை நிக்கவரெட்டிய பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குறித்த பாடசாலைக்கருகில் குழந்தையொன்று கைவிடப்பட்டுள்ளதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்தே பொலிஸார் அக்குழந்தையை மீட்டதுடன் குழந்தையின் தாயென சந்தேகிக்கும் 25 வயதுடைய பெண்ணை கைதுசெய்துள்ளனர்.

நேற்று முன்தினம் நிக்கவரெட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்மில்லேவ பாடசாலைக்கு அருகில் குழந்தையொன்று அநாதரவாகக் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டுள்ளது. இதனைக் கண்ட பொது மக்கள் உடனே நிகவரெட்டிய பொலிஸுக்கு தெரிவித்துள்ளனர். செய்தியறிந்த பொலிஸார் குறித்த இடத்திற்கு வந்து குழந்தையை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். அதனை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையிலேயே குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

தற்போது கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரான தாயும் சேயும் நிகவரெட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை, நிகவரெட்டிய பொலிஸார் மேலதிக விசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்கிலீக்ஸ் நிறுவனருக்கு பிணை மறுப்பு



சுவீடன் பொலிஸார் தொடர்ந்த பாலியல் பலாத்கார வழக்கில் கைதுசெய்யப்பட்ட 'விக்கிலீக்ஸ்' இணையத்தள நிறுவனர் ஜுலியன் அசாஞ்சுக்கு பிணை வழங்க லண்டன் நீதிமன்றம் மறுத்துவிட்டது.

விக்கிலீக்ஸ் இணைய தள நிறுவனத்துக்கு தன்னார்வத் தொண்டுபுரிந்த இரண்டு சுவீடன் பெண்களை கடந்த ஆகஸ்ட் மாதம் இதன் நிறுவனர் ஜுலியன் அசாஞ்ச் பாலியல் பலாத்காரம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டது. இக்குற்றச்சாட்டின் கீழ் சுவீடன் அரசு இவரை கைதுசெய்ய 2 முறை பிடியாணை பிறப்பித்தது.

வீக்கிலீக்ஸ் இணையத்தள ரகசிய அம்பலத்தைத் தொடர்ந்து சர்வதேச நெருக்கடியும் சேர்ந்துகொள்ள அண்மையில் லண்டன் பொலிஸ் நிலையத்தில் அசஞ்ச் ஆஜரானார். இவருக்கு பிணை கோரி இவரது சட்டத்தரணி லண்டன் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார். இதன் மீதான விசாரணை நேற்று முன்தினம் நடந்தது.

அப்போது, அசாஞ்சிற்கு பிணை வழங்கினால் தப்பி செல்வதற்கான வாய்ப்புக்கள் அதிகளவில் உள்ளன.

அதனால், பிணை மறுக்கப்படுகிறது. இந்த வழக்கின் மீது இந்த மாதம் 14 ஆம் திகதி விசாரணை நடைபெறும் என்று நீதிபதி ஹாவர்டு ரிடில் கூறினார். அமெரிக்காவும் வீக்கிலீக்ஸ் இணையத்தளம் மீது குற்றப்புலனாய்வு விசாரணையை ஆரம்பித்துள்ளது.


# பாம்புடன் விமானத்தில் பறந்தவர் கைது

மலைப்பாம்பு உட்பட 4 பாம்புகளை தோள் பைக்குள் மறைத்து விமானத்தில் கொண்டுவந்தவரை தரையிறங்கியதும் அபுதாபி விமானநிலைய அதிகாரிகள் கைதுசெய்தனர். இதை அறிந்து, விமானத்தில் பயணித்த பயணிகள் அச்சத்தில் உறைந்தனர்.

இந்தோனேசியா-ஐக்கிய அரபு எமிரேட்டுக்கு இடையே சென்ற எடிஹாடு விமானத்தில் பாம்புகளை ஒருவர் கடத்திச் சென்றுள்ளார். அபுதாபி விமான நிலைய அதிகாரிகள் அவர் வைத்திருந்த தோள் பையை சோதனை செய்தனர். அதில் மலைப்பாம்பு உட்பட 4 பாம்புகள் இருந்தன.

மேலும், அவர் வைத்திருந்த பெட்டியில் 2 கிளிகள் மற்றும் ஒரு அணில் இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது.

விமானத்தில் அவற்றில் ஏதாவது வெளியேறி இருந்தால் என்ன ஆகியிருக்கும் என்று உடன் பயணித்த பயணி



கள் அதிர்ச்சியில் உறைந்தனர். எப்படி இதை பரிசோதிக்காமல் விமானத்தில் ஏற அனுமதித்தனர் என்ற கேள்வி எழுந்துள்ளது.



புத்தாண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவது குறித்து, தென் கொரிய பாராளுமன்றத்தில் ஆளும் கட்சிக்கும் எதிர்க் கட்சிக்கும் இடையே ஏற்பட்ட கைகலப்பால், சபாநாயகர் மேசையில் ஏறி உட்கார்ந்த எதிர்க்கட்சியினரைப் பிடித்து இழுப்பதை படத்தில் காணலாம்.

# வீனஸை அடைந்தது ஜப்பான் விண்கலம்

வீனஸ் கோளை ஆய்வுசெய்வதற்கு ஜப்பான் அனுப்பிய அகத்சுகி (விடியல்) விண்கலம் செவ்வாய்க்கிழமை சென்றடைந்தது.

வீனஸை சென்றடைந்ததில் இருந்து விண்கலம், சைகைகளை அனுப்புகிறது. ஆனால் எவ்விதத் தகவலையும் அனுப்பவில்லை. இதனால் விண்கலம் பழுதடைந்துள்ளதாக ஜப்பான் விஞ்ஞானிகள் கருதுகின்றனர். விண்கலம் சைகைகளை அனுப்புவதன் மூலம் அது செயலிழகவில்லை என்பது உறுதியாகியுள்ளது. ஆனால், அது பழுதடைந்திருக்கலாம் என்று அமெரிக்க விஞ்ஞானிகள் குறிப் பிட்டுள்ளனர்.

வீனஸில் 2 ஆண்டுகள் ஆய்வு நடத்துவதற்காக அகத்சுகி விண்கலத்தை ஜப் பான் அனுப்பியது.

இந்த விண்கல ஆய்வுக்குழுவில் அமெரிக்க விஞ்ஞானிகளும் இடம்பெற்றுள்ளனர். பலத்த எதிர்பார்ப்புடன் அனுப்பப்பட்ட விண்கலம், தகவல்களை அனுப்பாதது ஜப்பானுக்கு வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

# தரம் தாழ்ந்த அரசியல் நடத்துகிறார் சூகி

## மியான்மர் அரசு கண்டனம்

'பழங்குடியினருக்கு சுயாட்சி வழங்க முடியாது. இதற்காக ஆங் சாங் சூகி தரம்தாழ்ந்த முறையில் அரசியல் செய்கிறார்' என்று மியான்மர் இராணுவ அரசு கண்டனம் தெரிவித் துள்ளது.



மியான்மரில் பல்வேறு வகையான பழங்குடியினர் இருந்து வருகின்றனர். இவர் களில் ஷான், கச்சின் மற்றும் சின் ஆகிய மூன்று பழங்குடியினர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளுக்கு சுயாட்சி அளிக்க வேண்டும் என்று, 1947 இல் பாங்லாங் என்ற இடத்தில் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தை உருவாக்கியதில், தற்போதைய மியான்மர் ஜனநாயகத் தலைவர் ஆங் சாங் சூகியின் தந்தை ஆங் சாங்கிற்கு முக்கியப் பங்குண்டு. ஆனால், ஒப்பந்தம் ஏற்பட்ட நாளில் இருந்து இன்றுவரை சுயாட்சி கொண்டு வரப்படவில்லை.

இந்நிலையில், சூகியின் கோரிக்கைக்கு மியான்மர் இராணுவ அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அரசு கூறியதாக அந்நாட்டுப் பத்திரிகைகளில் கூறப்பட்டிருப்பதாவது: இந்தக் கோரிக்கை அரசியல் சாசனத்துக்கு விரோதமானது.

ஒருவர் அரசியலில் உண்மையிலேயே ஈடுபடவேண்டும் என விரும்பினால், சட்டத்துக்குட்பட்ட வழியில் நேர்மையாக, தேச நலனுக்காக அவர் செயல்பட முடியும். மியான்மரின் அரசியல் மிகவும் சிக்கலானது மற்றும் நுட்பமானது. புதிய ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்துவதன் மூலம் இந்த நாடு எனும் படகு பல துண்டுகளாக சிதறி ஒட்டுமொத்தமும் மூழ்க நேரிடும். இராணுவத்தின் பங்கில்லாமல் புதிய ஒப்பந்தம் ஏற்படுத்துவது என்பது தரம் தாழ்ந்த அரசியல் நடவடிக்கை. இவ்வாறு பத்திரிகைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Yarl Osai

# யாழ் ஓசை

2010 டிசம்பர் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை

இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Tel: 021-2222730, Fax: 0212222730

E-mail-jaffna@virakesari.lk

# வெள்ளத்தால் குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள்

குடாநாட்டில் பெய்துவரும் மழை காரணமாக தாழ்நிலப் பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதுடன் மக்கள் சொல்லொண்ணா பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். பொதுவாக, சந்தைப் பகுதிகள் மற்றும் விளைநிலங்கள் யாவும் வெள்ளக் காடாகக் காட்சியளிக்கின்றன.

முன்னர் ஒரு போதும் இல்லாதவகையில் சாதாரணமாக மழைபெய்தால் கூட வீதிகளில் வெள்ளம் தேங்கிநிற்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இதனால், போக்குவரத்து நெருக்கடிகள் மற்றும் விபத்துக்கள் ஏற்படவும் வழிவகுக்கின்றது.

யாழ்.குடா நாட்டில் கடந்த பலநாட்களாக விடாது பெய்துவரும் அடைமழையால் சுமார் 4,598 குடும்பங்களைச்சேர்ந்த 15 ஆயிரத்து 774 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சுமார் ஆயிரத்திற்கும்மேற்பட்டோர் தமது இருப்பிடங்களை விட்டுவெளியேறி பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர். அதேவேளை, வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சி இராமாவில் முகாமில் உள்ள அகதிமக்களும் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர். இம்மழையால் பல வீடுகள் அழிவடைந்துள்ளன.

பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு சமைத்த உணவே வழங்கப்பட்டு வருகின்றது. அவர்களுக்கான உதவிகள் உரியமுறையில் வழங்கப்படவில்லை.

யாழ். குடாநாட்டைப் பொறுத்தமட்டில் வீதிகள் செப்பனிடப்படாமலும் கால்வாய்கள் புனரமைக்கப்படாமலும் கடந்த பல ஆண்டு காலமாக இருந்து வருகின்றன. அது மாத்திரமன்றி குடாநாட்டில் காணப்படும் வீதியோர கால்வாய்கள் பல இருந்த இடம் தெரியாது தூர்ந்து போயுள்ளதையும் காண முடிகின்றது. இதனால், மழைக் காலங்களில் வெள்ளம் வழிந்தோட முடியாத நிலைமை உருவாவதுடன், தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ளம் சூழ்ந்து கொள்ளவும் செய்கின்றது.

இவை அனைத்துக்கும் மேலாக வட பகுதி மக்கள் விவசாயச் செய்கையையே முற்று முழுதாக நம்பியுள்ளனர். எனவே, மழை காரணமாக விவசாயச் செய்கை பாதிக்கப்படுமானால் அது பாரிய நஷ்டத்தை ஏற்படுத்துவதாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஏலவே, பெய்த மழை காரணமாக வெங்காயச் செய்கை, மரக்கறிச் செய்கை என்பன வெகுவாக பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அதேபோன்று வாழைப்பழம் முன்னர் ஒரு போதும் இல்லாதவாறு வீழ்ச்சியடைந்திருப்பதாகவும் தற்பொழுது வாழைப்பழம் கிலோ 20 ரூபாவாக விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், வெங்காயத்தின் விலை கிலோ 180 ரூபா முதல் 200 ரூபா வரை அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இருந்தபோதிலும், பருவ மழை ஆரம்பமானதைத் தொடர்ந்து வெங்காய உற்பத்தியில் ஈடுபட்ட விவசாயிகள் பலர் மாற்றுப் பயிர்ச் செய்கையில் ஈடுப்படுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மழை காரணமாக, வெங்காயச் செய்கை பாதிக்கப்படுவதால் வெங்காயத்துக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அத்துடன் எதிர்காலத்தில் மேலும் தட்டுப்பாடு ஏற்படக்கூடுமெனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த காலங்களில் நிலவிய நெருக்கடி நிலை காரணமாக பயிர்ச்செய்கையைக் கைவிட்டிருந்த விவசாயிகள் பலரும் தற்பொழுது ஆர்வமாக விவசாயச் செய்கையில் ஈடுபட்டிருக்கும் அதேவேளை இயற்கையின் தாக்கங்களுக்கும் அவர்கள் முகம் கொடுக்க வேண்டிய இக்கட்டானதோர் நிலைமை ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் விவசாயிகள் பலர் பயிர் அழிவுகள் காரணமாக பாரிய நஷ்டங்களுக்கு தள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, வட பகுதி விவசாயிகளின் நலன் கருதி தொடர்ந்தும் அவர்கள் விவசாயச் செய்கையில் ஆர்வத்துடன் ஈடுபடுவதை உறுதி செய்யும் வகையிலும் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பயிர் அழிவுகளுக்கு நஷ்டஈடு வழங்கவும் விவசாயச் செய்கையை ஊக்குவிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவை அனைத்துக்கும் மேலாக தாழ்ந்த நிலப் பகுதிகளிலும், வீதிகளிலும் வெள்ள நீர் தேங்காதிருக்க வாய்க்கால்களை புனரமைப்பதும், வீதிகளை செப்பனிடுவதும் அவசியமாகும். இவ்வாறு, மழை காலங்களில் வீதிகளில் நீர் நிறைந்து காணப்படுவதும் வாய்க்கால்களில் நீர் அடைப்பு ஏற்படுவதுமே வெள்ள நீர் பெருமளவு தாழ்ந்த பிரதேசங்களை நோக்கிப் பாய்வதற்கும் பயிர் அழிவுகளை ஏற்படுத்துவதற்கும் அடிப்படைக் காரணமாகும்.

வட பகுதியைப் பொறுத்தமட்டில் கடந்த பல தசாப்த காலமாக திட்டமிட்ட ரீதியில் அபிவிருத்திகள் எதுவும் மேற்கொள்ளப்படாததன் காரணமாக உட்கட்டமைப்பு மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. முதலில் அவற்றை சீர்திருத்த வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பது சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் கடப்பாடாகும்.

பொதுவாக, வங்கிகளை நிறுவுவதிலும் பாரிய வர்த்தக ரீதியான கட்டிடங்களை அமைப்பதிலும் ஆர்வம் காட்டப்படுகின்றதே தவிர மக்களின் அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்யக்கூடிய திட்டங்கள் போதுமானதாக இல்லாதிருப்பது மிகுந்த குறைபாடாகவே இருந்து வருகின்றது. எனவே, இதனைக் கருத்திற் கொண்டு யாழ். மாவட்ட உட்கட்டுமானப் பணிகளை திட்டமிட்ட ரீதியில் முன்னெடுக்க சாத்திய மான நடவடிக்கைகள் அவசியமாகும். அவ்வாறு, செய்யும் பட்சத்தில் மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு உரிய முறையில் தீர்வு காண முடியும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

# யாழ்ப்பாண வரலாறும் அதன் மேன்மையும்

யாழ்ப்பாணம் உலக வரைப்படத்தில் கடுகளவாகத் தோன்றினாலும், அதன் வரலாறு மாபெரும் தேசங்களோடு ஒப்பிடத்தக்கது. யாழ்ப்பாணம் எனும் பெயரை யாழ் வல்ல ஒரு பாணனுக்குப் பரிசாகக் கொடுக்கப்பட்ட காரணத்தினாலே யாழ்ப்பாணம் என்று பெயர்பெற்றது.

மணற்றி என்பது அதன் பூர்வீக நாமம் அது பின்னாளில் 'மணற்றிடல்' எனவும் வழங்கிற்று. இம் மணற்றி எனும் பெயர் இவையனார் அகப்பொருள் உதாரணச் செய்யுட்களில் வருகின்றது. மேலும் அதன் வடக்கும், கிழக்கும் வங்காளைக்குடாக்கடலும், தெங்குப்பூ நகரிக்கடல், பண்ணைக்கடல்களும்ராமேங்குக்கோடி குடாக்கடலும் எல்லையாக அமைந்ததென்பர்.

அஃது இலங்கையில் வடபாகத்தேயுள்ள ஒரு துவீபகற்பம், அதன் அயலிலே காரைநகர், வேலணை, புங்குடித்தீவு, அனலைத்தீவு, நயினாத்தீவு, நெடுந்தீவு, முதலியன தீவுகளும் உள்ளன.

வங்காளைக்குடாக்கடல் இடைவிடாது யாழ்ப்பாணத்தின் வடகரையைத் தாக்கிக் கொண்டிருந்தமையால் அக்கரை உயர்ந்து எதிர்தாக்கிக் கொண்டிருக்கின்றது. முன்னொரு காலத்தில் யாழ்ப்பாணத்தின் வடகரை முழுதும் மலைத்தொடராயிருந்து கடலால் அழிந்து போக எஞ்சியுள்ள அதன் அடிவாரமே இப்போது கீரிமலை எனப்படுகின்றது.

### காரணப் பெயர்பெற்ற இடங்கள்

கீரிமலை அருவியில் ஸ்நானம் செய்த ஒரு முனிவர் கீரிமுகநோய் நீக்கப்பெற்றமையால் இவ்விடம் கீரிமலை எனப்பட்டது. இந்த அருவிகளிலே ஸ்நானஞ் செய்வோர் அநேக நோய்கள் தீரப்பெற்று திடகாத்திரமாக இருக்கின்றனர். மேலும் அக்காலத்தில் சோழ அரசன் புத்திரியாகிய மாருதப் புரவீக வல்லி தனக்குள்ள குதிரை முகமென்னும் நோயினாலே வருந்தும் காலத்தில் கீரிமலையிலேயேயுள்ள சிற்றாற்றில் ஸ்நானம் செய்து அந்நோய் நீங்கப் பெற்றாள். மேலும் மகாவிட்டன என்ற தளபதி ஒருவன் கீரிமலைக்கு அருகேயுள்ள இடத்தில் வசித்தமையால் அது மாவிட்டபுரமாக வந்தது. சோழியர் வசித்தவிடம் கோழிபுரமெனப்பட்டது. அது சுழிபுரமென மருவி பின்நாளில் வழங்கப்பட்டது. கந்தசுவாமியின் பொருட்டு விடப்பட்ட இடம் கந்தரோடையெனப்பட்டது.

மேலும் இலங்கை 400 ஆண்டுகளுக்கு மேலாக போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயோர் ஆகியோரின் ஆதிக்கத்தில் இருந்தது. போர்த்துக்கேயர் இலங்கையை ஆண்டபோது அநேக இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டு கிறிஸ்தவ ஆலயங்களாக மாற்றப்பட்டன. இதன்காரணமாக யாழ்ப்பாணத்திலும் அநேக இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டன.

### யாழ்ப்பாணத்தின் தலைநகர் நல்லூர்

அத்துடன் ஒரு காலத்தில் நல்லூர் யாழ்ப்பாணத்தின் தலைநகராக விளங்கியது. கந்தரோடை தலைநகராக இருந்து அதன் பின்னர் நல்லூர் யாழ்ப்பாணத்தின் தலைநகராக விளங்கியபோது யாழ்ப்பாணம் பொருளாதாரத்தாலும்,சமய, சமூக, அரசியல் யாவற்றிலும் மிகவும் சிறப்புற்று விளங்கியது. எப்படி நல்லூர் என்று பெயர் உண்டாகியது என்பதை யாழ்ப்பாண மாலை நன்கு நமக்கு அறியத்தருகிறது. பாண்டி மலுவன் என்று ஒருவரின் வேண்டுகோளுக்கு இணங்கி சிங்கை ஆரியன் அநேக சமயக்குருக்களோடும், ஆலோசனை வழங்குவோரோடும் யாழ்ப்பாணம் வந்து அரசாட்சி செய்து கொண்டு வந்தான். சிங்கை ஆரியன் என்பவன் பெரிய நகரம் ஒன்றைக்கட்டுவித்து அதற்கு நல்லூர் என்ற நாமத்தைச் சூட்டினான். இவர் நல்லூர் நகரத்தில் இருந்து ஆட்சி செய்த போது மிக உயர்ந்த கட்டிடங்களையும், யானை, குதிரை ஆகியவற்றை வைத்திருந்ததோடு யமுனா நதியிலிருந்து தண்ணீரையும் வரவழைத்து யாழ்ப்பாண இராச்சியத்தை நல்லமுறையில் ஆண்டு வந்தான். சிங்கை ஆரியன் குலங்கை என்று நாமத்தையுடையவனாக விளங்கியதோடு யாழ்ப்பாணத்தின் முதல் சக்கரவர்த்தியாகவும் விளங்கினான். குலங்கை என்ற அரசன் 1210 ஆம் ஆண்டிலிருந்து 1256 ஆம் ஆண்டுவரை அரசாட்சி செய்தான்.

அதன் பின்னர் குலசேகர சிங்கை என்பவன் அரசு புரிந்தான். நல்லூரைச் சுற்றி அநேக இந்து ஆலயங்களும் கட்டப்பட்டிருந்தன. வீரமகாகாளி அம்மன், தையல் நாயகி அம்பாள் கோவில், சாலை விநாயகர் கோவில், கைலாயபிள்ளையார் போன்ற சிங்கை ஆரியன் காலத்தில் கட்டப்பட்டன. மேலும் பரராஜசேகரம், சகராஜசேகர மன்னர்கள் இவ்வாலயங்களை நன்கு ஆகமனமுறைப்படி பரிபாலித்து வந்தனர். மேலும் சிங்கை ஆரிய மன்னனின் அமைச்சர் புவநேகபாகு என்பவரால் கந்த சுவாமி கோவில் வெளித்தூண்கள் அமைக்கப்பட்டன. இதன் பின்னர் கோட்டையை ஆண்ட சாப்புமல் என்ற அரசன் 1450 ஆம் ஆண்டு யாழ்ப்பாண

கலாபூஷணம்

**செல்லத்தம்பி மாணிக்கவாசகர்**

இராச்சியத்திற்குள் புகுந்து யாழ்ப்பாணத்தை 1467 ஆம் ஆண்டுவரை ஆண்டுவந்தான். இவன் தன்னுடைய பெயரை சங்க போதி புகநேகுபாகு என்று மாற்றி யாழ்ப்பாணத்தை ஆண்டு வந்தான். இவன் நல்லூரில் அநேக திருத்தங்களை செய்தான். நல்லூர் கந்த சுவாமி கோவிலுக்கு பலவழிகளில் உதவி புரிந்தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தக ரீதியிலான நலனை மட்டும் பார்க்காமல் மியான்மரில் ஜனநாயகம் தழைக்க உதவுங்கள்

## பொறுப்பை தட்டிக்கழிக்காமல் விரைந்து செயலாற்றுமாறு இந்தியாவிடம் சூகி வேண்டுகோள்

புதுடில்லி,

மியான்மரில் ஜனநாயகம் தழைக்க இந்தியா முனைப்புடன் செயலாற்ற வேண்டும் என்று மியான்மர் விடுதலைப் போராட்ட தலைவர் ஆங் சான் சூகி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மிகப் பெரிய ஜனநாயக நாடுகளில் இந்தியாவும் ஒன்று. வர்த்தக ரீதியிலான நலன்களை மட்டுமே பார்க்காமல், மியான்மரில் ஜனநாயகம் தழைக்க இந்தியாவுக்குள்ள பொறுப்பைத் தட்டிக்கழிக்கக் கூடாது. இப்போது உள்ளதைக் காட்டிலும் கூடுதலாக செயலாற்ற வேண்டும் என்றும் அவர் கூறினார்.

65 வயதாகும் ஆங் சான் சூகி, 7 ஆண்டு சிறைத் தண்டனைக்குப் பிறகு கடந்த நவம்பர் 13 ஆம் திகதி தான் விடுவிக்கப்பட்டார். 1980களில் இவர் இந்தியாவில் வசித்துள்ளார்.

பி.டி.ஐ. செய்தி நிறுவனத்துக்கு யாங்கோனிலிருந்து தொலைபேசி முலம் அளித்த பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

இந்தியாவிடமிருந்து மியான்மார் மக்கள் அதிகம் எதிர்பார்க்கின்றனர். மியான்மரில் ஜனநாயகம் திரும்ப உத்தரவிடவேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை. ஆனால் வர்த்தக நோக்கிலான உறவுக்கு முன்னுரிமை அளிக்கக் கூடாது.



மியான்மர் இராணுவ ஆட்சியாளர்களுடன் இந்தியா வர்த்தக உறவை வலுப்படுத்திக் கொள்வதை தவறாகக் கருத முடியாது. ஆனால் வர்த்தக நோக்கம் மட்டுமே இந்தியாவுக்குப் பிரதானமாக இருக்கக் கூடாது. தங்கள் நாட்டில் நிலவும் ஜனநாயகம், மியான்மரிலும் தழைக்க வேண்டும் என்று நினைத்து அதற்கேற்ப கூடுதலாக செயலாற்ற வேண்டும். அந்த வகையில் இந்தியா மேலும் சிறப்பாக செயலாற்ற முடியும் என்றே நாங்கள் கருதுகிறோம். மியான்மருடனான இந்திய வெளியுறவுக் கொள்கை முற்றிலும் வர்த்தகம் சார்ந்ததாக உள்ளது. இதற்கு முன்னர் இந்தியாவின் அணுகுமுறை மியான்மரில் ஜனநாயகம் மலர வேண்டும் என்பதாக இருந்தது. அது இப்போது வர்த்தகம் சார்ந்ததாக மாறியுள்ளது. வர்த்தகத்துக்கு அப்பால் மியான்மர் மக்களின் நிலைமையை இந்தியா பார்க்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

ஆங் சான் சூகிக்கு ஆதரவு தெரிவித்து வந்த இந்தியா, 1990-களுக்குப் பிறகு மியான்மர் இராணுவ ஆட்சியாளர்களின் பக்கம் சாய்ந்துவிட்டது. பாதுகாப்பு, எரிசக்தி உள்ளிட்ட துறைகளில் மியான்மருடன் இணைந்து செயற்படுவதற்கான ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருகிறது. அங்கு நடைபெறும் மனித உரிமை மீறலை இந்தியா கண்டு கொள்ளவேயில்லை. மியான்மரில் நீர்மின் திட்டங்களை நிறைவேற்றவும், எண்ணெய், எரிவாயு வளங்களைக் கண்டறியவும் தீவிரம் காட்டி வருகிறது. மேலும் மியான்மரில் சீனா அதிக அளவு முதலீடு செய்துவிடுமோ என்ற அச்சம் காரணமாக, அங்கு நடைபெறும் மனித உரிமை மீறல் உள்ளிட்ட இராணுவ ஆட்சியாளர்களின் அராஜகத்தைக் கண்டு கொள்ளவில்லை என்ற கருத்து பரவலாக எழுந்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் மியான்மர் இராணுவ ஆட்சியாளர் தான் ஷ்வே இந்தியாவுக்கு வந்தபோது 6 கோடி டொலர் செலவில் மியான்மர்-மிசோரம் இடையே சாலை வழி அமைக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. ஒரு கோடி டொலர் மதிப்பிலான வேளாண் கருவிகளை மியான்மர் வாங்கியுள்ளது. கடந்த நவம்பரில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இந்தியா வந்திருந்தபோது மியான்மரில் மனித உரிமை மீறல் நடைபெறுவதை இந்தியா கண்டிக்கவில்லை என்று குறிப்பிட்டார். ஆனால் அரசியல் நிர்ப்பந்தம் காரணமாக இத்தகைய அணுகுமுறையை மேற்கொண்டதாக இந்தியா குறிப்பிட்டது.

கடந்த 20 ஆண்டுகளில் மியான்மரில் முதல்முறையாக நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பிறகு ஆங் சான் சூகி அளித்த முதலாவது பேட்டி இதுவாகும். இந்தத் தேர்தலில் இப்போதைய இராணுவ தலைவர் தாங் ஷ்வே போட்டியிடவில்லை. இதையடுத்து ஜனநாயக கட்சிகளுடன் ஆட்சியமைப்பது தொடர்பாக இராணுவ ஆட்சியாளர் ஜூன்டா, ஆங் சான் சூகியுடன் பேச்சு நடத்தவுள்ளார்.

## ஆண் குழந்தை வேண்டி பதேபூர்சிக்ரியில் பிரார்த்தனை செய்த சார்க்கோஸி - கர்லா தம்பதி

பதேபூர் சிக்ரி:

இந்தியாவுக்கு வருகை தந்த பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கோலஸ் சார்க்கோஸி மற்றும் அவர் மனைவி கர்லா ப்ரூனி தம்பதி தங்களுக்கொரு ஆண் குழந்தை பிறக்க வேண்டி பதேபூர் சிக்ரியில் பிரார்த்தனை நடத்தினார்.



55 வயதாகும் சார்க்கோஸி, 43 வயதான மனைவி கர்லா ப்ரூனியுடன் நான்கு நாள் பயணமாக இந்தியா வந்தார். சார்க்கோஸிக்கு தனது முந்தைய இரு திருமணங்களின் மூலம் 3 மகன்களும், கர்லாவுக்கு தனது முதல் கணவர் மூலம் ஒரு மகனும் உள்ளனர். இருப்பினும் சார்க்கோஸிக்கும், கர்லாவுக்கும் இதுவரை குழந்தை எதுவும் பிறக்கவில்லை.

இந்த நிலையில் இந்தியா வந்த சார்க்கோஸியும், கர்லாவும் ஆண் குழந்தை பிறக்கவேண்டி பதேபூர்சிக்ரியில் உள்ள தர்காவில் பிரார்த்தனை செய்துள்ளனர்.

ஆக்ராவில் உள்ள தாஜ்மஹாலைப் பார்க்கவந்த இருவரும் அருகில் உள்ள பதேபூர் சிக்ரிக்கும் சென்றனர். அங்குள்ள தர்கா, அக்பரால் 1570ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும். மிகப் பழைமையான இந்த தர்காவுக்கு ஒரு பின்னணிக் கதை உண்டு.

நீண்ட காலமாக குழந்தைப் பேறு இல்லாமல் வருத்தத்தில் இருந்து வந்த அக்பர், பதேபூர்சிக்ரியில் வாழ்ந்த மகான் சலீம் சிஸ்தியின் ஆசிர்வாதத்தைப் பெற்றார். இதையடுத்து, அவருக்கு அடுத்தடுத்து 3 மகன்கள் பிறந்தனர். இதனால் மகிழ்ச்சி அடைந்த அக்பர், இந்த தர்காவை கட்டிக்கொடுத்ததாக கூறப்படுகிறது.

இதனால், இந்த தர்காவுக்கு வந்து வேண்டிக் கொண்டால் ஆண் குழந்தை பிறக்கும் என்பது ஐதீகம். இதையடுத்தே சார்க்கோஸியும், கர்லாவும் அங்கு சென்றனர்.

மலர்ப் போர்வை போர்த்தி தர்காவில் தங்களுக்கு ஆண் குழந்தை பிறக்க வேண்டும் என்று இருவரும் பிரார்த்தித்துக் கொண்டனர். கர்லா ப்ரூனி மந்திரித்த கயிற்றைக் கட்டிக்கொண்டார்.

பிரார்த்தனை குறித்து கர்லா கூறுகையில், எனக்கு ஏற்கனவே மகன் இருந்தாலும், இன்னொரு மகன் வேண்டும் என விரும்புகிறேன். அதையே இங்கு வேண்டிக்கொண்டேன் என்றார்.

## காங்கிரஸை அழிப்பேன் ஜெகன்மோகன் ஆவேசம்



ஆந்திராவில் காங்கிரஸ் கட்சியை அடியோடு அழிப்பேன். இதில் எந்த சந்தேகமும் இல்லை என ஜெகன்மோகன் ரெட்டி ஆவேசமாகக் கூறியுள்ளார்.

காங்கிரஸ் மேலிடத்துடன் ஏற்பட்ட மோதல் காரணமாக, ஆந்திர முன்னாள் முதல்வர் ராஜசேகர ரெட்டியின் மகன் ஜெகன் மோகன் ரெட்டி, அக்கட்சியில் இருந்து வெளியேறினார். மேலும், தனது எம்.பி. பதவியையும் ராஜினாமா செய்தார்.

இந்நிலையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், என் தந்தை இறந்த போது, ஏராளமான கட்சித் தொண்டர்கள் தீக்குளித்து இறந்தனர். அவர்களை சந்திப்பதற்காக ஆறுதல் யாத்திரை ஆரம்பித்தேன். இதற்கு கட்சி மேலிடம் எதிர்ப்புத் தெரிவித்தது. இருந்தாலும், யாத்திரையின் நோக்கத்தை வலியுறுத்துவதற்காக டில்லி சென்றேன்.

சோனியா உள்ளிட்ட தலைவர்களை சந்திக்க அனுமதி கேட்டேன். ஆனால், கிடைக்கவில்லை. இதையடுத்து, ஆந்திராவுக்கு திரும்பிய நான், யாத்திரையைத் தொடர்ந்து நடத்தினேன். இந்த விவகாரத்தில் தான், கட்சி மேலிடத்துக்கும் எனக்கும் இடையே கருத்துவேறுபாடு அதிகரித்தது. தொடர்ந்து என்னை அவமானப்படுத்தும் நிகழ்வுகள் நடந்தேறின. என்னை கட்சியில் இருந்து வெளியேற்ற, நெருக்கடி கொடுத்தனர். இறுதியாக, என் குடும்பத்தினரையும் பிரிக்க முயற்சித்தனர். இதனால் நானே கட்சியில் இருந்து வெளியேறி விட்டேன்.என் பலம் என்ன என்பதை நிரூபித்துக் காட்டுவேன்.

இன்னும் 45 நாட்களுக்குள் புதிய கட்சியை ஆரம்பிப்பேன். அந்தக் கட்சி, ஆந்திர மக்களை பெருமைப்படுத்தும் கட்சியாக இருக்கும். ஆந்திராவில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் என் கட்சி கொடி பறக்கும். இன்னும் மூன்று ஆண்டுக்குள் ஆந்திராவில் காங்கிரஸ் கட்சியை அடியோடு அழித்துக் காட்டுவேன். இதில் எந்த சந்தேகமும் இல்லை என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்டத்தில் 35 மாணவர்களுக்கு 3 'ஏ' சித்தி!

## உயிரியல் பிரிவில் ஹாட்லி கல்லூரி முதலிடம்

(அலுவலக நிருபர்)

இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று முன்தினம் நாடு முழுவதும் இணையத்தளத்தில் வெளியாகின.

இதனடிப்படையில் யாழ். மாவட்டத்தில் 35 பேர் '3 ஏ' சித்தி பெற்று முன்னிலையில் உள்ளனர். இதில் யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களும் வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவனும் முன்னணிப்பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.

கணித பிரிவில் வேம்படி மகளிர் கல்லூரி மாணவியான சுமங்கலி சிவகுமாரன் '3 ஏ' சித்திபெற்று மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தையும் உயிரியற் பிரிவில் ஹாட்லிக் கல்லூரி மாணவன் பாலகோபாலன் கோகுலன் 3 ஏ சித்தி பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தையும் தேசிய மட்டத்தில் 3 ஆம் இடத்தையும் வர்த்தகப் பிரிவில் ஹாட்லிக் கல்லூரி மாணவன் புருஷோத்தமக் குருக்கள் ராஜாராம் '3 ஏ' சித்தி பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தையும் கலைப்பிரிவில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய மாணவன் குணசிங்கம் தர்மேந்திரன் 3 ஏ சித்தி பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

கணித பிரிவில் 3 ஏ சித்தி பெற்றுள்ள யாழ். இந்துக் கல்லூரி மாணவர் விபரம் வருமாறு:

லோ. கோபிநாத் (மாவட்ட மட்டத்தில் 8 ஆம் இடம்), அ. சசிந்தன், இ. ஸ்ரீசியாமளன், மு. பிருந்தாபன், ஜே. திரோஜன், சி.கௌதமன், பு. இரோஷன், ப. திருவரங்கன், வி. விபுலன். ஆகியோரும் வேம்படி மகளிர் கல்லூரியில் அனிதா கருணாகரனும் கொக்குவில் இந்துக் கல்லூரியில்- சின்னக்கோன் சிந்துஜனும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் சிறிகரன் யசோதரனும் (மாவட்ட மட்டத்தில் ஐந்தாமிடம்) உயிரியல் பிரிவில் 3 ஏ சித்தி பெற்றோர் - யாழ். இந்துக் கல்லூரியில் சு. தினேஷாந் (மாவட்ட மட்டத்தில் 4ஆம் இடம்), கு. நிரூஜன் (மாவட்ட மட்டத்தில் 2 ஆம் இடம்) சி. யதுகுலனும் (மாவட்ட மட்டத்தில் 13 ஆம் இடம்) வேம்படி மகளிர் கல்லூரியில் பகீரதி அருணகிரிநாதன் (மாவட்ட மட்டத்தில் 9 ஆம் இடம்), ரேகா பாலசுப்பிரமணியம் (மாவட்ட மட்டத்தில் 10 ஆம் இடம்), தாரணி சுந்தரம் (மாவட்ட மட்டத்தில் 14 ஆம் இடம்), சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் திருமுருகதாஸ் விசாகன் (மாவட்ட மட்டத்தில் 6 ஆம் இடம்) ஆகியோர் சித்தி பெற்றுள்ளனர்.

வர்த்தப் பிரிவில் '3 ஏ' சித்தி பெற்றோர் - வேம்படி மகளிர் கல்லூரியில் லக்லரெலா மரியதாஸ் (மாவட்ட மட்டத்தில் 3 ஆம் இடம்), நிவேதான கதிர்காமத்தம்பி (மாவட்டத்தில் 4 ஆம் இடம்), கொக்குவில் இந்துக் கல்லூரியில் சண்முகராஜா கிரிதரன் (மாவட்ட மட்டத்தில் 2 ஆம்இடம்), சுஜாதா குணபாலசிங்கம் (மாவட்ட மட்டத்தில் 5 ஆம் இடம்), மகேந்திரலிங்கம் சஜிவன் , சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தம்பையா நிரோஜினி (மாவட்ட மட்டத்தில் 9 ஆம் இடம்), திருச்செல்வன் ஜெகன் .

கலைப் பிரிவில் '3 ஏ' சித்தி பெற்றவர் - சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் யோகேஸ்வர சர்மா மயூரி (மாவட்ட மட்டத்தில் 4 ஆம் இடம்) நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் வர்த்தகப் பிரிவில் அம்பிகாநிதி கோகுலன் '3ஏ', சிவகணேசமூர்த்தி பவிதா 3ஏ யையும் கலைப்பிரிவில் சூசைதாசன் சாரங்கவாணி 2ஏபி, தெய்வேந்திரன் முகுந்தன் 2ஏபியையும் பெற்றுள்ளனர்.

வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் கணிதப் பிரிவில் திருவாசகர் காஞ்சனா '2ஏபி', விமலச்சந்திரன் யசோதா '2ஏபி', திருக்கேதீஸ்வரன் லச்சுவினி '2ஏபி', சச்சிதானந்தன் சுமணா '2ஏபி', பாலகிருஸ்ணன் நிர்விகலா 2ஏபி யையும் உயிரியல் பிரிவில் பாலசுப்பிரமணியம் ரேணுகா '2ஏபி', அருந்தவவிநாயகமூர்த்தி சுபாங்கி '2ஏபி', சரா புவனேஸ்வரன் துவாரகா '2ஏபி', ஞானரட்ணம் பவித்திரா '2ஏபி', கதிர்காமலிங்கம் சுவர்ணாங்கடி '2ஏபி', ருக்மணிகாந்தன் கம்சத்வனி '2ஏபி' யையும் வர்த்தகப் பிரிவில் அருட்சோதி கஜாந்தினி '2ஏபி', அருமைத்துரை ஜான்சிகா '2ஏபி', வெற்றிவேல் சிவனன் தயாளினி 2ஏபி, சிவகுமார் மதுஜா '2ஏபி', திருச்செல்வம் நிஷானி '2ஏபி' யையும், கலைப் பிரிவில் வேலாயுதம் சதானந்தி '2ஏபி', சிற்றம்பலம் எக்ஸ்ஷனா '2ஏபி' யையும் பெற்றுள்ளனர்.

கொக்குவில் இந்துக்கல்லூரியில் கணிதப் பிரிவில் பரமசோதி விஸ்ணுகாந்தன் '2ஏபி, குமாரசுவாமி அபிராம் '2ஏபி' யையும், விஞ்ஞானப் பிரிவில் சிவகுருநாதன் கஜானன் '2ஏபி' யையும், வர்த்தகப் பிரிவில் நித்தியானந்தம் டிலக்ஷி '2ஏபி', சிவஞானசுந்தரம் நிமலதீபன் '2ஏபி' யையும், கலைப் பிரிவில் இராஜசிங்கம் பிரபாஜினி '2ஏபி', பாலசிங்கம் ரெனீசன்2ஏபி யையும் பெற்றுள்ளனர்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் கணிதப் பிரிவில் இராஜரத்தினம் பிரதீசன் '2ஏபி', ஜெயகணேசன் ஜெயதர்சினி '2ஏபி' யையும், உயிரியல் பிரிவில் இராஜலிங்கம் மாதங்கி '2ஏபி' யையும், கலைப் பிரிவில் நித்தியானந்தன் கீர்த்தனா '2ஏபி', கிருஷ்ணசாமி சுகிர்தனா '2ஏபி', மகாராசா தனுசாலினி '2ஏபி', குணராசா ஜெயசாமினி '2ஏபி', ஜெயக்குமார் கயந்தினி '2ஏபி' யையும் பெற்றுள்ளனர்.

---

## வெள்ளத்தால் (தொடர்ச்சி)

பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஜே.வி.பி.யின். தலைமை அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை விசேட செய்தியாளர் மாநாடு ஒன்று நடைபெற்ற போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. இங்கு உரையாற்றிய ஜே.வி.பி. யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கூறுகையில்:-

நாடு முழுவதும் கடும் மழை பெய்கின்றமையினால் வெள்ளம் பெருக்கெடுத்து பொதுமக்கள் பலர் பலியாகியும் ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்தும் உள்ளனர். மக்கள் படும் கஷ்டங்களை கருத்தில் கொள்ளாமல் அரசாங்கம் தேவையற்ற பிரச்சினைகளைப் பேசிவருகின்றது. வடக்கு -கிழக்கு வாழ் மக்கள் ஏற்கனவே தமது சொந்தக் குடியிருப்புக்களை யுத்தத்தினால் இழந்து முகாம்களில் வாழ்கின்றனர்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் தொடர்ச்சியான மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு மீண்டும் முகாம்களில் வாழ்கின்ற நிலைமைக்கு அவர்கள் உள்ளாகியுள்ளனர். மன்னார் பிரதேசத்தில் இதுவரையில் 38 ஆயிரத்திற்கு அதிகமானோர் இடம் பெயர்ந்துள்ளனர். ஆனால், அரசாங்கம் இவ்வாறு இயற்கை அனர்த்தங்களுக்காக நிதி ஒதுக்காது தமது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சொகுசு வாகனங்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக 140 கோடி ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.

அடுத்த ஆண்டு இடர்முகாமைத்துவ அமைச்சுக்கு 102 கோடி ரூபாவையே ஒதுக்கியும் உள்ளது.

எனவே, இந்த அரசாங்கம் மக்கள் நலனை கருத்தில்கொள்ளாது தனது சுய சுகபோக வாழ்க்கையை பாதுகாத்துக் கொள்ளும் நோக்கிலேயே செயற்படுகின்றது. தேர்தல் மேடைகளில் மக்கள் நலன் தொடர்பாக பேசி வாக்குகளுக்காக மக்களை அரசாங்கம் சீரழித்துவிட்டது.

---

## தமிழ் (தொடர்ச்சி)

வேண்டும் என்ற இரு கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் போராட்டத்தில் இவர்கள் ஈடுபடுகின்றனர்.

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலை, வெலிக்கடை சிறைச்சாலை, வெலிக்கடை பெண்கள் சிறைச்சாலை, புதிய மகசீன் சிறைச்சாலை, அநுராதபுரம், வவுனியா, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய சிறைச்சாலைகளில உள்ள 800 அரசியல் கைதிகளே இந்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக முன்னாள் எம்.பி.யும் தமிழ்த் தேசியய விடுதலைக் கூட்டமைப்பின் செயலாளருமான எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்த தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை துரிதப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். இந்த விடயத்தில் நீதியமைச்சும், அரசாங்கமும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, சர்வதேச மனித உரிமை தினத்தை முன்னிட்டு காணாமல் போனவர்களை மீட்டுத்தருமாறு கோரி கொழும்பு-கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாகவும் இன்று ஆர்ப்பாட்டம் இடம் பெறவுள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தை காணாமல் போனோரைக் கண்டறிவதற்கான குழு ஏற்பாடு செய்துள்ளது.

---

## பிரிட்டன் (தொடர்ச்சி)

பொலிஸாரும் தான் விளக்கமளிக்க வேண்டும் என்று அமைச்சரவை பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

சர்வதேச மட்டத்தில் பயங்கரவாதத்தை ஒழித்ததாகக் கூறும் நாட்டில் இவ்வாறு அரச தலைவர் ஒருவருக்கு தடையேற்படுத்தும் வகையில் செயற்பட்டமையே எமக்குரிய பிரச்சினையாகும். பிரிட்டனுக்கு இலங்கையிலிருந்து நாட்டாமி ஒருவர் செல்லவில்லை; அரச தலைவரே சென்றார். எம்மை பொறுத்தவரை இது திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட செயல் என்றே சிந்திக்கின்றோம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் அங்கு மேலும் கூறியதாவது

ஒக்ஸ்போர்ட் யூனியன் என்பது உலகத் தலைவர்கள் பேசுகின்ற ஒரு இடமாக பெயர்பெற்றுள்ளது. எனினும், ஐந்து நட்சத்திர ஜனநாயகம் குறித்து பேசும் ஒரு நாட்டில் முக்கியமாக புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்ட நாட்டில் இவ்வாறு ஜனாதிபதியின் உரை ரத்துச்செய்யப்பட்டமையே எங்களுக்கு குழப்பமான விடயமாகவுள்ளது.

சவாலை ஏற்றே ஜனாதிபதி அங்கு விஜயம் செய்தார். ஆனால், இறுதிநேரத்தில் ஒக்ஸ்போர்ட் யூனியன் ஜனாதிபதியின் உரையை ரத்துச் செய்தது. ஆனால் அதற்கான அழுத்தம் என்னவென்று எங்களுக்குத் தெரியவில்லை. எனவே, இது திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட விடயம் என்றே நாங்கள் கருதுகின்றோம். அதாவது உங்களை ஒருவர் அவரின் வீட்டுக்கு அழைக்கின்றார். நீங்கள் அந்த அழைப்பை ஏற்று அங்கு செல்லும்போது அவர் வீட்டின் கதவை மூடிக்கொண்டால் யாருக்கு அவமானம்? அழைத்தவருக்குத் தான் அவமானம்!

ஐந்து நட்சத்திர ஜனநாயகம் பேசப்படும் ஒரு நாட்டில் தனது நாட்டில் தடை செய்யப்பட்டுள்ள புலிகள் அமைப்பின் கொடியினை ஏந்தி வந்து சுமார் 4000 பேரை தடுக்கமுடியாமல் போய்விட்டதே என்பது தொடர்பிலேயே நாங்கள் சிந்திக்கின்றோம். சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதாகக் கூறும் நாட்டில் இவ்வாறு நடைபெற்றுள்ளது என்பதனை நாம் மனதில் கொள்ளவேண்டும்.

எனவே, இந்த இடத்தில் விளக்கமளிப்பு என்று ஒரு விடயம் வந்தால் நாங்கள் விளக்கமளிக்க வேண்டிய அவசியம் இல்லை. மாறாக, பிரிட்டனும் ஒக்ஸ்போர்ட் யூனியனும் அப்பகுதிக்குரிய பொலிஸாரும் தான் விளக்கமளிக்க வேண்டும். ஒக்ஸ்போர்ட் யூனியன் இந்த முடிவை ஒருதலை பட்சமாகவே மேற்கொண்டுள்ளது என்று நாங்கள் குறிப்பிடுகின்றோம். ஜனாதிபதி அங்கு தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொள்ளவில்லை. மாறாக ஒரு நாட்டின் தலைவராகவே சென்றார். எமது நாட்டின் எதிர்கால அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், இலக்குகள் குறித்துப் பேசுவதற்கு சென்றார்.

---

## ஜனாதிபதி (தொடர்ச்சி)

சுமுகமான உறவுக்கும் ஏனைய தமிழ்க் கட்சிகளுடனான உறவுகளுக்கும் எவ்விதமான பாதிப்பும் ஏற்படாது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஏனைய தமிழ்க் கட்சிகளுடனான எதிர்கால பேச்சுவார்த்தைகள் எவ்வாறு அமையும் என்பது தொடர்பில் விபரிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இம்முறை வரவு-செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிப்பது இல்லை என்று தமிழ்த் தேசியத் கூட்டமைப்பு தெரிவித்துள்ள நிலையிலேயே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்துக்கும், தமிழ்த் தேசியத் கூட்டமைப்புக்கும் இடையில் சுமுகமான உறவு ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்திருக்கின்றார்.

இவ்விடயம் குறித்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதி லண்டனில் தங்கியிருந்த வேளையில் புலிகளின் செயற்பாட்டாளர்கள் 250 அல்லது 300 பேர் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர். அது தமிழ் மக்களின் ஆர்ப்பாட்டம் அல்ல. மாறாக, புலிகளது செயற்பாட்டாளர்களின் நடவடிக்கையாகும்.

இந்நிலையில், அவ்வாறான செயற்பாடானது எந்த வகையிலும் ஜனாதிபதிக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் காணப்படுகின்ற நெருங்கிய உறவுக்கு எவ்விதமான பாதிப்பையோ தடையையோ ஏற்படுத்தாது.

மேலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசாங்கத்துக்கு தற்போது சிறந்த சுமுகமான உறவு ஏற்பட்டுள்ளது. அந்த உறவு தொடர்ந்து முன்னெடுக்கப்படும். வடக்கின் அபிவிருத்தி மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசாங்கம் பேச்சுக்களை நடத்த எதிர்பார்க்கின்றது. அண்மையில் கூட சில தமிழ்க் கட்சிகளுடன் ஜனாதிபதி பேச்சுக்களை நடத்தியிருந்தார். அந்த வகையில், லண்டனில் புலிகளின் செயற்பாட்டாளர்கள் மேற்கொண்ட நடவடிக்கை இங்குள்ள நெருங்கிய உறவுகளை எந்த வகையிலும் பாதிக்காது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இப்பண்டிகைக் காலத்தில் வெளிநாட்டிலிருந்து e-Exchange மூலம் பணத்தை பெறுங்கள்.**

## ரூபா 25,000 வீதம் 100 பணப்பரிசில்களை வெல்லுங்கள்.

அனைவருக்கும் பரிசுகள், போனஸ்கள் கிடைக்கும் இப்பண்டிகைக் காலத்தில் வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவினர்கள் கஷ்டப்பட்டு உழைக்கும் பணத்தை தாய்நாட்டில் உள்ள உங்களுக்காக கொமர்ஷல் வங்கியின் ஈ-எக்ஸ்சேஞ்ச் ஊடாக அனுப்பினால் பணத்தை பெறுபவர்கள் ரூபா 25,000 வீதம் 100 பணப் பரிசுகளை வெல்லும் வாய்ப்பை பெறுகிறார்கள். 2010 நவம்பர் 15 முதல் 2011 ஜனவரி 15 வரை பணம் பெறும் அனைவரும் இவ்வெகுமதிக்கு தகுதியுடையவர்களாவர். அதிகளவு தடவைகள் பணம் பெறுபவர்களுக்கு வெற்றி பெறும் வாய்ப்பும் அதிகமாகும். விரையுங்கள்! ரூபா 25,000 தை வெல்லும் 100 அதிர்ஷ்டசாலிகளுள் நீங்களும் ஒருவராகுங்கள்.

உலகம் முழுவதும் பணம் அனுப்ப நம்பிக்கையான, விரைவான சேவை கொமர்ஷல் வங்கியின் e-Exchange.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: 94 115 667 679 அல்லது 94 112 353 576

COMBANK e-Exchange MONEY TRANSFER

COMMERCIAL BANK
பணப் பரிமாற்றச் சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முடிவின்றித் தொடரும் மழையால் முடங்கிப் போயுள்ள யாழ்.குடாநாட்டின் இயல்பு நிலை







கடந்த பல நாட்களாக கொட்டித் தீர்த்த கடும் மழை காரணமாக யாழ். குடா நாட்டு மக்களின் இயல்பு நிலை வெகுவாகப் பாதிப் படைந்துள்ளது.

தொடர்ச்சியாக விடாது பெய்யும் கன மழையால் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. தாழ்நிலப் பிரதேச மக்களின் வாழ்வியல் சூழல்கள் முற்றாகத் தகர்ந் துள்ளன. குடிமனைகளுக்குள் வெள் ளம் புகுந்துள்ளதால் தாழ்நிலப்பிர தேசங்களில் வசிக்கும் பல நூற்றுக் கணக்கான குடும்பங்கள் பாதுகாப் பான இடங்களை நோக்கி நகர்ந் துள்ளன. குறிப்பாக யாழ்.நகரை அண்டியுள்ள யாழ்.மாநகர சபையின் எல்லைக்குள் உள்ளடங்கியுள் ளதுமான பொம்மைவெளி, சூரிய வெளி, காக்கைதீவு, நாவாந்துறை போன்ற பகுதிகளில் வசிக்கும் குடும்பங்கள் அனைத்துமே இடம் பெயர்ந்துள்ளன.

யாழ்.குடாநாட்டின் எல்லாப் பகுதிகளிலுமே பரவலாகக் கனமழை கடந்த சில நாட்களாக கொட்டித் தீர்த்து வருகிறது. இதனால் குளங்கள் மற்றும் நீர் நிலைகள் நிரம்பி வழிகின்றன. கால்வாய்கள் நிரம்பி வெள்ளம் வீதிகளை மேவிப் பாய்கின்றது. கிணறுகள் நிரம்பி தரை மட்டத் தைத் தொட்டு நிற்கின்றன. சில இடங்களில் கிணறுகளில் வெள்ளம் புகுந்துள்ளதாகச் செய் திகள் வருகின்றன.

அது மட்டுமல்லாது குடா நாட்டின் வீதிப்போக்குவரத் தென்பது மிகுந்த சிரமத்திற் குரிய தொன்றாக மாறியுள்ளது.

வீதிகளில் தேங்கி நிற்கும் வெள்ளம் போக்குவரத்திற்குப் பெரும் இடையூறுகளை விளைவிக்கின்றன. வீதிக ளில் காணப்படும் குழிகளுக் குள் இடப்பட்ட தார்க்கல வைகள் பிடிமானம் இழந்து வெளித்தள்ளப்பட்டுள்ள மையினால் பழையபடி வீதி களில் குழிகள் உருவாகி யுள்ளன. குழிகளுக்குள் வெள்ள நீர் தேங்கியுள்ள தால் வாகனங்கள் குழிக ளுக்குள் விழுந்து எழும்ப வேண்டியுள்ளது.

இதனால் வாகனங்களுக்குப் பாதிப்புக் களை ஏற்படுத்துவதுடன் அருகில் செல் வோர்களின் போக்குவரத்திற்கும் இடை யூறை ஏற்படுத்துகின்றது. கனரக வாகனங் கள் குழிக்குள் விழுந்து எழும்புவதால் அரு கில் செல்லும் பொது மக்களின் மீது சேற்று நீர் விசிறி அடிக்கப்படுகின்றது. அத்துடன், வீதி விபத்துச் சம்பவங்களும் அடிக்கடி நிகழ்கின்றன.

இது ஒரு புறமிருக்க வெள்ள நீர் வடிந்து ஓடுவதற்கான சீரான பொறிமுறை இன் மையால் வெள்ளம் தேங்கிநின்று சுகாதா ரச் சீர்கேடுகளுக்கும் வழிவகுக்கின்றது. டெங்கு போன்ற ஆட்கொல்லி நோய் களின் பெருக்கத்திற்கு காரணமான நுளம் புகளின் உற்பத்திக்கும் வடிகால்களாய் அமைகின்றன. அத்துடன், அசுத்த நீர் கிணறுகளுக்குள் கலந்துள்ளமையினால் சுத்தமான குடிநீரைப் பெறுவதில் தடங்கல் நிலை ஏற்பட்டுள்ளது. அசுத்த நீரைப் பருகுவதால் பல்வேறு தொற்று நோய் களுக்கும் வழி ஏற்படுத்தப்படுகின்றது.

அதுமட்டுமன்றி, யாழ்.நகரை அண்டி யுள்ள பல பிரதேசங்களில் கழிவு நீர் ஓடுவ தற்கென அமைக்கப்பட்டுள்ள கால்வாய் களை வெள்ளநீர் மூடியுள்ளதால் கழிவு நீர் வெளியேறுவதில் தடங்கல் நிலை காணப் படுகின்றன.

மேலும் வயல் நிலங்களை வெள்ளம் சூழ்ந்துள்ளமையால் நெற்பயிர்ச் செய்கை பாதிப்படைந்துள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். தாழ்வான பிரதேசங்களிலுள்ள வயல்வெளிகளை வெள்ளம் ஆக்கிரமித்துள்ளது. பயிரை மேவி வெள்ளம் பாய்வதால் நெற்பயிர்கள் நாசமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

பல இலட்சம் ரூபா செலவழித்து பயிர்ச் செய்கையை மேற்கொண்டுள்ள விவசாயி கள் மழை செய்த சதியால் நட்டத்தை எதிர் நோக்கியுள்ளனர். கோப்பாய், இருபாலை, செம்மணி ஆகிய பகுதிகளை அண்டிய வயல்கள் நீர்வேலி, புத்தூர் போன்ற பல்வேறு பகுதிகளிலுள்ள வயல் வெளி கள் வெள்ளக் காடாகக் காட்சியளிக்கின் றன. வயல்களை அண்டிய குளங்கள் மற் றும் கிணறுகள் நிரம்பி வழிகின்றன.

பற்றி எரியும் வாழ்வியல் பிரச்சினைகள் ஒருபுறம் புரட்டிப் போட்டுள்ள அரசியல் சூழ்நிலைகள் ஒருபுறம் வாட்டி வதைக்கும் செலவுகள் மறுபுறம் என தமிழ் மக்களின் வாழ்வியலையே சூறையாடி வரும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் அப்பால் தற்போது மழை வெள்ளப் பிரச்சினையும் புதிதாக உருவெடுத்துள்ளது.

இதனால் விவசாயத்தை நம்பியிருக்கும் குடும்பங்கள் நிர்க்கதி நிலையை அடைந் துள்ளன. அவர்கள் விளைவித்த பயிர்கள் அனைத்துமே நாசமடைந்துள்ளமையால் அவர்கள் சோகமே உருவாகக் காட் சியளிக்கின்றனர். அன்றாடக் குடும்பச் செலவுகளுக்கே ஈடுகட்ட முடியாமல் அல்லாடுகின்றனர். கடந்த சில வாரங் களாகப் பெய்துவரும் அடைமழை காரண மாக இதுவரை 3 ஆயிரத்து 180 குடும்பங் களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 920 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள் ளது. மேலும் வெள்ளத்தால் இடம்பெயர் ந்த 87 குடும்பங்களைச் சேர்ந்த 330 பேர் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள 6 பொது முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள் ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வெள்ளத்தினால் ஆயிரத்து 212 வீடுகள் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது. அத்துடன் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, சண்டிலிப்பாய், தீவகம் ஆகிய பிரதேசங்களில் உள்ள வீதிகளில் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளதாக வும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவே ளை யாழ் குடாநாட்டின் சில இடங்களில் மழை காரணமாக கால்நடைகள் இறந் துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின் றன. இதேவேளை தெல்லிப்பளை முதல் அராலிவரையான வழுக்கையாறு பெருக் கெடுத்து ஓடுவதனால் ஆற்றினை அண்டி யுள்ள பிரதேசங்களில் வாழும் மக்கள் கடு மையாகப் பாதிப்படைந்துள்ளனர்

ஆக,பெரு மழை குடாநாட்டு மக்களின் வாழ்வியலை மோசமாகச் சூறையாடியுள் ளது. எனினும் அரச இயந்திரம் இவர்களின் பிரச்சினைகளைக் கருத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை. யாழ்.மாநகர சபை மற்றும் பிரதேச, நகரசபைகள் மக்களின் அவசர அவசியத்தேவைகள் குறித்து மதிப்பீடு செய்து அவர்களுக்கு வேண்டிய உதவி களைச் செய்வதற்கு முனைப்புக்காட்ட வேண்டிது அவசியமாகும். அரச அதி காரிகள் அலுவலகங்களுக்குச் சென்று நான்கு சுவர்களுக்குள் தமது வேலையை மட்டுப்படுத்தாமல் மக்களின் பிரச்சினை களை அறிவதற்குக் களத்தில் இறங்கிச் செயலாற்ற வேண்டியது சமூகப் பொறுப்பு வாய்ந்தவர்களின் கடமையாகும்.

இத்தகைய தேவைகளைப் பூர்த்தி செய் யும் போது மக்கள் அரச அதிகாரிகளின் மேல் உரிய மதிப்பும் மரியாதையும் வைத் திருப்பர். இல்லையேல் சமூகப் பொறுப் பற்ற சுயநல வாதிகளாகவே நோக்குவர் என்பது திண்ணம்.

- எஸ்.நதி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பரிசு



அவையோர்களின் நியாயமான சந்தேகத்தைப் போக்க மன்னர் விளக்கம் தந்தார்: 'நான் காவல்காரனுக்கும் ஆசிரியருக்கும் கொடுத்த பரிசுகள் வெவ்வேறு. அதுவும் காவல்காரனைக் காட்டிலும், ஆசிரியருக்குக் கிடைத்தது சிறப்பான பரிசு. இது ஏன் என்ற உங்கள் சந்தேகம் நியாயமான ஒன்று.

பலநாள் திருடனைக் கையும் களவுமாக காவல்காரன் பிடித்தது பாராட்டுக்குரிய செயலே! ஆனால் சற்று கவனித்துப் பார்த்தால் உங்களுக்கே புரியும். காவல்காரன் தன் கடமையைத்தான் செய்துள்ளான். அந்த வேலைக்காக அவனுக்கு சம்பளமும் தரப்படுகிறது. ஆனால் அன்று போல் என்றும் தன் கடமையில் கண்ணும் கருத்துமாய் இருப்பதற்காக அவனை ஊக்குவிக்கும் வகையில், ஒரு மோதிரம் அவனுக்குப் பரிசளித்தேன். ஆசிரியரின் வேலை பாடம் கற்பிப்பது மட்டுமே! ஆனால் தெருவில் சென்று கொண்டிருந்த ஒரு சிறுவனின் தங்கச்சங்கிலியை ஒரு போக்கிரி பறிக்க முயற்சிக்கையில், அவர் நமக்கேன் வம்பு என்று பயந்து கொண்டு சும்மாயிராமல், அந்தப் போக்கிரியைப் பிடிப்பதில் உதவி செய்தார். அது ஒரு குடிமகனுக்கு இருக்க வேண்டிய பொறுப்புணர்ச்சியைக் காட்டுகிறது. மேலும் கணநேர சபலத்தினால் உந்தப்பட்டு, இத்தகைய சிறு குற்றங்களைச் செய்பவர்களை உடனுக்குடன் பிடித்துச் சிறிய தண்டனைகள் கொடுத்தால், பிற்காலத்தில் அவர்கள் பெரிய திருடன் ஆகாமல் இருப்பார்கள். இது தனது வேலையில்லை என்று கருதாமல், சிறுவன் மீது இரக்கம் கொண்டு, போக்கிரியைப் பிடிக்க உதவி செய்ததற்காக அவருடைய செய்கைக்காகவும் அவரைப்போலவே எல்லாரும் நடந்து கொள்ள வேண்டும் என்று அனைவரையும் ஊக்குவிக்கவும் ஆசிரியருக்கு வைரமாலையைப் பரிசளித்தேன்.

அரசரின் விளக்கத்தைக் கேட்டதும் அவையோர்களின் சந்தேகம் தீர, அனைவரும் அரசரது செய்கையை மெச்சினர்.

## நீண்ட நேரம் நீரில் திளைத்தால்



நாம் நீண்ட நேரம் ஆற்றில் அல்லது குளத்தில் குளித்தால், நம் கைவிரல்களில் சுருக்கங்கள் விழுவதைக் கவனித்திருக்கலாம். சில சமயம்கால் விரல்களில் கூட அவ்வாறு நேரலாம்.

இது எதனால் உண்டாகிறது என்று தெரியுமா?

நமது தோலில் இயற்கையாகவே 'சீபம்' என்ற ஒரு எண்ணெய் பசை உள்ளது. நீண்ட நேரம்நீராடினால், இந்த எண்ணெய்ப் பசை தோலிலிருந்து அகன்றுவிடும். அப்போது ஆற்று நீர் தோலிலுள்ள துவாரங்கள் வழியாக நமது உடலுக்குள் சென்று விடுகின்றது.

இவ்வாறு உட்புகுந்த நீர் ஒரே சீராக உடலில் தங்குவதில்லை. கைவிரல்களில் சில பாகங்களில் அதிகமாகத் தண்ணீர் சேர சிலபாகங்களில் குறைவாக இருக்கும். அதனால் நம் கைவிரல்கள் பல வித சுருக்கங்களுடன் காணப்படும். இது இயற்கையே. நீரிலிருந்து வெளிவந்த சில மணிநேரங்களில் இது சரியாகிவிடும்.

## மரத்தின் வயது



ஒரு மரத்தின் அடிப்பாகத்தை அறுத்தால், அதன் பரப்பில் ஒன்றுக்குள் ஒன்றாகப் பல வளையங்களைக் காணலாம். இந்த வளையங்களைக்கொண்டு அந்த மரத்தின் வயது என்ன? அது எத்தகைய மாறுபட்ட தட்ப வெப்ப நிலைகளைச் சந்தித்திருக்கிறது போன்ற பல அரிய விபரங்களை அறியலாம்.

இவ்வாறு வளையங்களைக் கொண்டு ஆராய்ச்சிச் செய்வதற்கு ஆங்கிலத்தில் டெண்ட்ரோகுரோனாலஜி என்று பெயர். இதற்கு ஒரு மரத்தை அறுக்க வேண்டிய அவசியமில்லை.

மரத்தின் அடிப்பாகத்தில் ஒரு துளையிட்டு, ஒரு விஞ்ஞானக் கருவியை உள்ளே புகுத்தினால் போதுமானது. அந்தக் கருவி மரத்தின் குறுக்குப் பரப்பில் உள்ள வளையங்களைப் பற்றிய தகவல்களை நமக்கு அறிவித்து விடும்.



அபிராமி கனகசபை 6B
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை



சிவபரன் சிந்துவர்மன் வகுப்பு 9B
யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.





புகானந்தன் யசிந்தன் ஆண்டு 3A
சாவ/இந்து ஆரம்ப பாடசாலை

## தேசிய மட்டத்தில் முதலாம் இடம்



அண்மையில் H.N.B அகில இலங்கை ரீதியில் நடாத்திய கட்டுரைப் போட்டியில் யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் தரம் 10இல் கல்வி பயிலும் மாணவி செல்வி கீர்த்தனா விஜயகுமார் மத்திய பிரிவில் பங்குபற்றி தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.



படம் :- வேலணை நிருபர்

சிறுவர்களே உங்களது ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**

யாழ் ஓசை வீரகேசரி கிளைக் காரியாலயம் 117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடைமழையால் யாழ்.எல்லைப்பகுதி மக்களின் வீடுகளுக்குள் வெள்ளம்



(அலுவலக நிருபர்)

யாழ்ப்பாணத்தின் எல்லைப் பகுதிகளான காக்கைதீவு, நித்தியவெளி, சூரியவெளி ஆகிய பகுதிகளில் மழை வெள்ளம் குடிமனைகளுக்குள் புகுந்த காரணத்தினால் பல்வேறு இடர்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

தற்போது மழை காலம் என்பதால் கடும் மழை பெய்து வருகின்றது. இதனால் வெள்ள நீர் அவர்களது குடிமனைகளைச் சுற்றிக் காணப்படுகிறது. சில வீடுகளுக்குள் வெள்ள நீர் உட்புகுந்துள்ளது. இது தொடர்பாக அப்பகுதி மக்கள் தெரிவித்தாவது,

மழை வெள்ளம் வீடுகளைச்சூழ்ந்துள்ளமையினால் இயல்பான வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது. எல்லா நிறுவனத்தினரும் அரச அதிகாரிகளும் வந்து பார்த்துவிட்டுச் செல்கின்றனரே தவிர எவ்வித உதவிகளையும் வழங்கவில்லை. இங்கு நுளம்புகளின் பெருக்கமும் அதிகரித்துள்ளது. குடிநீருக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. வீடுகளிலுள்ள கூரைகள் சீரற்றுள்ளதால் மழை நீர் உட்புகுந்துள்ளது. இதனால் நிம்மதியாக வாழ முடியவில்லை என தமது நிலை குறித்து கண்ணீருடன் தெரிவிக்கின்றனர்.

தற்போது யு.என்.டி.பி நிறுவனம் காக்கைதீவு பிரதேச மக்களுக்காக வீடுகளைக் கட்டி கொடுக்க முன்வந்துள்ளதாகவும் ஆனால் இதுவரை வீடுகள் பூரணமாகக் கட்டி முடிக்கப்படாமையால் பல்வேறு பிரச்சினைகளுக்கு தாம் முகம் கொடுத்து வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். தற்போது கன மழை பெய்து வருவதால் நாம் இருக்கும் பிரதேசம் தாழ்வான பகுதி என்பதால் மழை வெள்ளம் இலகுவாக உட்செல்ல வாய்ப்பாக அமைகிறது.

இப்பிரச்சினைகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்க தொண்டு நிறுவனங்களும், அரசும் முன்வரவேண்டும் என்கின்றனர்.

காக்கைதீவுப் பிரதேச மக்கள் அனைவருமே மீன்பிடித் தொழிலை நம்பி வாழ்கின்றனர். தற்போது அடைமழை பெய்வதால் கடற் தொழிலிற்குச் செல்ல முடியவில்லை எனவும் இதனால் தமது நாளாந்த வருமானம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதனால் பிள்ளைகள் பட்டினியுடன் இருக்கிறார்கள் எனவும் தொண்டு நிறுவனங்கள் அல்லது அரச நிறுவனங்கள் எமக்கு உதவிகளை வழங்க முன்வர வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## முறிகண்டிப்பகுதியில் மீள்குடியேற்றம்

கிளிநொச்சி

முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட முறிகண்டியில் மீளக்குடியேற்றம் இடம் பெற்றுள்ளது. வவுனியா நலன்புரி நிலையங்களிலும் வெளியிலும் தங்கியிருந்தவர்களே மீளக்குடியேற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கிளிநொச்சியில் பரவிப்பாஞ்சான் மற்றும் கிருஸ்ணன் கோவிலடியில் சில வீடுகள் காணிகளும், திருநெறிக்கழக வளாகம் முதலானவையும் நகர்ப்குதியில் படையினர் நிலைகளாக உள்ளன. இவற்றைத் தம்மிடம் திரும்ப ஒப்படைக்குமாறு காணி உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சங்கானை சங்கரத்தை வீதி பாலத்தின் அவல நிலை



சங்கானை

சங்கானை சங்கரத்தையை இணைக்கும் பாதையில் ஓர் புதிய பாலம் வீதி அபிவிருத்தி திணைக்களத்தால் அண்மையில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாலம் வெள்ள நீர் போவதற்கு போதுமானதாக இல்லாத காரணத்தினால் வீதியை மேவி வெள்ளம் பாய்கிறது. இந்த பாலம் அமைப்பதற்கு வீதியின் இரு பக்கமும் உள்ள தார் வீதி சுமார் 50 மீற்றர் தூரம் வரை உடைக்கப்பட்டுள்ளது.

இந்தப்பாதை பாலம் போடப்பட்ட பின்னர் செப்பனிடப்படாததால் தற்போது பெய்து வரும் மழையால் வயல் வெளி வெள்ளம் இப்பாதை மேல் மேவிப் பாய்வதால் வீதி சேதமாகி உள்ளது. வீதியால் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றார்கள்.

சண்டிலிப்பாய் பிரதான வீதியின் பால வேலை நடைபெறுவதால் அதிகளவான மக்கள் இந்த வீதியை உபயோகப்படுத்துவது குறிப்பிடத்தக்கது.

## தென்மராட்சி பிரதேசத்தில் 8 பேருக்கு சுயதொழில் நிவாரணக்கொடுப்பனவு

சாவகச்சேரி

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் தென்மராட்சிப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 8 பயனாளிகளுக்கான சுயதொழில் நிவாரணக் கொடுப்பனவு பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

இப் பயனாளிகளை இன்று வெள்ளிக்கிழமை தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளும்படி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் அறிவித்துள்ளார். ந.அற்புதராணி பெரியமாவடி சாவகச்சேரி, மா.ஈஸ்வரி பாலாவி தெற்கு கொடிகாமம், பி.தயாநிதி படித்த மகளிர் குடியேற்றத்திட்டம் மிருசுவில், தி.ஜெயரட்ணம் முத்துமாரி அம்மன் கோவிலடி மட்டுவில் வடக்கு, க.கமலாதேவி கச்சாய் தெற்கு கொடிகாமம், யே.ஜெயசீலியம்மா படித்த மகளிர் குடியேற்றத்திட்டம் மிருசுவில் க.ரஞ்சினி பழைய வாய்க்கால் மிருசுவில், ம.கமலாதேவி பழைய வாய்க்கால் மிருசுவில் ஆகியோர்க்கு வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் 8 பேருக்கும் கோழி வளர்ப்பு, தையல், பன்னை வேலை, சுருட்டுத்தொழில்களுக்குகாக 60 ஆயிரம் ரூபா பிரித்து வழங்கப்படவுள்ளது.

## தென்னை உற்பத்தி தொடர்பான ஒரு நாள் பயிற்சி நெறி புதனன்று

கைதடி

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தென்னை உற்பத்திகள் தொடர்பான ஒரு நாள் பயிற்சி நெறி கடந்த 01 ஆம் திகதி புதன் கிழமை நடைபெற்றது.

தென்னைக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை இதற்குரிய நிதி அனுசரணையை வழங்கியிருந்தது.

உதவிப் பிரதேச செயலர் செல்வி.ச.பிறேமினி தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சி நெறியில் கிராம அபிவிருத்தி, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களைச் சேர்ந்த 35 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். தென்னைக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் வடபிராந்திய முகாமையாளர் வி.மகாலிங்கம், உத்தியோகத்தர் க. தனிநாயகம், கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் பிராந்தியக் கருத்திட்ட இணைப்பாளர் நிரோஷன், ஆர்.எஸ். குலரட்ண, ஆகியோர் பயிற்சிகளை வழங்கினார்கள்.

பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அதிகாரி அ.நிர்மலன் இப்பயிற்சி நெறியின் இணைப்பாளராகக் கடமையாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறவைக் காய்ச்சல் நோய்த் தடுப்பூசி பெற யாழ். மக்களுக்கு அறிவிப்பு

(அலுவலக நிருபர்)

உலகளாவிய ரீதியில் பறவைக் காய்ச்சல் இரண்டாம் முறையாகவும் பரவிவருவதனாலும் இலங்கையின் யாழ். மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் 'ஏ 1என்1' நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாலும் இதற்கான தடுப்பூசியினை யாழ். மாவட்டத்தில் வழங்கவேண்டி உள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இத்தடுப்பூசியினை நோய்த் தொற்று ஏற்படும் சாத்தியக்கூறுகள் அதிகமுள்ளவர்களான காவல்துறையினர், பாதுகாப்புப் படையினர், கடற்படையினர், கோழிப்பண்ணையாளர்கள், மக்களுடன் அதிகமாகத் தொடர்புபடுபவர்கள், சகல வியாபார நிலைய ஊழியர்கள் ஆகியோர் தங்கள் தங்கள் பிரிவு சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனைக்குச் சென்று எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் தடுப்பூசியினை பெற்றுக் கொள்ளவேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பிரதேச செயலகங்களுக்கிடையில் முகாமைத்துவப் போட்டிகள்

மானிப்பாய்

யாழ்.மாவட்டத்தின் பிரதேச செயலகங்களுக்கிடையிலான முகாமைத்துவப் போட்டி கடந்த 8 ஆம் திகதி முதல் ஆரம்பமாகியுள்ளது.

பிரதேச செயலகங்களுக்கான முகாமைத்துவப் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் பிரதேச செயலக செயற்பாடுகளை அப்போட்டிக்கு ஏற்றவாறு தயார் நிலையில் வைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட செயலரால் பிரதேச செயலர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் இவ் அறிவித்தல்களின் படி எந்நேரத்திலும் மேற்பார்வையாளர்கள் பிரதேச செயலகங்களுக்கு வருகை தந்து செயலக செயற்பாடுகள், ஆவணப்படுத்தல் முறைகள், நிர்வாக ஒழுங்கமைப்பு, நிதிச் செயற்பாடுகள் எனப் பல்வேறு விடயங்களை அவதானிப்பார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் யாழ். விஜயம்

ஏழாலை

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் யாழ். மாவட்டத்திற்கு நாளை சனிக்கிழமை விஜயம் செய்யவுள்ளார்.

யாழ். மாவட்டத்திற்கு வருகை தரும் பணிப்பாளர் நாயகம் ஆர்.பீ.பீ. திலகசிறி அன்றைய தினம் பிற்பகல் 12.30 மணியளவில் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட யாழ். நகர் மேற்கு சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் புதிய கட்டடத்தினை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கவுள்ளார்.

பின்பு மாலை 4.30 மணியளவில் யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ள சமுர்த்தி முகாமையாளர்களின் சமுர்த்தி வேலைத்திட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் கலந்த கொள்வார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்டத்தில் சமுர்த்தி அதிகார சபையின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் 'திரியபியச' வீட்டுத் திட்டங்களினையும் பார்வையிடவுள்ளார்.

அன்றைய தினம் யாழ்ப்பாணத்திலுள்ள ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள அபிவிருத்தித் திட்டங்களினை மேற்பார்வை செய்யவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# சமுர்த்தி முகாமையாளர்களுக்கான திட்ட முன்னேற்ற கலந்துரையாடல்

மானிப்பாய்

சமுர்த்தி முகாமையாளர்களுக்கான சமுர்த்தித் திட்ட முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை 11 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டால் சுகுமார் தலைமையில் நடைபெறும் இக் கலந்துரையாடலில் இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பி.பி. திலகசிறி கலந்து கொள்ளவுள்ளார்.

இக்கலந்துரையாடலில் அனைத்து சமுர்த்தி முகாமையாளர்களையும் தவறாது சமுகம் தரவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடலில் சமுர்த்தித்திட்டம் தொடர்பான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள், முன்னேற்ற செயற்பாடுகள், சாதக பாதக நிலைகள் என்பன முழுமையாக பரிசீலிக்கப்படவுள்ளது.

# பலாலி வீதி பேருந்து சேவைகள் புன்னாலைக் கட்டுவன் வடக்கிற்கு மாற்றம்

ஏழாலை

புன்னாலைக்கட்டுவன் தெற்குச் சந்தியிலிருந்த பேருந்து மற்றும் மினி பஸ் தரிப்பிடம் புன்னாலைக்கட்டுவன் வடக்கு சந்திக்கு மாற்றப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் புன்னாலைக்கட்டுவன் தெற்கு சந்தியில் இருந்தே 764 இலக்க வழித்தட பேருந்து மற்றும் மினி பஸ்கள் சேவையினை ஆரம்பித்து வந்தன.

கடந்த மாதம் வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலர் பிரிவின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் 764 இலக்க வழித் தட பேருந்துத் தரிப்பிடத்தை புன்னாலைக் கட்டுவன் வடக்குச் சந்திக்கு மாற்றுவதெனத் தீர்மானிக்கப்பட்டதாகவும் அதனடிப்படையில் 764 வழித் தட பேருந்து மற்றும் மினி பஸ்கள் புன்னாலைக்கட்டுவன் வடக்குச்சந்தித் தரிப்பிடத்திலிருந்து சேவைகளை ஆற்றுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புன்னாலைக்கட்டுவன் வடக்குச் சந்திக்கு அப்பாலுள்ள வசாவிளான் பகுதி மக்கள் மற்றும் வசாவிளான் மகா வித்தியாலய மாணவர்களின் நலன் கருதி பேருந்துத் தரிப்பிடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

# கலந்துரையாடல்

மானிப்பாய்

கலாசார உத்தியோகத்தர்கள் கலாசார நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது. மாவட்ட கலாசார உத்தியோகத்தரால் நடத்தப்படும் மாதாந்த மீளாய்வு முன்னேற்றச் செயற்பாடு சம்பந்தமான இக் கலந்துரையாடலில் அனைத்து கலாசார உத்தியோகத்தர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# உலக விஞ்ஞான தினவிழா வேம்படி மகளிர் கல்லூரியில்

பளை

உலக விஞ்ஞான தினத்தை யாழ். மாவட்டத்தில் இரண்டாவது தடவையாக தொழில் நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு விதாதா வள நிலையங்கள் ஊடாக தேசிய விஞ்ஞான மன்றத்துடன் இணைந்து கொண்டாடவுள்ளது.

உலக விஞ்ஞான தின விழா இன்று வெள்ளிக்கிழமை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்விழாவுக்கு முன்னோடியாக யாழ். மாவட்டத்திலுள்ள வலிகாமம், யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய ஐந்து கல்வி வலயங்களிலுள்ள பாடசாலைகளுக்கிடையே வினாடி வினா ப் போட்டிகளும் சித்திரப் போட்டிகளும் நடத்தப்பட்டன. இப்போட்டிகளில் மாவட்ட மட்டத்தில் வெற்றியீட்டியவர்களுக்கு இங்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

தேசிய விஞ்ஞான மன்றத்திலிருந்து வருகை தரவுள்ள பேராசிரியர்களினால் பாடசாலை சமூகத்திற்கான தேசிய விஞ்ஞான மன்றத்தின் செயற்பாடு, கால நிலை மாற்றம் உலக வெப்பமாயமாதல், ஆகிய எண்ணக்கருக்களில் கருத்துரைகளும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன், பாடசாலை மட்டத்தில் இயங்கும் விஞ்ஞான மன்றங்களை தேசிய விஞ்ஞான மன்றத்துடன் எதிர்காலத்தில் இணைத்து இயக்குவது தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சிறுவர் தினத்தை முன்னிட்டு திருநெல்வேலி ஹற்றன் நஷனல் வங்கி கிளையில் சிறுவர் சேமிப்புக் கணக்கில் வைப்பிலிட்ட சிறுவர்களுக்கு தங்கப் பென்டன்கள் மற்றும் பரிசில்களை ஹற்றன் நஷனல் வங்கியின் சிரேஷ்ட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் தி.ஜெயராஜசிங்கம் வழங்குவதையும் ஊழியர்கள் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:- கொக்குவில் நிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவுச் சான்றிதழ்களை தேவை ஏற்படும்போது மட்டும் பெறாது முன்கூட்டியே அவற்றை எடுத்துக்கொள்வது நல்லதாகும்

## மேலதிகப் பதிவாளர் ந. சதாசிவ ஐயர் தெரிவிப்பு

சாவகச்சேரி,

தேவை ஏற்படும் போது மட்டும் பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ள அவசரப்படுவதைவிட விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து சான்றிதழ்களின் இரண்டு பிரதிகளையாவது எடுத்துக் கைவசம் மக்கள் வைத்திருத்தல் வேண்டும்.

தற்போது மாவட்ட செயலகத்தில் மட்டுமல்லாது தாம் பிறந்த இடத்தின் பிரதேச செயலகங்களிலும் பிறப்புச் சான்றிழ்களைப் பெற்றுக்கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்று மேலதிகப் பதிவாளர் நாயகம் ந. சதாசிவ ஐயர் தெரிவித்துள்ளார்.

நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் வழிகாட்டலில் தென்மராட்சிப் பிரதேசச் செயலகத்தினால் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்புவதற்கான செயற்திட்டத்தின் கீழ் சாவக்சசேரி இந்துக் கல்லூரியில் பொது மக்களுக்காக நடத்தப்பட்ட நடமாடும் சேவையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறயதாவது,

அவசர தேவை ஏற்படும் போது விண்ணப்பித்து இலஞ்சம் கொடுத்து சட்டபூர்வமற்ற முறையில் சான்றிதழ்களைப் பெறுவதால் சட்ட பூர்வமற்ற முறையில் தயாரிக்கப்பட்டு வழங்கப்படும் அச் சான்றிதழ்கள் உரிய திணைக்களங்களில் நிராகரிக்கப்படும் போது வீண் காலவிரயமும் பணச் செலவும் ஏற்படுமென்பதை மக்கள் மனதிற் கொள்ள வேண்டும்.

அத்துடன் அவசரத் தேவைக்கு முன்பே விண்ணப்பித்துச் சான்றிதழ்களைப் பெறும்போது அவற்றில் ஏதாவது திருத்தங்கள் செய்யவேண்டியிருப்பினும் அவற்றைத் திருத்திக் கொள்ளப்போதிய கால அவகாசம் இருக்கும்.

பொது மக்கள் அனைவரும் தமது குடும்ப அங்கத்தவர்களது பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்களைச் சரிபார்த்து பிழைகள் இருப்பின் அது சம்பந்தமான பிரிவினருடன் தொடர்பு கொண்டு பிழைகளைத் திருத்தி திருத்திய பிரதிகளில் ஆகக் குறைந்தது இரண்டு பிரதிகளையாவது கைவசம் வைத்திருந்தால் தேவை ஏற்படும்போது சிரமமின்றிப் பயன்படுத்தலாம்.

சிலர் அவசரத்திற்கு கொழும்பு பதிவாளர் திணைக்களத்தில் சான்றிதழ் பெறலாம் எனச் சென்று அங்கு போலி நபர்களிடம் சிக்குண்டு போலியான சான்றிதழ்களைப் பணம் செலவழித்துப் பெறுகிறார்கள்.

வாரத்தில் குறிப்பிட்ட ஒரு தினத்தில் மட்டுமே அங்கு சான்றிதழ்கள் விநியோகிக்கப்படுகின்றன. அதனால் அங்கு சென்று நெருக்கடிக்குள் சிக்க வேண்டிய ஏற்படுவதுடன் போலி நபர்களது நடவடிக்கைகளுக்குட்பட்டு பண விரயமும் போலி சான்றிதழ்களைப் பெறும் சந்தர்ப்பங்களும் ஏற்படும்.

பின்னர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போது அவரிடம் கேட்கப்பட்ட சில கேள்விகளுக்கு பதிலளித்தார்.

அண்மைக்கால வன்செயலில் இறந்தவர்களின் இறப்புச் சான்றிதழ்களைப் பெறுவது எப்படி என்று கேட்டபோது -

அண்மைக்கால (2008, 2009) யுத்தம், வன்செயல்களில் இறந்தவர்கள் பற்றித் தீர்மானிப்பதற்கு நீதி மன்றத்திற்கே அதிகாரமுண்டு. வன்செயல் இறப்பாக இருப்பின் சம்பவம் இடம்பெற்ற பிரதேச பொலிஸ் நிலையங்களில் இறப்பைப் பதிவு செய்து அதன் பிரதியைப் பெற்று நீதிமன்றத்தில் விண்ணப்பிக்கும் பட்சத்தில் நீதிமன்றத்தினர் அது சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். அதற்காகச் சட்டத்தரணிகளை அமர்த்தி பணம் செலவு செய்ய வேண்டியதில்லை என்றும் தெரிவித்தார்.

காணாமற் போனவர்கள் பற்றிய இறப்புச் சான்றிதழ்கள் பெறுவது தொடர்பாகக் கேட்டபோது, -

இது சம்பந்தமான சட்டம் பாராளுமன்றில் இன்னும் சில வாரங்களில் நிறைவேற்றப்படவுள்ளது. நிறைவேற்றப்பட்டவுடன் அது சம்பந்தமான சுற்றறிக்கைகள் சகல பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பப்படும். காணாது போய் ஒரு வருடம் கடந்து விட்டால் அவர் காணாது போன பிரதேசம் அல்லது கடைசியாக வசித்த பிரதேசம் அல்லது அவரது நிரந்தர வதிவிடத்திலுள்ள பிரதேச செயலகங்களில் காணாமற் போனவரது நெருங்கிய உறவினர் விண்ணப்பித்தால் உரிய நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்வார்கள்.

தொலைந்த காணிப் பதிவுகள் சம்பந்தமாகக் கேட்டபோது -

பெரும்பாலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலேயே தொலைந்த காணி உறுதிப் பிரச்சினைகள் உள்ளன. கிளிநொச்சி காணி உறுதிகளைப் பெரும்பாலும் யாழ்ப்பாண நொத்தாரிசுகளே அந்நாட்களில் எழுதியுள்ளனர்.

அரச காணிகள் தொடர்பில் பிரதேச செயலகங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்வர். தனியார் காணி சம்பந்தமான பதிவேடுகள் கிளிநொச்சி பதிவாளர் அலுவலகத்தில் இல்லாததால் பருத்தித்துறை, வவுனியா யாழ். பதிவாளர் அலுவலகங்களில் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் சான்றிதழ்களைக் கணனியில் பதிந்து நேரவிரயத்தைத் தவிர்த்து கணனி மூலம் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

இலங்கையிலேயே முதன்முதலாக வட மாகாணத்தில் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் இரண்டு மாதங்களில் பிறப்புச் சான்றிதழ்கள் கணனியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. யாழ். மாவட்டத்தில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு முடிவுறும் நிலையிலுள்ளது. இது பெரும் சாதனையாகும். எதிர்காலத்தில் இலங்கையில் எப் பகுதியில் பிறந்திருப்பினும் தாம் விரும்பிய பிரதேச செயலகத்தில் சான்றிதழ்களைப் பெற வலைப்பின்னல் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. 2012 ஆம் ஆண்டளவில் இது சாத்தியப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதுவரை பதியப்படாத பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவுகள் தொடர்பாக அவரிடம் வினவியபோது -

தாம் வசிக்கும் பிரதேச செயலர் பிரிவில் அல்லது யாழ். உதவிப் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தில் தொடர்பு கொண்டு தேவையான விபரங்களை உறுதிப்படுத்தக்கூடிய ஒருசில ஆவணங்களை மட்டும் ஆதாரங்களாகக் கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று அவர் தெரிவித்தார்.

# மாணவர்களுக்குப் புதிய புத்தகப் பை அறிமுகம்

கல்வி அமைச்சு, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதாரப் பணியகம் மற்றும் இலங்கை கட்டளைகள் நிறுவகம் என்பன ஒன்றிணைந்து 2011 ஆம் ஆண்டிலிருந்து சுகாதாரப் பரிந்துரையுடனான பாடசாலைப் பாடநூல் பை ஒன்றை மாணவர்களுக்காகச் சந்தையில் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளன.

பாடசாலை மாணவர்களின் இப்புத்தகப் பை சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதாரப் பணியகம் மற்றும் இலங்கை கட்டளைகள் நிறுவகத்தின் பரிந்துரைக்கமைய வடிவமைக்கப்பட்டுள்ளது.

இப்புத்தகப் பையைத் தயாரிப்பதற்கான அநுமதிகள் நாட்டிலுள்ள 170 உற்பத்தியாளர்களுக்குப் பதிவிலக்கம், இலச்சினை என்பவற்றோடு வழங்கப்பட்டுள்ளன.

தற்போது பாடசாலை மாணவர்களால் பயன்படுத்தப்படுகின்ற பாடநூல் பைகள் சுகாதார ரீதியாகப் பொருத்தமான தரத்தில் காணப்படாமை, சரியான முறையில் பயன்படுத்தாமை, மற்றும் சுமக்க முடியாதளவு பாரமாயிருத்தல் போன்றவற்றால் பாடசாலை மாணவர்கள் பல சுகாதாரப்பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதாரப் பணியகம் மற்றும் கல்வி வெளியீட்டுத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து தெரியவந்துள்ளதையடுத்தே இச் சுகாதாரப் பரிந்துரையுடனான பாடசாலைப் புத்தகப் பை சந்தையில் அறிமுகப்படுத்தப்படுகின்றது.



மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையின் பரிசளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினர் மாணவனுக்கு பரிசளிப்பதனையும் புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- தெல்லிப்பழை நிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில அரச சார்பற்ற நிறுவனங்களால் எமது மாணவ, மாணவிகள் ஏமாறுகின்றனர்

## பசறை பிரதேச சபை உறுப்பினர் கனகராஜா

பதுளை,

"அரச சார்பற்ற நிறுவனங்கள் சில, ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பெருந்தோட்டப் பகுதி மாணவ மாணவிகளை மையப்படுத்தி முன்னெடுக்கும் வேலைத் திட்டங்களினால் எமது சமூக மாணவ, மாணவிகள் பெரிதும் ஏமாற்றப்படுகின்றனர்."

இவ்வாறு பசறை பிரதேச சபையில் ஆளும் கட்சி சார்பான உறுப்பினர் அ. கனகராஜா, சபை அமர்வின் போது பேசுகையில் குறிப்பிட்டார்.

பசறை பிரதேச சபை மண்டபத்தில் சபைத் தலைவர் ஆனந்த டி சில்வா தலைமையில் சபையின் மாதாந்த அமர்வு நடைபெற்றது.

சபை உறுப்பினர் அ. கனகராஜா தொடர்ந்து தமதுரையில், "ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பெருந்தோட்ட மாணவ மாணவிகளை பாராட்டுமுகமான வேலைத் திட்டங்களை மலையக அரச சார்பற்ற நிறுவனங்கள் சில அண்மைக் காலமாக போட்டி போட்டுக் கொண்டு முன்னெடுத்து வருகின்றன.

இச் செயற்பாடுகளில் மாணவ மாணவிகள் நன்மை பெற்றார்களாவென்பது கேள்விக் குறியாகவே இருந்து வருகின்றது. ஆனால் வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும் அரச சார்பற்ற நிறுவனத்தினர், எதிர்பார்த்த பயனை பெற்று வருகின்றனர். இம்மாணவ மாணவிகளைப் பாராட்டுமுகமான வேலைத் திட்டங்களை வீடியோ எடுத்து புகைப்படங்கள் பிடித்து அவற்றை உள்ளூர், வெளிநாட்டு நிதி வழங்குவோரிடம் சமர்ப்பித்து பெருமளவிலான நிதியை இவ் அரச சார்பற்ற நிறுவனங்கள் பெற்று வருகின்றன.

இதுபோன்று எமது மாணவ மாணவிகள் இனியும் ஏமாற்றப்படக் கூடாது. மக்கள் பிரதிநிதி என்ற வகையில் இத்தகைய ஏமாற்று வேலைகளை எம்மால் அனுமதிக்க முடியாது.

ஆகையினால் இது தொடர்பாக இச் சபை மூலம் கல்விப் பணிப்பாளர்களுக்கு தெளிவுபடுத்தி இதுபோன்ற நிகழ்வுகளுக்கு தடை விதிக்கும்படி அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும்" என்றார்.

அத்துடன் பிரதேச சபைக்கு செலுத்தும் வரியும் அதிகரிக்கப்படல் வேண்டும். இவ்வரி அதிகரிப்பின் மூலமே சபையை நிருவகிக்க முடியும். சபை நஷ்டத்தில் இயங்க வைப்பதை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது" என்றார்.

# வர்த்தக நிலையத்தில் திருட முற்பட்ட இளைஞன் வசமாக சிக்கினான்

### 15ஆம் திகதி வரை விளக்கமறியல்

செங்கடகல,

வர்த்தக நிலையம் ஒன்றில் திருடுவதற்காக இளைஞன் ஒருவன் நள்ளிரவு வேளையில் உட்புகுந்திருந்தபோது கதவுகளின் வெளிப்பகுதியில் பூட்டுக்களைப் போட்டு திருடனை வசமாக பிடித்துக் கொடுத்த சம்பவம் ஒன்று கடுகண்ணாவ பொலிஸ் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடுகண்ணாவை இழக்வத்த என்ற இடத்திலேயே இச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

குறிப்பிட்ட வர்த்தக நிலையத்திற்கு நள்ளிரவு 12 மணியளவில் மிதி வண்டியில் இரு இளைஞர்கள் வந்து சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு மெதுவாக கடைக் கதவின் பூட்டை உடைத்துள்ளதோடு ஒரு இளைஞர் வர்த்தக நிலையத்திற்குள் புகுந்துள்ளார்.

மற்றொரு இளைஞர் மிதி வண்டியுடன் வெளியில் காத்து நின்றுள்ளார். இவ்வேளை முன்னால் உள்ள மர ஆலை ஒன்றின் காவல்காரர் இந்த இளைஞர்களின் செயற்பாடுகளை அவதானித்து மெதுவாக வர்த்தக நிலைய கதவுகளில் வெளியில் பூட்டுகளைப் போட்டு மூடிவிட்டு கடுகண்ணாவை பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இதையடுத்து பொலிஸார் விரைந்து சந்தேக நபர்கள் இருவரையும் கைது செய்து நேற்று முன்தினம் கண்டி நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

இதன்போது நீதிவான் லலித் ஏக்கநாயக்க சந்தேக நபர்கள் இருவரையும் எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.


இல்லாததை
திரிபுபடுத்துவீர்களா?
இருப்பதை
தெரியப்படுத்துவீர்களா?
நீங்கள் என்ன செய்வீர்கள்?



வெகுஜன ஊடகத்துறையையும் சமூகப்பொறுப்பையும் வேறுபடுத்திக் காட்டும் கோடு, அடையாளம் காண்பதற்கு மிகவும் சிரமமான ஓர் தெளிவில்லாதக் கோடு எனலாம். ஊடகவியலாளர் என்பவர் சம்பவத்தை அல்லது நிலைமையை மாற்றுபவரா? அல்லது வெறுமனே அறிவிப்பவரா? இங்கே கருத்துக்களுக்கும் செய்திக்குமான மெல்லிய வரையறை எங்கு உள்ளது?

இலங்கை ஊடகவியலாளர் கல்லூரியில், அனுபவம் வாய்ந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களை உள்ளடக்கிய ஊழியர் குழாம், நீங்கள் எவ்வாறான கேள்விகளை கேட்க வேண்டும் என்பதை மட்டுமல்லாமல், ஊடக தர்மத்தையும் ஊடகத்துறையின் அடிப்படை தத்துவங்களையும் துல்லியமாக கற்றுத்தரும் ஓர் உன்னத பயிற்சியை வழங்குகின்றது.

தற்போது எமது ஒரு வருட ஊடகத்துறை டிப்ளோமாவிற்கான விண்ணப்பங்களை நாம் ஏற்றுக்கொள்ள ஆரம்பித்துள்ளோம். ஊடகத்துறையில் நீங்களும் தடம் பதிக்க விரும்பினால் உங்கள் பெயர், பிறந்த திகதி, கல்வி மற்றும் ஏனைய தகைமைகளுடன், நீங்கள் ஏன் இந்த துறையை தெரிவு செய்தீர்கள் என்றும், எந்த பிரிவு (அச்சு, வானொலி, தொலைக்காட்சி) மற்றும் எந்த மொழியில் (ஆங்கிலம், சிங்களம், தமிழ்) கற்க ஆவலாய் உள்ளீர்கள் என்றும் 200 சொற்களுக்கு குறையாமல் ஓர் கட்டுரையையும் எழுதி உங்கள் விண்ணப்பப்படிவத்துடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விண்ணப்பங்கள் இல.96, கிருல றோட், கொழும்பு 05 என்ற முகவரிக்கு அல்லது **info@slcj.lk** என்ற முகவரிக்கு 2010 நவம்பர் 30ம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**நுழைவுத் தகைமைகள்:** க.பொ.த உயர்தர சித்தி, கா.பொ.த.சா. தரத்தில் ஆங்கிலப்பாட சித்தியுடன், உயர்தர பரீட்சை பெறுபேறுகளுக்காக காத்திருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**ஆரம்பமாகும் திகதி:** 2011 ஜனவரி 06

**வயதெல்லை:** 18-25 வரை

வடக்கு கிழக்கு மற்றும் பொலன்னறுவை மாவட்டத்தை சேர்ந்த மாணவர்களுக்கு USAID புலமைப்பரிசில் உண்டு. அத்துடன் SLCJ இனால் வழங்கப்படும் மட்டுப்படுத்தப்பட்ட புலமைப்பரிசில்களும் உண்டு.

**பாடநெறி கட்டணம்**
அச்சு ரூ.50,000
வானொலி: ரூ.60,000
தொலைக்காட்சி: ரூ.75,000
(தவணை முறையில் செலுத்த முடியும்)

SRI LANKA COLLEGE OF JOURNALISM
We shape the future

PHOENIX O&M

தொ.பே: 0115-353-635 ∴பக்ஸ்: 0115-335-500 www.slcj.lk

இலங்கை வெகுஜன ஊடக கல்லூரியானது, ஊடகத்துறையால் ஸ்தாபிக்கப்பட்டு, கொண்டு நடாத்தப்படும் இலங்கையின் முதன்மையானதும், இலங்கை மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணையகத்தின் இலக்கம் P.01/0435 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட ஓர் ஊடகத்துறை பயிற்சிக் கல்லூரியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் தொடரும் கன மழையால் ஆறுகள், குளங்கள் வான் பாய்கின்றன

## வீதியில் போக்குவரத்துக்கள் துண்டிப்பு

கிளிநொச்சி

வன்னியில் தொடரும் மழையால் குடமுருட்டி ஆறு பெருக்கெடுத்ததையடுத்து பரந்தன், பூநகரி வீதியில் பூநகரிக்கான போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் முருகண்டி அக்கராயன் குள வீதியூடாக ஜெயபுரம் சென்றே பூநகரிக்கான போக்குவரத்துகள் இடம்பெற்றுவருகின்றன.

வன்னியில் தொடர்ந்து இடைவிடாது பெய்துவரும் அடைமழை வெள்ளப் பெருக்கால் பூநகரி மண்டயனாறு மற்றும் குடமுருட்டி ஆறு, பேராறு, பாலியாறு போன்றவை பெருக்கெடுத்துள்ளன.

ஆனையிறவு குறிஞ்சாத்தீவுப் பகுதியில் ஏ- 9 வீதியிலும் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளதால் பிரதான வீதியிலான போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்பட்டுள்ளது. வீதியும் சேதமடைந்துள்ளது.

அக்கராயன் குளம், புதுமுறிப்புக் குளம், கனகாம்பிக்கை குளம், கரியாலை நாகபடுவான் குளம், கல்மடுக்குளம், பிரமந்தனாறு குளம், கிளிநொச்சி குளம், கனகராயன்குளம், கந்தன் குளம், புதுக்குளம், மணியம் குளம் உட்பட 30 வரையான குளங்கள் வன்னியில் வான்பாய்கின்றன.

கிளிநொச்சி புதுமுறிப்புக் குளம் எதிர்பாராத விதமாக உடைப்பெடுக்கும் அபாய நிலையில் இருந்தபோதும் நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள் எடுத்த துரித நடவடிக்கையால் அது தவிர்க்கப்பட்டது.

முல்லைத்தீவு அரச அதிபர் வேதநாயகன் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் முதலானோரின் தலைமையில் அனர்த்த நிவாரண அமைப்புக்கள், நீர்ப்பாசன திணைக்களத்தினர், படை அதிகாரிகள், அரச அதிகாரிகள் வெள்ள அனர்த்தப் பணிகளை முன்னெடுத்துள்ளனர். அதேவேளை ஆயிரக்கணக்கான வாழைகள், பயன்தரு மரங்கள் அழிந்து விட்டன. இதுவரை 750 கால் நடைகள் மரணமாகி விட்டன.

தரைப்படை மற்றும் கடற்படையினர் உசார் நிலையில் உள்ளதுடன் பல கிராமங்களில் படகுகள் மூலம் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வன்னி மக்களுக்கு உதவுமாறு கிளிநொச்சி, முல்லைத்தீவு அரச அதிபர்கள் அரசசார்பற்ற நிறுவனங்களைக் கேட்டுள்ளனர்.

# சிங்கர் நிதி நிறுவன பங்குச் சந்தை அறிமுகக் கருத்தரங்கு இன்று

(அலுவலக நிருபர்)

சிங்கர் நிதி நிறுவனத்தினால் பங்குச் சந்தை அறிமுகம் தொடர்பான கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை இல. 398/1 ஆஸ்பத்திரி வீதியிலமைந்துள்ள கொழும்பு பங்குச் சந்தையின் யாழ்ப்பாணக் கிளை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் சிங்கர் நிதி நிறுவனம் புதிதாக அறிமுகப்படுத்தும் பங்கு விநியோகம் தொடர்பான விடயங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

நிபுணத்துவம் வாய்ந்தவர்களால் நடத்தப்படும் இக்கருத்தரங்கில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி கொழும்பு பங்குச் சந்தை யாழ்ப்பாணக் கிளையின் முகாமையாளர் மு. திலீபன் தெரிவித்துள்ளார்.

# தாம் வசித்த காணிகளை மீளப்பெறுவதற்கு உதவுமாறு முஸ்லிம் மக்கள் கோரிக்கை

## கிளி. அரச அதிபருடன் சந்திப்பு

வண்ணார்பண்ணை

1987 ஆம் ஆண்டில் முறிகண்டி பிரதேசத்தில் முஸ்லிம் மக்களுக்காக ஒதுக்கப்பட்ட 30 ஏக்கர் காணியை காணியில்லாத கிளிநொச்சி பிரதேச முஸ்லிம் மக்களுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்குமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரை முஸ்லிம் பிரதிநிதிகள் கேட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனை யாழ். மாநகர சபை உறுப்பினர் மௌலவி சுபியான் தலைமையிலான குழுவினர் மற்றும் கிளிநொச்சியில் மீள்குடியேறிவரும் முஸ்லிம் பிரதிநிதிகள் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பாக யாழ். மாநகர சபை உறுப்பினர்களும் மக்கள் பணிமனைத் தலைவரும், மக்கள் மறுமலர்ச்சி முன்னணியின் பிரதித் தலைவருமான மௌலவி சுபியான் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 400 முஸ்லிம் குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளன. மீள்குடியேறியுள்ள முஸ்லிம் குடும்பங்களுக்கு 2008 இற்குப் பின்பு இடம்பெயர்ந்த மக்கள் குடியேறிவரும் போது எவ்விதம் அரச அரச சார்பற்ற நிறுவனங்களினால் கொடுப்பனவுக, உதவிப் பெருட்கள் வழங்கப்படுகின்றனவோ அதுபோன்று 1990 ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களுக்கும் வழங்கப்படல், முஸ்லிம் மக்கள் யுத்தம் முடிவடைவதற்கு முன்னர் இந்த மாவட்டத்தில் பல காரணங்களால் தங்களது காணிகள், கடைகள், தோட்டங்களைக் குறைந்த விலைக்கு விற்க நேரிட்டதையும் தற்போது இவற்றை மீளப் பெற்றுக் கொள்வதில் ஆர்வமாக இருப்பதையும் இது தொடர்பாக எதிர்நோக்கும் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தருதல்,

நாச்சிக்குடாப் பிரதேசத்தில் 325 ஏக்கர் வயற் காணிகள் முஸ்லிம் மக்களுக்காக ஒதுக்கப்பட்டது. இக்காணி தற்போது எது வித கவனிப்பும் இன்றி காணப்படுகிறது. இதனைத் துப்புரவு செய்து மக்களிடம் கையளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படல்,

முஸ்லிம் மக்கள் மீள்குடியேறிவரும் நாச்சிக்குடா 55ஆம் கட்டை, திருநகர், பள்ளிக்குடா பிரதேசங்கள் கிராமிய மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் உட்கட்டுமான வசதிகளும் புனர்நிர்மாணங்களும் துரிதமாக நடைமுறைப்படுத்தல் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன என அச் செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

# வன்னியில் ப.நோ.கூ. சங்க கிளைக் குழுத் தேர்தல்கள்

கிளிநொச்சி

வன்னியில் கடந்த யுத்தத்தின்போது ப.நோ.கூ. சங்கங்களின் ஆவணங்கள் குறிப்பாக அங்கத்தவர் விபரப் பட்டியல் யாவும் இல்லாமல் போன நிலையில் இச் சங்கங்களின் கிளைக்குழுத் தேர்தல்கள் விரைவில் இடம்பெறவுள்ளன.

இதன் முன்னோடி நடவடிக்கையாக முன்பு கிளைகளில் அங்கத்துவம் பெற்று இருந்தவர்களின் விபரங்கள் சமாதான நீதிபதி முன்பு சத்தியப் பிரமாணம் செய்து பெறப்படுகின்றது.

இதனடிப்படையில் முன்பு உறுப்புரிமை பெற்றவர்கள் கிளைக்குழுத் தேர்தலில் போட்டியிடவும் வாக்களிக்கவும் ஆவன செய்யப்பட்டுள்ளன.

யுத்தத்திற்குப்பின்னர் வன்னியில் செயற்படும் ப.நோ.கூ. சங்கத்திற்கு அரச உத்தியோகத்தர் தலைமையில் இடைக்கால நிர்வாகம் ஒன்று அரச அதிபர்களின் பரிந்துரையில் செயற்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

# குளங்களைத் துப்புரவு செய்ய போதியளவு உபகரணங்கள் இல்லை

வண்ணார்பண்ணை

யாழ். மாநகர சபைக்குட்பட்ட குளங்களைத் துப்புரவு செய்வதற்குப் போதிய உபகரணங்கள், வாகனங்கள் இல்லாமையால் துப்புரவுப் பணிகள் தாமதமடைவதாக மாநகர சபை உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ். மாநகர சபைக்குபட்ட பகுதியில் 25 க்கு மேற்பட்ட குளங்கள் இருக்கின்றன. குளங்களில் படருகின்ற சல்பீனியா போன்ற படர் தாவரங்களை அழிப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு படகுகள் தேவையாகவுள்ளன.

இரண்டு படகுகள் உள்ளபோதும் அதில் ஒன்று உடைந்துள்ளதால் அதனைப் பயன்படுத்த முடியாதுள்ளது. குளங்களிலுள்ள தாவரங்களை அகற்றுகின்ற போது மூன்றில் ஒரு பகுதியே அகற்றமுடியும்.

குளங்களிலுள்ள தாவரங்களை முற்று முழுதாக அகற்றுவதற்குப் போதிய வசதிகள் செய்து தரப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

# எயார்ரெல் நிறுவனம் அரச ஊழியர்களுக்கு யாழ்ப்பாணத்தில் விசேட பொதி அறிமுகம்

கைதடி

எயார்ரெல் நிறுவன விற்பனை மேம்பாட்டு அதிகாரிகள் யாழ். மாவட்டத்திலுள்ள அரசதுறை அலுவலகங்களில் பரப்புரைகளையும், விற்பனைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். அரச ஊழியர்களுக்கென விசேட பொதி ஒன்றையும் அறிமுகம் செய்து வருகின்றனர்.

அடுத்த வருட ஆரம்பத்தில் யாழ்.மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 44 எயார்ரெல் தொலைத்தொடர்புக் கோபுரங்களும் '3 ஜி' சக்தியுள்ளதாக மாற்றப்படுமெனவும் கூறப்படுகிறது.

இதன் மூலம் நகரம், கிராமம் என்ற வேறுபாடின்றி சகல எயார் ரெல் பாவனையாளர்களும் இணையப் பாவனையினை மேற்கொள்ள முடியுமெனவும் கூறப்படுகின்றது. தகவல் தொழில் நுட்பத்தின் உயர் சேவையை இலங்கையின் ஏனைய மாகாணங்களைப் போல வடமாகாணத்திலுள்ளோரும் பயன்படுத்த முடியுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

# நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்களுக்கான ஒரு நாள் பயிற்சி நெறி

கைதடி

வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களுக்கான ஒரு நாள் பயிற்சிநெறி யா /வேம்படி மகளிர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது.

இரு பிரிவுகளாக நடைபெற்ற இப்பயிற்சி நெறியில் கருத்திட்ட அறிக்கை தயாரித்தல், அபிவிருத்தி தொடர்பான விடயங்களும் இடம்பெற்றன.

வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.ஜோன்சன் வளவாளராகக் கலந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் பிரபலமானவர்கள் வரிசையில்...

## யாழ்.கத்தோலிக்க ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார்

# இவரைப் பற்றி 25



யாழ்ப்பாண மண்ணில் பிறந்து மக்கள் மத்தியில் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் பிரசித்தி பெற்ற மனிதர்கள் வரிசையில் யாழ்.கத்தோலிக்க ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அடிகள் குறிப்பிடத்தக்கவராவர். 30 வருட கால போர்ச்சூழலில் மக்களோடு மக்களாக நின்று அவர்களிற்காகச் சேவையாற்றியவர். யாழ்ப்பாண மக்களின் கலை, கலாசார விழுமியங்களைக் கட்டிக் காப்பதிலும் கல்வியை மேம்படுத்துவதிலும் கண்ணுங் கருத்ததுமாய்ச் செயற்பட்டு வருபவர். இவரைப்பற்றி சில வரிகள் இங்கே.......

- மரிசால் சவரிமுத்து வரப்பிரகாசம் இம்மானுவேல் - சவிரியாச்சி தம்பதியினருக்கு பிறந்த மூன்று பிள்ளைகளில் ஒரு மகனாகப் பிறந்தார்.
- 13.07.1938 ஆம் ஆண்டு காவலூர் என்று அழைக்கப்படும் ஊர் காவற்துறையில் பிறந்தார்.
- அடிகளார் தமது ஆரம்பக்கல்வியை ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியிலும், உயர் கல்வியை யாழ்.நகரில் உள்ள புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றார்.
- ஆன்மிகத்திலும், செப வழிபாட்டிலும் நாட்டமுள்ள இவர், தனது 20 ஆவது வயதில் புனித மாட்டீனார் குருமடத்தில் குருத்துவப் படிப்பிக்காக 1953 ஆம் ஆண்டு இணைந்து கொண்டார்.
- குருத்துவ உயர் படிப்பிற்காக கண்டியிலுள்ள தேசிய குருமடத்தில் 1957 ஆம் ஆண்டு சேர்ந்து கொண்டார்.
- இவர் குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட பின்னர் 1973 ஆம் ஆண்டு பெங்களூர் சென்று மறைக்கல்வி டிப்ளோமா முடித்து வந்தார்.
- குருவான தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார் ரோம் சென்று ஊர்பான் குருத்துவப் பல்கலைகழகத்தில் 1981 ஆம் ஆண்டு விவிலிய இறையியலில் கலாநிதிப் பட்டம் பெற்று வந்தார்.
- பட்டப்படிப்பை முடித்து வந்த இவருக்கு இலங்கை கத்தோலிக்க திருச்சபையால் 1981 ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்திற்கான ஆயர் பதவி வழங்கப்பட்டது.
- மன்னார் மாவட்டம் கத்தோலிக்க மறைமாவட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் அதன் முதல் ஆயராக தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
- தன்னை முழுமையாக அறிந்து வைத்திருப்பவனால்தான் பொதுப் பணிகளில் முழு மனதோடு ஈடுபட முடியும் என்பதற்கு இணங்க ஆயரும் தன்னை ஆன்மிகத்தினூடாக ஆயத்தப் படுத்திக் கொண்டு மக்களுக்கான சமூக சேவையில் ஈடுபட்டார்.
- வட பகுதியில் உள்நாட்டுப் போரால் பல மாவட்டங்கள் ஒன்றோடு ஒன்று தொடர்பில்லாமலும், போக்குவரத்துக்கள் முற்றாகத் தடைபட்டிருந்த 1992 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மன்னாரிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு இரவு கிளாலி கடல் நீரேரி வழியாகவே ஆயரின் பயணம் அமைந்திருந்தது.
- யாழ்ப்பாணத்தில் யுத்தத்தால் பல பிரதேசங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு அதனால் மக்கள் தொடர்புகள் இல்லாது பிரிக்கப்பட்டிருந்தனர். ஆயர் அவர்கள் துணிந்து சென்று இராணுவத்தினரிடம் அனுமதி பெற்று மக்களைச் சந்தித்து ஏனைய மக்களோடு அவர்களின் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்து அக்கால கட்டத்தில் ஓர் உன்னத பணியைச் செய்தமையை யாழ். குடாநாட்டு மக்கள் இலகுவில் மறந்துவிடமாட்டார்கள்.
- 1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் பின்னர் உலகமெங்கும் சிதறுண்டிருந்த தமிழ் மக்களை ஒன்றிணைப்பதிலும், அந்தந்த நாடுகளில் அவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதிலும் அக்காலப் பகுதியில் ஆயர் அயராது பாடுபட்டமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.
- 1992 ஆம் ஆண்டு யாழ்.மாவட்ட கத்தோலிக்க திருச்சபையில் ஆயராகப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் மக்களுக்கான இவரின் பொதுப்பணி மேலும் சிறப்புப் பெற்று விளங்கியது.
- யாழ்.மாவட்ட கத்தோலிக்க ஆயர்கள் வரிசையில் இவர் 10 ஆவது ஆயராக விளங்குகின்றார்.
- செப வழிபாட்டிலும், தியானத்திலும் மிகுந்த ஆர்வமுள்ள அடிகளார் ஏனைய கத்தோலிக்க குருமார்களுக்கும், கன்னியாஸ்திரிகளுக்கும் ஒரு முன்மாதிரியாக விளங்குகின்றார்.
- காணாமற்போனவர்கள் பற்றி அறிவதற்காகவும், சிறையில் உள்ளவர்களைத் தெரிந்து கொள்வதற்காகவும் மக்கள் செஞ்சிலுவைச் சங்கத்தை நாடுவதைப் போல் ஆயரையும் நாடி வருவார்கள். அந்தளவிற்கு ஆயரின் மக்கள் பணி மேலோங்கியிருந்தது.
- சிறுவர்கள் மீது அதிக பாசமும், அவர்களின் பேச்சுக்களை கேட்பதில் ஆர்வமும் உள்ள இவர், மக்கள் சந்திப்புக்காக எங்கு சென்றாலும் அங்குள்ள சிறுவர்களுடன் சில மணி நேரங்கள் உரையாடி மகிழாமல் திரும்பமாட்டார்.
- மக்களுக்கு எதிரான அநீதிகளைக் கண்டித்துக் குரல் கொடுப்பதிலும், அறிக்கையிடுவதிலும் என்றும் துணிவோடு செயற்பட்டு வந்தார்.
- நன்றே செய் அதை இன்றே செய் என்ற பொன்மொழிக்கு இணங்க காலத்தின் தேவையை உணர்ந்து கஷ்டப்படும் மக்களுக்கு தானாகவே முன் சென்று உதவிகளைச் செய்து வந்தார்.
- 2009 ஆம் ஆண்டு வன்னி மக்கள் யுத்தத்தில் சிக்கித் தவிக்கும் போது அவர்களின் விடுவிப்புக்காக யாழ்ப்பாண மரியன்னை தேவாலயத்தில் (பெரியகோயில்) மக்களோடு சேர்ந்து உண்ணாவிரதம் இருந்தார்.
- யாழ்ப்பாணத்தில் மக்களின் அடிப் படைத்தேவைகளை அறிந்து செயற்படும் இரு தன்னார்வ தொண்டு நிறுனங்களின் முகாமையாளராகச் செயற்படுவதுடன் யாழ்.குடாநாட்டு மீனவர்களின் தொழில் தேவையை நிறைவேற்றுவதற்காக வலை உற்பத்தி தொழிற்சாலையையும் நிறுவி வருகிறார்.
- யாழ்ப்பாண மக்களின் உண்மை நிலையை அறிவதற்காக யாழ்ப்பாணம் வரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள், தென்னிலங்கை அரசியல்வாதிகள் சந்திக்க விரும்பும் ஒரு மனிதராக இன்றும் ஆயர் இருந்து வருகிறார்.
- ஒரு சமயத் துறவியின் பணி தன் சமயம் சார்ந்ததோடு மட்டும் இருந்து விடாது சமூகம் சார்ந்ததாகவும் இருக்க வேண்டும் என்பதற்கு இவர் ஓர் எடுத்துக் காட்டாக இருக்கிறார்.
- ஆயர் தனது 29 வருட ஆயர் வாழ்க்கையில் அதிக காலங்களைத் தமிழ் மக்களின் துன்பதுயரங்களைப் போக்குவதிலேயே செலவிட்டார். இன்றும் ஆயர் அவரது இல்லத்தில் சுறுசுறுப்போடும் எழிமையோடும் மலர்ந்த முகத்துடன் சாதாரண மனிதனைப்போல் மக்களுக்கான சமூக பணியிலும் சமய பணியிலும் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்.



**தொகுப்பு - அஸ்வின்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினி பிட்ஸ்




* புதுப்படங்களை ஏற்க மறுத்து வருகிறார் மீரா ஜாஸ்மின். மம்முட்டியுடன் நடிக்க வந்த மலையாள பட வாய்ப்பையும் மறுத்துவிட்டார்.
* பிரபல ஆர்ட் டைரக்டர் தோட்டா தரணி 2 பிரான்ஸ் நாட்டு படம் மற்றும் ஒரு இத்தாலி படம் என 3 வெளிநாட்டு படங்களுக்கு அரங்கம் அமைத்திருக்கிறார்.
* 15ஆம் நூற்றாண்டு பின்னணியிலான கதையைப் படமாக்குவதற்கான ஸ்கிரிப்ட் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளார் மணிரத்னம். இப்படம் கேரளாவில் படமாகிறது.
* 'அவன் இவன்' படத்தின் கிளைமாக்ஸ் காட்சியைப் படமாக்குவதில் பிஸியாக இருக்கிறார் பாலா.
* பொலிஸ் அதிகாரியாக சினேகா நடித்துள்ள 'பவானி' இம்மாதம் 24ஆம் திகதி வெளிவருகிறது.
* சமீபத்தில் டுபாய் சென்றபோது விமான நிலையத்தில் தனது அதிர்ஷ்ட பையை தொலைத்துவிட்டார் ஸ்ரேயா.
* 'மை டியர் குட்டிச்சாத்தான்' 3டி படம் 26 வருடங்களுக்கு பிறகு 'சுட்டி சாத்தான்' என்ற பெயரில் பிரகாஷ் ராஜ், சந்தானம் நடித்துள்ள புதிய காட்சிகளுடன் மீண்டும் திரைக்கு வரவுள்ளது.
* இயக்குநர் செல்வா இயக்கும் 'நாங்க' படத்தில் 15 புதுமுகங்கள் அறிமுகமாகின்றனர். இது அவர் இயக்கும் 25ஆவது படம்.
* ஹிந்தி இலக்கியத்தில் தங்கப் பதக்கம் பெற்ற பண்டிட் சுப்பிரமணியம் என்பவரிடம் நடிகர் சூர்யா இந்தி பேச பயிற்சி பெற்றாராம்.
* 6 தமிழ், 1 தெலுங்கு என 7 படங்களுக்கு இசை அமைந்து வருகிறார் யுவன் சங்கர் ராஜா.
* தமிழைத் தொடர்ந்து கன்னட படமொன்றில் நடிக்கிறார் சினேகா உல்லால். 'ஆக்ஷன் வேடங்களில் நடிப்பது தனக்கு பிடிக்காது' என்கிறார்.

## மன்மதன் அம்பு படத்திற்கு வெளிநாட்டு உரிமை 3கோடி

**கமல்ஹாஸனின்** மன்மதன் அம்பு திரைப்படத்தின் அமெரிக்க உரிமை ரூ 3 கோடிக்கு விற்பனையாகியுள்ளது. கமல் படங்களுக்கு வெளிநாடுகளில் ஓபனிங் என்பது தசாவதாரம் வரை இல்லாமல் இருந்தது. தசாவதாரத்துக்கு வெளிநாடுகளில் நல்ல வரவேற்பும் வசூலும் கிடைத்தது. இதைத் தொடர்ந்து உன்னைப்போல் ஒருவனும் வெளிநாடுகளில் வெளியானது. இப்போது மன்மதன் அம்பு படத்தின் அமெரிக்கா மற்றும் கனடா உரிமை ரூ 3 கோடிக்கு விற்கப்பட்டுள்ளது. கமல் படங்களைப் பொறுத்தவரை இது மிகப் பெரிய விலையாகும். இதற்கு முன் அவரது தசாவதாரத்துக்கு ரூ 1.5 கோடி தரப்பட்டது. கே.எஸ்.ரவிக்குமார் இயக்கியுள்ள இந்தப் படத்தில் கமல், த்ரிஷா, மாதவன், சங்கீதா, ஓவியா நடித்துள்ளனர்.

பாடல்களை எழுதி பாடி இருப்பதுடன் கவிதையும் எழுதி இருக்கிறார் கமல் அவரது லப் டொப்பில் அவர் எழுதிய கவிதைகளைப் படித்திருக்கிறேன். சிறப்பாக இருக்கும். அவற்றை விரைவாக புத்தகமாக அவர் வெளியிட வேண்டும் என கே.எஸ்.ரவிக்குமார் தெரிவிக்கின்றார்.



ரத்த சரித்



## விலைமாதுவாக நடிக்க த்ரிஷா மறுப்பு

**த்ரிஷாவை** தெலுங்கு படமொன்றில் விலைமாதுவாக நடிக்க அழைத்தனர். அதிக சம்பளம் தருவாகவும் பேசப்பட்டது. ஆனால் அதில் நடிக்க மறுத்து விட்டார். இதுபற்றி த்ரிஷா சொல்கிறார். விபச்சாரி கேரக்டர் என்பது மிகவும் சவால் நிறைந்தது. எளிதாக அதில் நடிக்க முடியாது. எனவேதான் அந்த வேடத்தில் நடிக்க நான் மறுத்து விட்டேன்.

விலைமாது கேரக்டர் செய்யும் அளவு எனக்கு இன்னும் பக்குவம் வரவில்லை. அந்த கேரக்டரில் நடிக்கும்போது இதற்கு முன் எந்த நடிகையும் அதுமாதிரி நடிக்கவில்லை என்று பெயர் எடுக்க வேண்டும். வேறு நடிகைகளும் இந்த நடிப்பை பார்த்து பயப்பட வேண்டும். அப்படியொரு துணிச்சல் வரும்போது நடிப்பேன்.

## சேட்டன் திருந்துவது போல தெரியல்லையே!

**ஜீவா** இரட்டை வேடங்களில் நடிக்கும் சிங்கம்புலி படத்தின் ஆடியோ வெளியீட்டு விழா சத்யம் திரையரங்கில் நடைபெற்றது. சினிமா வி.ஐ.பி.கள் கலந்து கொண்ட இவ்விழாவில் ஜீவாவின் நண்பர் எனும் முறையில் கலந்து கொண்டனர் ஜெயம்ரவி, ஆர்யா உள்ளிட்ட நடிகர்கள். அதில் ஆர்யா மட்டும் வாயில் சுயிங்கத்தை போட்டு மென்ற படி ஆ/ப் டிரவுசருடன் அநாகரீகமாக மேடை ஏறியது மேடையில் இருந்த வி.ஐ.பி.களுக்கு மட்டுமல்ல அந்த திரையரங்கில் குழுமியிருந்த இரசிகர்களுக்கும் அதிர்ச்சியைத் தந்தது. பால்கனியில் இருந்த ஒரு ரசிகர் ஏன் ஆர்யா உங்களுக்கு முழு பேண்ட் கிடைக்கலியா? என்று கேட்டே விட்டார். அதற்கு மேடையில் பேசும் போது பதில் அளித்த ஆர்யா துபாய் நட்சத்திர கிரிக்கெட்டில் பங்கேற்றுவிட்டு நான், ஜீவா, ஜெயம்ரவி எல்லோரும் விமானத்தில் இருந்து அப்படியே வந்து விட்டோம் அது தான் ஆ/ப்டிரவுசர் என்று சமாளித்தார். அதே விமானத்தில் வந்த ஜெயம்ரவி ஜீவா உள்ளிட்டவர்கள் எல்லாம் மேடை ஏறப் போகிறோம் என்று பேண்ட் - சட்டையுடன் உஷாராக வந்து விழாவில் கலந்து கொள்ள ஆர்யாவுக்கு அந்தபயம் இல்லாததும் எடுத்துப்போடும் / பேண்டில் ஒன்றை பேக்கில் இருந்து எடுத்து மாட்டிக் கொண்டு வர மனமில்லாததும் ஏன்? என்பது புரியாத புதிர்தான்! சமீபத்தில் ஆர்யா வெளிநாட்டில் நடந்த மலையாள பட தமிழ் பட உலகையும் தமிழ் நடிகர்களையும் அநாகரீகமாகப் பேசி அவமானப்பட்டு வரும் சுவடு மறைவதற்குள்ளாகவே வி.ஐ.பிகள் தமிழ் சினிமா மேடையையும் இவ்வாறு அவமானப்படுத்தி இருப்பது வேதனைக்குரிய விஷயம் தான்! சேட்டன் திருந்துவது போல் தெரியலையே?!



சல்மா

லண்ட
அசின், பு
விட்டார்.
சல்மான்ச
கொண்டி
பரபரப்ப
பெற்ற
காலை
செய்ய
.யாக அ
தயாரிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கம் புலி


ரம்


**ஜீவா,** திவ்யா நடிக்கும் 'சிங்கம் புலி' படம் பற்றி இயக்குனர் சாய் ரமணி கூறியது: சம பலம் வாய்ந்த இரண்டு வாலிபர்களின் கதை. மிரட்டலான டைட்டில் வேண்டும் என்பதற்காக 'சிங்கம் புலி' எனப் பெயர் வைத்தேன். மீன் வெட்டும் தொழிலாளி, வக்கீல் என இரு வேடங்களில் ஜீவா நடிக்கிறார். இப்படத்துக்காக கோவளத்தில் மீன் மார்க்கெட் செட் போடப்பட்டது. தினமும் காட்சிகள் படமாக்குவதற்காக 50 ஆயிரம் ரூபாய்க்கு மீன்கள் வாங்கிவந்து குவிப்பார்கள். காலை முதல் மாலை வரை வெயிலில் காய்ந்து அழுகிய நாற்றம் வந்துடும். இந்த மீனை யாராவது எடுத்துச் சென்று சமைத்து சாப்பிட்டால், அது நஞ்சுத்தன்மை ஆகிவிடும் என்பதால் யாரும் எடுத்துச் சென்று விடாதீர்கள் என எச்சரித்தனர். 3 நாட்கள் இந்த காட்சிகளை படமாக்கினோம். முழுக்க பொழுதுபோக்கு அம்சங்களை கொண்டே கதை அமைக்கப்பட்டுள்ளது. இதன் படப்பிடிப்புகள் முடிந்துவிட்டன.


சிங்கம் புலி

## னுடன் ஜோடிசேர அசின் மறுப்பு

ன் ட்ரீம்ஸ் படத்தில் சல்மானுடன் ஜோடியாக நடித்த ...திய படமொன்றில் அவருடன் ஜோடி போட மறுத்து ... பாலிவுட்டின் முன்னணி நடிகராகத் திகழும் ...ானுடன் நடிக்க, பிரபல நடிகைகள் போட்டி போட்டுக் ...ருக்கும் சூழலில், அசின் நடிக்க மறுத்திருப்பது பாலிவுட்டில் ...ப ஏற்படுத்தியுள்ளது. மலையாளத்தில் வெளியாகி வெற்றி ...றுபாடிகார்ட் என்ற படம், தமிழில் விஜய்- அசின் நடிப்பில் ...ாக உருவாகியிருக்கிறது. இந்தக் கதையை இந்தியில் ரீமேக் ... திட்டமிட்டிருக்கும் சல்மான்கான், படத்தின் தனக்கு ஜோடி ...அசின் நடிக்க வேண்டும் என விரும்பியிருக்கிறார். படத்தை ...க்கும் சல்மானின் தங்கை அல்விரா தரப்பினர் அசினிடம் பேசியிருக்கிறார்கள்.

ஆனால் அசின், சல்மானுடன் ஜோடி போட மறுத்து விட்டாராம். ஏற்கெனவே சல்மானுடன் லண்டன் டிரீம்ஸ் படத்தில் நடித்த அசின், தற்போது ரெடி என்ற படத்திலும் ஜோடியாக நடித்து வருகிறார். இதனால் இருவரையும் இணைத்து பல கிசுகிசுக்கள் பரவி உள்ளன. அடுத்த படத்திலும் ஜோடியாக நடிப்பதை அசின் மறுத்துவிட்டதாகக் கூறப்படுகிறது.




கந்தர்வன்

## கோடம்பாக்கம் செய்தி கேட்டீங்களா?

நயன் நடிகைக்கும் டான்ஸ் காதலனுக்கும் விரிசல் அதிகமாயிட்டு வருதாம்... வருதாம்... அதனால அம்மணி சினிமால செகண்ட் ரவுண்டுக்கு தயாராயிட்டாராம்... தயாராயிட்டாராம்... நெருக்கமான தெலுங்கு நபர் மூலமா பெரிய பேனர், பெரிய நடிகர்களுக்கு ரகசிய தூது அனுப்புறாராம்... அனுப்புறாராம்... இதனால டாப் நடிகைங்களுக்கு தலைவலி ஏற்பட்டிருக்காம்... ஏற்பட்டிருக்காம்... மூணுஷா வாய்ப்பை பறிச்சவரு, அடுத்ததா இலியோட வாய்ப்பை பறிக்க முயற்சி பண்றாராம். அவர் நடிக்க இருந்த படத்துல இப்போ நயனத்தை கேட்கிறாங்களாம்.... கேட்கிறாங்களாம்....

பிரதர் கோட்டை படத்துல நடிச்ச பல பேருக்கு, சம்பளம் முழுசா கைக்கு வந்து சேரலையாம்... சேரலையாம்... தயாரிப்புக்கு போனை போட்டா கட் பண்ணிடுறாராம்... நேர்ல போய் மனேஜர்கள் கேட்டா, நாளைக்கு இன்னைக்குன்னு இழுத்தடிக்கிறாராம்... ஆக்டிங் சங்கத்துல புகார் கொடுக்கவா, இல்லைன்னா கோட்டுக்கு படியேறவான்னு யோசிச்சிட்டு இருக்காங்களாம்... நடிச்சவங்க யோசிச்சிட்டு இருக்காங்களாம்...

இயக்குநர், கமரா மேன், இசைன்னு எல்லோருக்கும் சின்மய பாடகி ஐஸ் வைக்கிறாராம்... வைக்கிறாராம்... இதனால ஹீரோயின்களுக்கு டப்பிங் குரல் கொடுக்க பாடகிக்கு வாய்ப்பு குவியுதாம். சம்பந்தப்பட்ட நடிகைகளுக்கு போன் போட்டு அவங்க நடிப்பை புகழ்றாராம். இதில் உச்சி குளுந்துபோன உசர நடிகை தான் நடிக்கிற படங்களுக்கு அவரைத் தான் டப்பிங் பேச வைக்கணும்னு கண்டிஷன் போடுறாராம்... போடுறாராம்...


காவலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எயிட்ஸ் நோயிலிருந்து எம்மைப் பாதுகாப்பதற்கு எமது நடத்தைக் கோலங்களை நாம் கவனிக்க வேண்டும்

**பாலியல் எச்.ஐ.வி. எயிட்ஸ் தொடர்பான பிரச்சனைகளுக்கான உளவளத்துணையாளர் கந்தர் விசுவலிங்கம் கந்தவேளுடனான ஓர் நேர்காணல்.**

**கேள்வி :- யாழ் போதனா வைத்தியசாலையில் அண்மையில் எயிஸ்ட் நோயாளர்கள் இனங்காணப்பட்டதாக வெளியான செய்தி பற்றி?**

**பதில் :-** செய்தி வெளியாக முழுமுதற் காரணமாக அமைந்தவர் STI கிளினிக்கைச் சார்ந்த மருத்துவ அதிகாரியே. ஒருவரின் தொற்று நிலை பற்றிய விபரத்தை அவரிற்கு மிக இரகசியமான இடத்திலோ அல்லது நேரிலேயோ அறிவிக்க வேண்டும் என்பதுதான் பொது நியதி. இவ்வைத்தியர் பலர் முன்னிலையில் தொற்று நிலை பற்றி உரத்த குரலில் அந்நபரிற்கு அறிவித்ததுமல்லாமல் அவரது பாலியல் நடத்தைகள் பற்றியும் விமர்சித்துள்ளார். அத்துடன் சிகிச்சை களம் ஒன்றிற்கு குறிப்பிட்ட நபரை சுகாதார பரிசோதகருடன் அழைத்துச் சென்று மருத்துவ பீட மாணவர்கள், தாதிகள், பார்வையாளர்கள் முன்னிலையில் மருத்துவ நிபுணருக்கு தொற்று நிலை பற்றி பகிரங்கமாக அறிவித்துள்ளார். இச்செய்கையும் விதிகளிற்கு முற்றும் முழுதும் முரணானதே.

**கேள்வி :- சிகிச்சை வழங்கும் மருத்துவ நிபுணருக்கு தொற்று நிலை பற்றிய இரத்தப் பரிசோதனையின் முடிவுகளை STI MO அறிவிப்பது அவரது கடமைதானே? அவ்வாறான நிலையிலேயே தொற்றுக்குள்ளானவருக்கும் சிகிச்சை வழங்க முடியும். அவ்வாறு இருக்கையில் நீங்கள் மருத்துவர் மீது குறை கூறுகிறீர்களே?**

**பதில் :-** தொற்று நிலை பற்றி மருத்துவ நிபுணருக்கு அறிவித்தல் அத்தியாவசியமானதே. அவ்வாறு அறிவித்தல் மூலம் தொற்றுக்குள்ளானவரும் பயன்பெறுவர், ஏனைய வைத்தியசாலை ஊழியர்களும் தொற்றுக்குள்ளாகாது தம்மைப் பாதுகாத்திட வாய்ப்பும் ஏற்படும் என்பது உண்மை. இங்கு மருத்துவர் பலர் பேர் முன்னிலையில் இரகசியமாக வெளியிட வேண்டிய தகவலை வெளியிட்டுள்ளார். இதனால் குறிப்பிட்ட நபரை ஏனையோர் தீர்ப்புக் கூறி கரும்புள்ளி , செம்புள்ளி குத்தி, ஓரங்கட்டி, ஒதுக்கித் தள்ளுவர். பாரபட்சமாக நடந்துவர் என்பதற்கு சாத்தியக் கூறுகள் உண்டு. மேலும் ஆபத்து விளைவிக்கவல்ல நடவடிக்கையில் ஈடுபட்டவர்களும் இரத்தப் பரிசோதனைக்கு உள்ளாக முன் வரமாட்டார்கள்.

**கேள்வி :- இதற்கு முன்னர் இனங்காணப்பட்டவர் தலைமறைவாகி விட்டதாகப் பேசப்படுகிறதே அது பற்றி?**

ஒருவர் நோய் தொற்று நிலையில் அவர் விரும்பிய இடத்தில் சுகதேகி போல வாழ, பணிபுரிய உரிமையுடையவர். அவரை அவரது தொற்று நிலையின் அடிப்படையில் ஓரங்கட்டி ஒதுக்கவோ, பாரபட்சமாக நடாத்தவோ அவர் ஆற்றிய பணியிலிருந்து நீக்கவோ இயலாது. அவ்வாறு எல்லாம் நடத்துவது அவரது மனித உரிமைகளை மீறும் செயலாகும்.

எது எப்படி இருப்பினும் சமுதாயத்தில் நிலவுகிற எச்.ஐ.வி / எயிட்ஸ் பற்றிய பயம் / மறுதலித்தல்/ முத்திரைகுத்தல் (FEAR), (DENIAL), (STIGMA) என்பவற்றால் இந்நபர் எங்கோ வாழ்கிறார் என்பதை எம்மால் அறிய இயலாதுள்ளது. அவர் எங்கு வாழ்ந்தாலும் எம்முடன் 0773540099 என்னும் இலக்கத் தொலைபேசியில் தொடர்பு கொண்டால் அவரிற்கு எம்மாலான உதவிகளை நாமும் வேறு தொண்டர் ஸ்தாபனங்கள் மூலமும் பெற்றுக் கொடுப்போம். M.O பண்ணை மார்பு நோய் சிகிச்சைக்கள அதிகாரி மருத்துவ மாணவர்களுக்கு அவரது எழுத்து மூல அனுமதி பெறாது அவரது தொற்று பற்றியும், தொற்று நிலை பற்றியும் நடத்தைக் கோலங்கள் பற்றியும் விபரமாக விளக்கியுள்ளார். இதுவும் மனித உரிமை மீறலே.

**கேள்வி :- இருவரின் தொற்று நிலை பற்றிய விடயத்தில் தாங்கள் முன்னெடுத்த நடவடிக்கைகள் எவை?**

**பதில் :-** முதலாவது நபர் பற்றிய செய்தி

> ஒருவர் தொற்று நிலையில் அவர் விரும்பிய இடத்தில் சுகதேகி போல வாழ, பணிபுரிய உரிமையுடையவர். அவரை அவரது தொற்று நிலையின் அடிப்படையில் ஓரங்கட்டி ஒதுக்கவோ, பாரபட்சமாக நடாத்தவோ அவர் ஆற்றிய பணியிலிருந்து நீக்கவோ இயலாது.

பத்திரிகையில் வெளியானதும் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளரைச் சந்தித்து M.O.STD Clinic கில் அழைத்து விசாரணை ஒன்றை மேற்கொண்ட வேளை தகவல் கசிந்தமைக்கான பல்வேறு வழிகள் ஆராயப்பட்டு, இறுதியில் STD Clinic பணியாளர்கள் மூலம் ஏற்படுவதைத் தடுத்து நிறுத்த M.O.STD தான் நவடிக்கை எடுப்பதாகக் கூறினார். அவர்



கந்தர் விசுவலிங்கம் கந்தவேள்

பழியை மார்பு நோய் சிகிச்சை நிலை அதிகாரியிடம் போட்டார். நான் அம்மருத்துவரை அணுகி இது குறித்துக் கேட்டபோது மருத்துவ பீட மாணவர்களுக்கான இது சம்பந்தமாக வகுப்பு எடுத்ததை ஒப்புக் கொண்டார். அத்துடன், அவ்வாறு வகுப்பு எடுத்தது சரி என்றும் வாதாடினார். வகுப்பு எடுப்பதை தவறு என்று நான் கூறவில்லை என்றும், அந்நபரின் எழுத்து மூல அனுமதியின்றியே அவரது தொற்று நிலை பற்றியும், நடத்தைக் கோலங்கள் பற்றியும் வெளிப்படுத்தியமை தவறு என விபரமாக விளக்கினேன். எனினும் அவர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக தொற்றுக்குள்ளாகிறவர்கள் சகலரும் ஒழுக்கமற்றவர்கள் என்று தீர்புக் கூறுபவராகவே காணப்பட்டார்.

இவ்விரு மருத்துவர்களின் செயற்பாடுகள் மனித உரிமை மீறல்கள் என்பதால் மனித உரிமை ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளேன்.

**கேள்வி :- ஒழுக்கத்தினுள் ஒருவரது பாலியல் நடத்தைகளை உள்ளடக்கி தீர்ப்புக் கூறுபவர்களால் பால்வினை நோய் / எச்.ஐ.வி/ எயிட்ஸ் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட முடியுமா?**

**பதில் :-** இல்லவே இல்லை. பால்வினை நோய்/ எச்.ஐ.வி/ எயிட்ஸ் சார்ந்தவர்களில் முறையான பயிற்சியும், பணி அனுவபமும் ஆற்றலும், தொண்டாற்றும் மனப்பாங்கும் உள்ளவர்கள் எவருமே தீர்ப்பழியாது, இரகசியம் பேணி, முத்திரையிடாது, ஓரங்கட்டி ஒதுக்கித் தள்ளாது, பாரபட்சமற்று நடந்திடுவர். அவ்வாறான ஒருவர் STD யில் பணிபுரிவதற்கான நிலை வெகு விரைவில் ஏற்படும் என எண்ணுகிறேன். சுகாதார திணைக்களத்தினர் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கின்றனர் என்பதற்கான அறிகுறிகள் தோன்றுகின்றன.

**கேள்வி :- ஆண்டுதோறும் உலக எயிட்ஸ் தினம் கொண்டாடப்படுகிறதே?**

**பதில் :-** ஆக்கப்பூர்வமான முயற்சிகளில் ஒன்று எயிட்ஸ் பற்றிய பய உணர்வு இதன் மூலம் மெல்ல மெல்ல அகல்கிறது. எச்.ஐ.வி. பரிசோதனையின் மிக முக்கிய மூன்று கொள்கை பற்றி எம் மருத்துவர்கள் அதிக அக்கறை செலுத்துகின்றனர். ஏனையோரும் செலுத்த எமது RDHS உம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரும் ஆவன புரிய வேண்டும்.

(Counselling, concert, confidentiality) என்பன பரிசோதனையில் முன்னெடுக்கப்படும் வேளை ஆபத்து விளைவிக்க வல்ல நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் பரிசோதனைக்கு உள்ளாக முன்வருவார்கள். இரகசியம் பேணப்படுகிறது எனின் தொற்றுக்குள்ளானவர்களுமே ஓடி, ஒழியாது சிகிச்சை பெற்றுத் தமது மீதி வாழும் காலப்பகுதியில் வளமுடன் வாழ முற்படுவர். அர்ப்பணிப்புடனான உளவளத்துணையாளர்கள் பலர் முன்வர வேண்டும்.

**கேள்வி :- நீங்கள் ஏன் நேரிற்கு நேர் (FACE TO FACE) உளவளத்துணையை விட தொலைபேசியினுடான உளவளத்துணையிலே அதிக அக்கறையுடன் பத்தாண்டு காலமாக ஈடுபடுகிறீர்கள்?**

**பதில் :-** எம்மவர்களில் பலர் பாலியல் மூலமான சேர்க்கையின் விளைவாகவே தொற்றுக்குள்ளாகின்றனர். இவர்களில் ஆண்கள், இளவயதினர் இந்நிலை ஏற்படக் காரணமாக அமைவது பாலியல் சார்ந்த விடயங்கள் பேசாப் பொருளாக அமைந்ததாலேயே என்பது எனது எண்ணம். அப்பேசாப் பொருளை பேச வைப்பதற்கான

**நேர்கண்டவர்**
**அ.நேதாஜி**

சிறந்த உத்தியே தொலைபேசி மூலமான உரையாடல். எம்முடன் தொடர்பு கொள்பவர் தமது பெயர், இடம் பற்றி எதுவுமே கூறத் தேவையில்லை. அவரது பாலியல் நடவடிக்கைகள் பற்றி விபரமா விளக்குவதற்கான வாய்ப்பு ஏற்படுவதால் அவரது நடத்தைகளிலுள்ள ஆபத்துகளை அவர் புரிந்து கொள்ளுகிறார். அதன் பின் அவர் விரும்பின் எம்முடன் நேரிற்கு நேராகப் பங்கு பற்றுகிறார். தேவை ஏற்படின் மேலதிக நடவடிக்கையில் அவர் தானாகவோ அல்லது எமது உதவியுடனும், ஒத்தாசையுடனும் ஈடுபடுகிறார்.

**கேள்வி :- எச்.ஐ.வித் தொற்றைத் தடுத்திட சிறந்த வழிகள் என்ன என்று கூறமுடியுமா?**

**பதில் :-** ABCயைக் கடைப்பிடித்தல், பாலியல் சேர்க்கையில் ஈடுபடாதிருத்தல், நம்பிக்கையும், விசுவாசமானவருடன் பாலியல் சேர்க்கையில் ஈடுபடல், நம்பிக்கையும், விசுவாசமாகவும் துணையாளருக்கு இருத்தல், நம்பிக்கையும், விசுவாசமற்றவருடன் ஈடுபடும் வேளை பாதுகாப்புறையைப் பயன்படுத்தல் - எனினும் மிகச் சிறந்த வழி எமது நடத்தைக் கோலங்களிற்கு நாமே பொறுப்பேற்றல். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக்குடாநாட்டில் பாலியல் குற்றங்களும் பரிதாப நிலைகளும்

## சட்டமும் சமூகமும் 06




வழக்கறிஞர் பொன். பூலோகசிங்கம்

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் அமைதியான சூழலைக் கெடுத்து இயல்பு நிலை உருவாகாத படி தடுத்து நிறுத்தியுள்ள அகக் காரணிகள் பல இருக்கின்றன. இங்கு உருவாகி உள்ள குற்றச் செயல்கள் மக்களின் இயல்பு வாழ்வை கேள்விக் குறியாக்கி விடுகின்றமை வேதனை அளிக்கின்றது.

வீட்டை விட்டு வீதியில் இறங்கினால் வாகனப் போக்குவரத்து நெருசல்களால் ஏற்படும் விபத்துக்களும் அகால மரணங்களும் ஒரு புறம் அதிகரிக்கின்றன. இரவில் ஆயுதங்களோடு வீடு புகுந்து கொள்ளை அடிக்கும் இனங் காணப்பட முடியாத ஆயுதம் தரித்த முகமூடிக் கொள்ளையரின் அடாவடித்தனங்கள் இன்னொரு புறம். பாடசாலை செல்லும் சிறுமியர்களை அழைத்துச் சென்று பாலியல் குற்றம் புரியும் காமுகர்களின் கழுகுப்பார்வையிலிருந்து பிள்ளைகளைக் காப்பாற்ற ஆதங்கப்படும் பெற்றோர்கள் மறுபுறமென சமாதானக் காலத்திலும் இயல்பு நிலை இல்லாமை பல புதிய பரிமாணங்களை உருவாக்கியுள்ளன.

இதனால் சுயத்தை இழந்து முகத்தை தொலைத்துவிட்டு முகவரி இல்லாதவோர் சமூகமாக மாறும் ஒரு அபாய நிலை உருவாகியுள்ளது.

### ஜனாதிபதி சந்திரிக்காவின் முற்போக்கான செயற்பாடுகள்

1994 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவியேற்றுக் கொண்ட சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அக்கால கட்டத்தில் தென்னிலங்கையில் அதிகரித்துச் சென்ற சிறுவர் துஷ்பிரயோகங்களை முற்றாகக் கட்டுப்படுத்தும் நோக்குடன் 1995 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க சட்டத்தைக் கொண்டு வந்தார். இலங்கை தண்டனைச் சட்டக் கோவையின் முன்னைய சட்ட ஏற்பாடுகளை மாற்றியமைத்த இந்தச்சட்ட விதிகளின் அறிமுகம் சட்டத்துறை வரலாற்றிலும் சமூக வாழ்வியலின் நிலைக்களங்களிலும் முற்போக்கான நிலமைகள் உருவாக ஏது நிலையை ஏற்படுத்தியது.

சமூகத்தின் தொடர்பாடல்களுக்கும் சமூக அசைவியக்கத்திற்கும் இச்சட்டமே புதிய திறவுகோலாக அமைந்தது. இச்சட்டமே குழந்தைகள் (Children) என்றால் யார் என்பதற்கு ஒரு தெளிவான விளக்கத்தை கொடுத்தது. இலங்கை தண்டனைச் சட்டக்கோவையின் 286 ஆம் பிரிவை திருத்தி அமைத்தது. இந்த சட்ட விதிகளுக்கு கொண்டு வரப்பட்ட 286 (2) உப விதியானது குழந்தைகள் என்போர் யார் என்பதற்கு பின்வருமாறு சட்ட வியாக்கியானமும் விளக்கமும் கொடுக்கின்றது.

"CHILD" Means A Persons Under EIGHTEEN Years of Age"

'18 வயதிற்குட்பட்டவர்கள் யாவருமே குழந்தைகள் ஆவார்கள்'

இதன்படி 18 வயதிற்குட்பட்டவர்கள் யாவருமே குழந்தைகள் ஆவார்கள் என்றபடியால் ஆணோ, பெண்ணோ திருமணம் செய்து கொள்ள முடியாது. இருபாலார்க்கும் உரிய திருமண வயதை இச்சட்டமே தீர்மானிக்கின்றது. இதன் படி 18 வயதிற்குட்பட்ட எவரது திருமணத்தையும் திருமணப் பதிவாளர்கள் பதிவு செய்வதை சட்டம் முற்றாகத் தடை செய்கின்றது.

இதன் படி 18 வயதிற்குட்பட்டவர்கள் மீதான மனிதவதைகள் யாவும் சிறுவர் துஷ்பிரயோகம் கொடுமைகள் என வரையறுக்கப்பட்டுள்ளது.

"THE OFFENCE OF CRUELTY TO THE CHILDREN" என்பதே சட்டம் சொல்லும் செய்தியாகும்.

இலங்கைத் தண்டனைச் சட்டக் கோவை 365 ஆம் பிரிவிற்கு கொண்டுவரப்பட்ட திருத்தத்திற்கு பின்வருமாறு சட்ட விளக்கம் கொடுக்கப்படுகின்றது.

'முறைகேடான பாலியல் உறவை 18 வயதிற்கு மேற்பட்ட ஒரு ஆணும் 16 வயதிற்கு கீழ்பட்ட பெண்ணும் பெண்ணின் சம்மதத்துடன் அல்லது அவளின் விருப்பத்திறகு மாறாக உடலியல் ரீதியான தொடர்பு (PHYSICAL CONTACT) வைத்துக் கொண்டால் அந்த நபர் தகுதி வாய்ந்த நீதி மன்றம் ஒன்றினால் குற்றவாளியாகக் காணப்படின் நீதிமன்றினால் 10 வருடங்களிற்கு குறையாமலும் 20 வருடங்களுக்கு மேற்படாமலும் அவர் மீது கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்படும். அத்தோடு அவருக்கு நீதிமன்றம் குற்றப் பணமும் அறவீடு செய்யும் இதற்கு மேலாக இவரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களிற்காக நட்டஈடு பெற்றுக் கொடுக்கப்படும் அதிகாரமும் நீதி மன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது' இதுவே சட்டம் சொல்லும் செய்தி இதுவேயாகும்.

இந்த சட்ட ஏற்பாட்டின் பிரகாரம் 16 வயதிற்குட்பட்ட ஒரு பெண்ணை திருமண பதிவு செய்ய முடியாது. அந்தப் பெண்ணை வழக்காற்று திருமணமும் செய்ய முடியாது.

16 வயதிற்குட்பட்ட ஒரு பெண்ணை ஒரு ஆடவன் வழக்காற்று திருமணம் செய்த பின்னர் அவளை மனைவி என்ற முறையில் கணவன் அவளது சம்மதத்துடனோ அல்லது சம்மதம் இன்றியோ பாலியல் உறவு வைத்துக்கொண்டால் அவன் கணவனே ஆனாலும் முறைகேடான பாலியல் உறவாகவே இதனை சட்டம் நோக்கும். இதனால் அந்த ஆண் 16 வயதிற்குட்பட்ட பெண்ணை முறைகேடான பாலியல் உறவிற்கு உட்படுத்தினார் என்ற குற்றச் சாட்டின் பெயரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்படும் போது அவர் மாஜிஸ்ரேட்களால் விளக்கமறியலில் வைக்கப்படுவார். இதுவே தற்போதுள்ள சட்ட ஏற்பாடாகும்.

**(தொடரும்)**

சட்டம் தொடர்பான உங்கள் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**
**யாழ் ஓசை**
**வீரகேசரி கிளைக் காரியாலயம்,**
**117, புகையிரத வீதி, யாழ்ப்பாணம்.**

## தீர்ப்பு

*எம்மில் பலருக்கும் இயல்பாய் எழும் கேள்வி*
*எமக்கு மட்டும் ஏனிந்த நிலமை? – ஆனால்*
*நம்மில் பலருக்கும் நடப்பது தெரியாது*
*எம்மிடமிருந்தே இவை உருப்பெற்றதொன்று*

*வசந்தங்கள் என்று பல திட்டங்கள் வந்தது –வாழ்வின்*
*இருந்த வசந்தத்தையும் அது வாரிக் கொண்டது*
*இளைஞருக்காய் நாளை என்று சொல்லியே பல*
*இளைஞரின் இன்றுகள் இல்லாமற் போயின*

*இரவு நேரத்தின் இன்னிசைகளிடையே பல*
*பெண்களின் அழுகுரல் பின்னிசையாய் கேட்குது*
*மதுவரி, பெருவிதிச் சட்டங்கள் கூட*
*இது போன்ற நேரத்தில் இளகியே போகுது*

*பிரபலம் இறந்த பின்னும்*
*பெருங்கவலை கண்ணீர் இங்கு*
*பசி கொண்டவனுக்கில்லை ஒரு குவளை தண்ணீர்*
*மூர்ச்சையானவனிற்குதவி எனக் கேட்டால் நம்*
*மூச்சே நின்று விட விலைபேசும் வண்டிக்காரன்.*

*அவலங்கள் கண்டு வந்த அகதியிடம் கூட*
*அறுக்கத் திரியுது மனிதமில்லாதொரு வகையினம்*
*புடம் போடாப் பதைகளே புவி நெடுக இருப்பதினால்*
*பள்ளிப் பயிர் கூட பருவம் தப்பி*
*பலா பலனைத்தருகிறது*

*இப்படி எடுக்காத வடிவமெல்லாம் எடுக்கிறது*
*மனித பரிணாமக் கூர்ப்பு*
*இதற்கெலாம் இருக்கவே இருக்கிறது*
*ஒரு பரிணமிக்கும் தீர்ப்பு*

**ஆர்.ஜே. பிரகலாதன்**
**(உடுவில்)**

## வாசகர் ஓசை

வீரகேசரி பிரசவித்திருக்கும் 'யாழ் ஓசை' எனும் குழந்தைப் பத்திரிகையே எனது வரவு யாழ்.நகருக்கு நல்வரவாகுக! யாழ்.மக்களின் நீண்ட நாள் கனவு நனவாகியது. 'யாழ் ஓசை' வெளிவரத்தொடங்கிய நாளிலிருந்து அதன் அபிமான வாசகருள் நானும் ஒருவன். அதிக பக்கங்களுடன், குறைந்த விலையில் நடுநிலை தவறாது உண்மைச் செய்திகளை வெளியிடும் நீ தவழ்ந்து, வளர்ந்து எத்தகைய இன்னல்கள் வந்தாலும் தயங்காது மக்கள் மன நிலை நீடுழி நிலைபெற உன்பணி தொடர என் இதய பூர்வமான நல்வாழ்த்துக்கள்.

**க.கனகசபை**
**கலாஜோதி புத்தக நிலையம்**
**பிரதானவீதி, சங்கானை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி 05

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | ■ | 07 |
| 08 | ■ | 09 | ■ | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | ■ | 19 | 20 |
| ■ | 21 | ■ | 22 | ■ | 23 | 24 | ■ |
| ■ | 25 | 26 | 27 | ■ | 28 | ■ | 29 |
| 30 | 31 | 32 | ■ | 33 | 34 | 35 | 36 |
| 37 | ■ | 38 | 39 | 40 | ■ | 41 | |
| ■ | 42 | 43 | ■ | 44 | 45 | 46 | 47 |

**இடமிருந்து வலம்**

01. ஆஞ்சநேயரின் அம்மா
10. மிக வேகம்
14. இந்திய வார இதழ்/மங்கலப் பொருள்
19. நிலம்
23. ஒரு மரத்திலிருந்த வேறு மரத்திற்கு போ
25. நட்சத்திரங்களில் ஒன்று
30. நெற்றியில் அணிவது/அப்பரின் சூல நோய் நீக்கியது
33. நிலா
38. லவன், குசன் தந்தை
42. வெளிச்சம்
44. பூமி

**மேலிருந்து கீழ்**

1. விநாயகர் வழிபாட்டுக்குத் தேவையானது.
3. கடலில் உள்ளது மீனில்லை; கோயிலில் ஒலிப்பது மணியில்லை.
5. உடல்
7. நான்கு கால்களிருந்தும் நடக்க முடியாதது.
12. வீட்டைக் காப்பது.
15. எய்தவனிடம் மீள வரும் ஒரு ஆயுதம் (தலைகீழ்)
17. இதை குரங்கிற்கு ஒப்பிடுவர்.
23. ஒரு இசைக்கருவி.
26. கண் உள் உறுப்பு.
29. திருமணத்திலன்று மாப்பிள்ளை கட்டுவது
30. பயிரின் உயிர்
35. நீர் (குழம்பியுள்ளது)

**குறுக்கெழுத்து போட்டி 03க்கான விடைகள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஆ | ரோ | க் | கி | ய | ம் | ■ | வ |
| ரா | ஜா | ■ | ர | ம் | யா | ■ | ம் |
| த் | ■ | த | க | மை | ■ | சு | ப |
| தி | ர | வ | ம் | ■ | வ | ய | து |
| ■ | த் | ம் | ■ | ஈ | ர | ம் | ■ |
| வி | னா | ■ | தி | ரு | ம் | பு | ■ |
| ரு | ங் | வா | க | ள் | ■ | ■ | னி |
| து | கி | ல் | ■ | ளி | கா | க் | த |

## பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகள்

1. **திருமதி தமிழினி விஜயகுமார்**
வழக்கம்பரை,
தொல்புரம், சுழிபுரம் .
2. **திருமதி றோ.ம.தயானந்தன்**
15 ஆம் மைல் கல்,
உடுப்பிட்டி.
3. **கே.அரசேஸ்வரன்**
கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு
நல்லூர், யாழ்ப்பாணம்.

**குறுக்கெழுத்துப் போட்டி 05 க்கான விடைகளை எழுதி ஒரு வாரத்திற்குள் எமக்குக் கிடைக்கக்கூடியதாக தபால் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும்.**

**அனுப்பவேண்டிய முகவரி**

**குறுக்கெழுத்துப் போட்டி**
**யாழ் ஓசை வீரகேசரி கிளைக்காரியாலயம்,**
**117, புகையிரத நிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**

பாராட்டுப்பெறும் முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் பிரசுரிக்கப்படும்.

# யாழ்ப்பாண நாட்டின் வரலாற்று கதாநாயகன்

# பூதத்தம்பி

05

(சென்ற வாரத் தொடர்ச்சி)

3. அந்திராடோ மட்டுமல்ல, பூதத்தம்பியும் கிறிஸ்தவன் தான் (கிறிஸ்தவ மதத்தினை தழுவியபடியால் தான் ஒல்லாந்த அரசுப் பணியில் கடமையாற்ற முடிந்தது. டொன் லூயிஸ் பூதத்தம்பி என்பது அவனது பெயர். பெயரளவில் கிறிஸ்தவனாகவும் உள்ளத்தளவில் சைவனாகவும் வாழ்ந்துள்ளான். நல்லூர் கந்தசுவாமி கோவிலை மீண்டும் எடுப்பித்தவர் டொண் ஜூவான் மாப்பாண முதலியார் ஆவார். (காரியத்திற்காக மத வேஷமிட்டவர்கள்.)

4. அந்திரேடோவாவை 'கரையான்' என்று இகழ்ந்து பூதத்தம்பி நாடகக்காரர் தாவீது பாடியது வீண். அதற்காக யாழ்ப்பாணத்து குருகுல மக்கள் கொந்தளித்ததும் வீண் ஏனெனில், அந்திரேடோ யாழ்ப்பாணத்தவர் அல்லர். ஒரு சிங்களவர்.

நம்பகத்தன்மையான வரலாறு

போத்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் நல்லூரில் வாழ்ந்த பெருமகன் புவிநாயக முதலியார் ஆவார். அவர் நல்லூர் பிரதேசத்திற்கு மட்டுமன்றி யாழ்ப்பாணம் முழுவதற்கும் முதலியாராக விளங்கியமையால் 'இராசவாசல் முதலியார்' எனப்பட்டார்.

யாழ்ப்பாணக் கோட்டை போத்துக்கேயரின் நிர்வாக மையமாக விளங்கியது அதனால் யாழ்ப்பாணக் கோட்டை இராசவாசல் எனப்பட்டது. அவருடைய மகன் பூதத்தம்பி ஆவார். அவன் கச்சாய் வன்னிமை கயிலாய பிள்ளையின் சகோதரியை மணந்திருந்தான்.

புவிநாயக முதலியாரின் மரணத்திற்குப் பின்னர் போதுக்கேயர் காலத்திலேயே யாழ்ப்பாணத்தின் இராசவாசல் முதலியாராக பூதத்தம்பி விளங்கியிருக்கவேண்டும். ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி அரசுப் பொறுப்பினை ஏற்ற போது பூதத்தம்பி அரசிறைக்குப் பொறுப்பான முதலியாராகப் பணியாற்றியுள்ளார்.

போர்த்துக்கேயரின் ஆட்சியின் கீழிருந்த யாழ்ப்பாண அரசினைக் கைப்பற்றும் அவாவுடன் 1658 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் திகதி ஒல்லாந்தத் தளபதி றைக்கிளோப் பான்ஸ் தனது படையுடன் யாழ்ப்பாணக் கோட்டையை முற்றுகையிட்டான். அம் முற்றுகையை ஜூன் மாதம் 21 ஆம் திகதி வரை 107 நாட்கள் நீடித்தன. கோட்டைக்குள்ளிருந்த உணவுப்பொருட்கள் அனைத்தும் தீர்ந்ததும் போர்த்துக்கேயர் கோட்டையை ஒல்லாந்தரிடம் கையளித்துச் சரணடைந்தனர். சரணடைந்த போர்த்துக்கேயர்களைக் கப்பல்களில் ஏற்றிக் கோவாவிற்கும் பத்தேயாவிற்கும் அனுப்பி வைத்தனர். போர்த்துக்கேயக் கன்னிகளையும் விதவைகளையும் தடுத்துத் தம் மனைவியராக்கிக்கொண்டனர். போர்த்துக்கேயப் படையில் வேலை செய்த பலர் ஒல்லாந்தருக்கு விசுவாசமாக இருக்க ஒத்துக்கொண்டனர். மலபார் வீரர்களில் பலரும் போர்த்துக்கேயப் பறங்கிகளில் சிலரும் அவ்வாறு சேவையில் தொடர்ந்திருக்க ஒப்புக்கொண்டனர். போர்த்துக்கேயர் அரசின் யாழ்ப்பாண சுதேச முதலியார்களும் மாற்றமின்றி ஒல்லாந்தர் அரசிலும் தொடர்ந்து சேவையாற்றினர். அதற்காகக் கிறிஸ்தவ மதத்தையும் ஏற்றுத் தம் பெயர்களுடன் கிறிஸ்தவ நாமத்தையும் இணைத்துக் கொண்டனர். பூதத்தம்பி முதலியாரும் தன் பெயருடன் அரசுப் பணிக்காக டொன்லூயிஸ் என்ற நாமத்தினை இணைத்துக்கொண்டார்.

அவனுக்கு யாழ்ப்பாணம் மாறிமாறி அந்தியர் வசமாவதும் அவர்களால் அடக்கி ஆளப்படுவதும் பிடித்தமாகவில்லை. போர்த்துக்கேயராட்சியைச் சிறுவனாகவிருந்த போது ஏற்ற அவனால் இளைஞனான நிலையில் ஏற்க முடியவில்லை. போர்த்துக்கேயரைத் துரத்திவிட்டு ஒல்லாந்தர் யாழ்ப்பாண அரசினைப் பொறுப்பேற்றதும் அவன் சுதந்திரம் இழந்த நிலையை எண்ணித் துயரப்பட்டான். ஒல்லாந்தரின் ஆட்சியை விரைவில் முடிவிற்குக் கொண்டு வரவிரும்பினான். அதற்குக் கல்தேறா என்ற சுதேச கத்தோலிக்கப் பாதிரியார் உதவிக்கு வந்தார்.

**கலாநிதி க.குணராசா**

ஒல்லாந்துப்படை வீரர்களுடன் கூடவே வந்திருந்த பால்தேயஸ் பாதிரியார், யாழ்ப்பாணத்தை ஒல்லாந்தர் கைப்பற்றி யாழ்ப்பாணக்கோட்டைக்குள் புகுந்ததும் ஆற்றிய முதல் காரியம், போர்த்தக்கேயரின் கத்தோலிக்க தேவாலயத்தினைப் புரட்ஸ்தாந்து தேவாலயமாகச் சமயச் சுத்திகரிப்பு செய்து முதலாவது நன்றிப் பிரார்த்தனையை நடாத்தியதாகும். கத்தோலிக்க பாதிரிமாரும் தமது சமயத்தினைக் கைக்கொள்ளப் பெருந்தடை வந்திருப்பதை உணர்ந்தனர். படிப்படியாகக் கத்தோலிக்க தேவாலயங்கள் புரட்டஸ்தாந்துச் சமயத் தேவாலயமாகச் சுத்திகரிப்பின் பின் மாற்றப்படவிருப்பதைப் புரிந்து கொண்டனர். ஆரம்பித்திலேயே ஒல்லாந்தரின் இறுக்கமான கத்தோலிக்க குருமாரை ஒல்லாந்தருக்கு எதிராக வெறுப்படைய வைத்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் மாறும் யாழ்ப்பாணக் கலாசாரம்

அன்று ஞாயிற்றுகிழமை விடுமுறை நாள் என்பதால் எனது உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் செல்வதற்கென பஸ்ஸிற்காக காத்திருந்தேன். பஸ் வருகை நெடுநேரம் தாமதித்ததால் அருகில் இருந்த தேநீர்க்கடை ஒன்றிற்குச் சென்று தேநீர் அருந்திக்கொண்டிருந்தேன். அவ்வேளையில் இரு இளைஞர்களின் சம்பாசனைகள் எனது காதுகளுக்கும் எட்டியது.

ஊர்ப் புதினம் அறிவதென்றால் அதுவும் மற்றவர்களைப் பற்றியதென்றால் எமது தமிழ்ச்சமூகத்திற்கு நிகராக முடியாது என்றபடியால் அவர்களின் உரையாடலில் இடம்பெற்ற சில சுவாரசியமான சம்பவங்கள் எனது காதுகளையும் தழுவியது. தேநீர் குடிக்கும் சாக்கில் அவர்களின் சுவாரசியமான சங்கதிகளைக் கேட்டதனால் பஸ்ஸைத் தவறவிட்டது வேறுவிடயம். அவ்விளைஞர்களின் உரையாடலின் சுருக்கத்தை வடிகட்டி உங்களுக்குத் தருகிறேன். அந்த பிரபல மகளிர் பாடசாலை ஒன்றில் படிக்கும் உயர்தர வகுப்பு மாணவியுடன் இன்னொரு ஆண்கள் பாடசாலையில் படிக்கும் உயர்தர வகுப்பு மாணவனுக்கு காதலாம். ஆனால் பிரஸ்தாப பெண்பிள்ளையின் மீது வேறு இளைஞர்களும் கண் வைத்திருந்தார்களாம். எது எப்படியோ, அந்த மாணவி தனது முதல் காதலனான குறித்த மாணவனுடனேயே மையல் கொண்டிருந்தாளாம். இதை சகித்துக் கொள்ள முடியாத மற்ற இருவரும் அந்த மாணவியைப் பழிவாங்கத் துடித்தார்களாம். இதற்குக் காலமும், நேரமும், சூழலும் கனிந்து வரவே குறிப்பிட்ட மாணவி தனது நிஜக் காதலனுடன் காதல் என்ற இன்ப வெள்ளத்தில் திளைத்திருக்கையில் அந்த (அலங்கோல) காட்சிகளை இரகசியமான முறையில் தமது செல்போன் கமராவுக்குள் சிக்கவைத்துக்கொண்டார்கள்.

பிறகு சொல்லவா வேணும்? அவர்களது காதல் லீலைகள் அடங்கிய காட்சிகள் சக வகுப்பு மாணவர்களின் செல்போன்களுக்கு அனுப்பி இப்படி அந்த அசிங்கமான காட்சிகள் பலரது செல்போன்களுக்குள்ளும் புகுந்து விளையாடியதாம். இதுதான் அந்த இளைஞர்கள் கூறிய விடங்களின் சுருக்கமான பகுதி.

இப்படியாக யாழ்.குடாநாட்டுப் பெண்களின் ஒழுக்கத்துடனும் எதிர்கால வாழ்க்கையுடனும் விளையாடும் பல சம்பவங்கள் படக்காட்சிகள் வடிவில் தாராளமாகவே உலாவருவதாகப் பரவலாகப் பேசப்பட்டுவருகின்றது.

தற்போது நவீன தொழில் நுட்ப வளர்ச்சியினால் ஒருபுறம் நன்மையான விடயங்களை அறுவடை செய்தாலும் மறுபுறம் தீமையான விளைவுகளும் தொடரவே செய்கின்றன. இது குறித்து நாம் தெளிவுடனும், விழிப்புடனும் இருக்கத் தவறினால் எமது அப்பாவிப் பெண்களின் வாழ்வு மிலேச்சத்தனமான முறையில் சூறையாடப்படுவதை யாராலுமே தடுக்கமுடியாது போய்விடும். பெரும்பாலான அப்பாவிப்பெண்கள் தனது காதலுடனோ அல்லது ஆண்துணை ஒருவருடனோ நெருக்கமாக இருக்கும் அலங்கோல காட்சிகளை சிலர் நயவஞ்சகத்தனமாக இரகசியமான முறையில்

> மாணவி தனது நிஜக் காதலனுடன் காதல் என்ற இன்ப வெள்ளத்தில் திளைத்திருக்கையில் அந்த (அலங்கோல) காட்சிகளை இரகசியமான முறையில் தமது செல்போன் கமராவுக்குள் சிக்கவைத்துக் கொண்டார்கள்.

செல்போன் கமராவுக்குள் மிகவும் கச்சிதமாக சிக்கவைத்து விடுகின்றனர்.

இத்தகைய காட்சிப்பதிவுகள் அப்பெண்களுக்கு தெரிந்தோ அல்லது அவர்களின் சம்மதத்துடனோ எடுக்கப்பட்டிருக்கலாம் என்பது வேறுவிடயம். இத்தகைய பல அப்பாவிப்பெண்களின் கற்பை, வாழ்க்கையைக் காவுகொள்ளும் காட்சிகள் பலரது செல்போன்களுக்குள்ளும் ஊடுருவிப்பரவுவதால் எமது தமிழ்ப் பெண்பிள்ளைகளின் வாழ்வு சூனியப்படுத்தப்படுகின்றது. இது எமது ஒட்டுமொத்த பெண் குலத்திற்கே இழுக்கான விடயமாகும். எனவே இது குறித்துப் பெண்கள் அவதானத்துடனும் விழிப்புடனும் இருக்கவேண்டும் என வலியுறுத்துகின்றோம்.



இது இவ்வாறிருக்க முன்னரெல்லாம் யாழ்ப்பாணத்துப் பெண்களின் நிலை மிக உன்னத இடத்தில் இருந்தது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற மகோன்னத வாழ்க்கை முறை அன்று யாழ்ப்பாண வாழ்வியலில் பின்னப்பட்டிருந்தது.

நகைச்சுவை நடிகர் விவேக் ஒரு படத்தில் ஒரு கட்டத்தில் குறிப்பிடும் வசனங்கள் இங்கு சிந்திக்கற்பாலது. தான் திருமணம் செய்வதாக இருந்தால் கற்புள்ள ஒழுக்கமான ஒரு தமிழ்ப் பெண்ணைத்தான் திருமணம் செய்வேன். இதற்கு இந்தியாவில் அதாவது தமிழ் நாட்டில் கூட ஒழுக்கம் மிக்க ஒரு பெண்ணைத் தேடுவதென்பது அரிது. ஏனைய நாடுகளிலும் இதே நிலைதான். ஆனால் கற்பு நிறைந்த ஒழுக்கமான பெண் ஒருத்தி இருப்பாளெனில் அது யாழ்ப்பாணத்தில்தான் சாத்தியப்படும் என்கிறார். நடிகர் விவேக்கின் நகைச்சுவைகள் சிரிப்பை வரவழைப்பவையாக இருப்பினும் சிந்திக்கத் தூண்டுபவையாகவும் உள்ளவை. அப்படிச் சிந்திக்க வைக்கும் நகைச்சுவையூடாக யாழ்ப்பாணப் பெண்களை உயர்ந்த இடத்தில் வைத்துப் பார்க்கிறார். ஆனால் அவர் இத்தகைய அலங்கோலக் காட்சிகளை கண்டால் நிச்சயம் மனம் வெதும்புவார் என்பதில் சந்தேகமில்லை.

இன்றைய சூழமைவில் எந்த ஒரு ஆணும் சரி பெண்ணும் சரி நூறு வீதம் தப்புச் செய்யாதவர்கள் என்று கூறமுடியாது. உடலாலோ சரி மனதாலோ சரி தப்பு செய்தவர்கள் தான். இதனால்தான் ஒரு கவிஞர் கூறுகிறார் 'எல்லாப் பெண்களும் ஒரு வகையில் விபச்சாரிகள்தான் எனது தாயைத்தவிர' என்கிறார். தனது தாயைக் கேவலப்படுத்த எந்தவொரு உயிரும் விரும்புவதில்லை என்றபடியால் தனது தாயைத்தவிர அனைவரும் விபச்சாரிகள் என்கிறார்.

யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரை பெண்கள் முன்னர் வீதிகளில் அநாவசியமாக செல்லமாட்டார்கள். ஆனால் தற்போது எங்கும் எப்பவும் பெண்களைக் காணலாம் என்ற நிலை தோன்றியுள்ளது. தேவையில்லாமல் கண்ட கண்ட இடங்களில் தமது தோழியருடன் சேர்ந்து ஊர் சுற்றுவது. சினிமாப்படம் பார்க்கத் திரையரங்குகளுக்குச் செல்வது, எதிர்ப்பாலினரைக் கவர்வதற்காக அளவுக்கதிகமான அலங்காரங்கள், உடை அலங்காரங்கள் செய்வது, தேவையில்லாமல் ஆண்களுடன் அரட்டை அடிப்பது என யாழ்ப்பாணத்திலுள்ள பெண்களுக்கே இருக்கக் கூடாத பல தீய நடத்தைகள் தற்போது அரங்கேறி வருவது சமூக ஆர்வலர்களின் மனங்களில் நாராசமாக வந்து விழுகின்றன. குடாநாட்டில் தற்போது சட்டம் ஒழுங்குகள் மிகவும் சீர்கெட்டு வருகிறன. என்னவும் செய்யலாம்; எப்படியும் வாழலாம் என்ற மனநிலை மக்களின் மனங்களில் வேர்விட்டுள்ளது.

இன்று நாம் சுயநலவாதிகளாக அதிக சொத்து சுகத்திற்கு ஆசைப்பட்டும் பட்டம் பதவிகளுக்கு அடிமைப்பட்டும் எதையும் செய்யலாம் என்ற மனநிலையில் காணப்படுகின்றோம். அந்தளவிற்கு எமது கலாசார விழுமியங்கள், பண்பாட்டுக் கோலங்கள் எல்லாம் சிதைவடைந்து சென்று கொண்டிருக்கின்றன. இதனைத் தடுக்க வேண்டிய தட்டிக்கேட்க வேண்டிய பொறுப்பு அனைவரிடத்தும் உண்டு. எமக்கு ஏன் வீண்வேலை என்று தட்டிக்கழிக்கும் மனப்பான்மையிலிருந்து நாம் முற்றாக விடுபட வேண்டும். அத்துடன்,

குடாநாட்டு பெண்பிள்ளைகள் விடயத்தில் பெற்றோர்கள் விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியமாகும். இல்லையேல் மேற்படி சம்பவங்களைப்போல பல சம்பவங்கள் நடைபெறுவதைத் தடுக்கமுடியாது.

இந்நிலை மேலும் தொடருமேயானால் வேண்டத்தகாத கர்ப்பத்திற்கும் அதன் வழி சிசுக்களை தெருவோரத்தில் வீசி விட்டுச் செல்லும் பாதகத்திற்கும் வித்திடும் என்பதை பெண்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

எனவே, இளைஞர்களே புனிதமான தாம்பத்திய உறவை அதாவது அந்தரங்கமாக நாலு சுவர்களுக்குள் நடக்கும் இரகசிய உறவை பரகசியப்படுத்தி கேவலமாக்க முயலாதீர்கள் என்பதே இவ்விடத்தில் நாம் விடுக்கும் தாழ்மையான வேண்டுகோள். இது விடயத்தில் பெண்கள் தான் அதிக வழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். ஏனெனில் சமூகத்தின் பார்வையில் பெண்கள் தான் அதிகம் சிரத்தைக்குரியவர்களாக விளங்குவதால் சமூகத்தின் பார்வை இவர்கள் மீதே குவிகின்றது. எனவே எமது இனத்தின் இருப்பை நிலைபெறச் செய்திடப் பாடுபடவேண்டும்.

உதிஷ்டிரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவினால் நடத்தப்பட்டுவரும் பயிற்சி செயலமர்வு

(சம்மாந்துறை மேலதிக நிருபர்,)

நீதி அமைச்சின் கீழ் இயங்கும் மத்தியஸ்த சபையின் ஆணைக்குழு மத்தியஸ்தம் பற்றி பயிற்சி செயலமர்வு ஒன்றை நடத்தவிருக்கின்றது. எதிர்வரும் 13 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதிவரை கொழும்பு ஆசியா மன்ற நிறுவனத்தில் இந்த பயிற்சி செயலமர்வு நடைபெறவிருக்கின்றது.

இந்த பயிற்சிசெயலமர்வு விசேட பயிற்றுவிப்பாளர்களைக் கொண்டு நடத்தப்படவிருப்பதாக மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் பதில் செயலாளர் ஏ.கே.டி.டி.டி.அறந்தற தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த பயிற்சி செயலமர்வில் பங்குபற்றுவதற்கென நிந்தவூர் மத்தியஸ்தசபையின் தவிசாளரும் தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளருமான ஏ.ஜமால்தீன் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் இந்த அரியவாய்ப்பைப் பெறும் ஒரேயொரு மத்தியஸ்த குழாம் (சபை) தலைவர் இவரேயாவாரென பதில் செயலாளர் அறந்தற அறிவித்துள்ளார்.

தவிரவும் நீதியமைச்சின் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் கீழ் சுமார் முந்நூறுக்கு மேற்பட்ட மத்தியஸ்தசபைகள் நாடளாவிய ரீதியில் சிறப்புற இயங்கி வருகின்றன.

பிணக்கில் சம்பந்தப்பட்ட இருசாராரையும் திருப்திப்படுத்தக்கூடிய வகையில் இணைக்கப்பாட்டுடன் கூடிய தீர்வினை வழங்குவதில் மத்தியஸ்த சபைகள் பெரும் பங்கு வகிக்கின்றன.

காலதாமதத்தையும்,செலவீனத்தையும் குறைத்துப் பிணக்குகளுக்கு விரைவான தீர்வைக் காண்பதில் மத்தியஸ்தசபைகள் பெரும் பங்கு வகிப்பதுடன், மத்தியஸ்த சபைகளின் செயற்பாடு நீதிமன்றங்களின் சுமைகளைக் குறைப்பதிலும் பாரிய பங்கினை வகித்து வருகின்றது.

இதேவேளையில் நிந்தவூர் மத்தியஸ்த சபையின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் திறம்படச் செயற்பட்டு வருவதுடன் முழு தியாக உணர்வோடு, மக்களோடு மக்களாக ஒன்றாகக் கலந்து மக்களின் பிணக்குகளை இனம் கண்டு இணக்கப்பாட்டுடன் தீர்த்து வைப்பதிலும் வெற்றி கண்டுவருகின்றனர்.

நிந்தவூரில் தற்பொழுது சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ. ஜமால்தீனை தவிசாளராகக் கொண்டு இயங்கும் மூன்றாவது மத்தியஸ்தசபை 38 உறுப்பினர்களைக் கொண்டு சிறப்புற தன் பணிகளை முன்னெடுத்துவருவது குறிப்பிடத்தக்கது.

சிறந்த தலைமைத்துவம், உறுப்பினர்களிடையேயான பரஸ்பர நல்லுறவும், ஒற்றுமையும், சேவைமனப்பாங்கும் நிந்தவூர் மத்தியஸ்த சபையின் வெற்றிக்கு உரமூட்டியுள்ளதெனப் பல முக்கியஸ்தர்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

# பாண்டிருப்பு கிராமத்திற்கு பொதுநூலகம் அமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை

துறைநீலாவணை,

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பாண்டிருப்பு கிராமத்தில் பொது நூலகம் ஒன்று இன்மையால் இவ்வூரில் உள்ள வாசகர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் போன்றோர் பெரும் சிரமங்களுக்கு ஆளாவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

கல்முனை மாநகரில் உள்ள வரலாற்றுப் பெருமை கூறும் திரௌபதை அம்மன் ஆலயம் அமைந்துள்ள புகழ் பெற்ற கிராமமாகவும், பெரும் எண்ணிக்கையிலான மக்கள் வாழும் கிராமமாகவும், உலகறிந்த தமிழ் எழுத்தாளர்களான கவிஞர் சண்முகம் சிவலிங்கம், உமாவரதராஜன், அமரர் பாண்டியூரான் போன்ற பிரபலங்கள் வாழ்ந்த மண்ணில் இதுவரை காலமும் பொது நூலகம் இன்மை பெரும் குறையாகவே உள்ளது.

இவ் விடயம் தொடர்பாக கல்முனை மாநகர சபை ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டு வந்த போதும் இவ் விடயம் தொடர்பாக கல்முனை மாநகர சபையில் அங்கம் வகிக்கும் மாநகர சபை உறுப்பினர்கள் எவரும் பாண்டிருப்புக்கு பொது நூலகம் இல்லையென்று சுட்டிக் காட்டவில்லை என்றும் எதிர்காலத்தில் உரிய கோரிக்கை முன்வைக்கப்பட்டால் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுப்பதாக கூறியுள்ளார்.

எனவே, கல்முனை மாநகர சபையில் அங்கம் வகிக்கும் மாநகர சபை உறுப்பினர்களின் பணியை மக்கள் எதிர்பார்த்துள்ளனர்.

# தேசிய மட்டப் போட்டிக்கு கிழக்கிலிருந்து நான்கு மாணவர்கள்

காரைதீவு,

கல்வி அமைச்சின் பாடசாலை சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நடாத்தப்பட்ட போட்டியில் தேசிய நிலை இறுதிப் போட்டிக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து 04 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

திருமலை வலயத்திலிருந்து ஆர்.ஜனுசா, சாமிலி பாயா அக்கரைப்பற்று வலயத்திலிருந்து எம்.எஸ்.அஸ்பியா, சம்மாந்துறை வலயத்திலிருந்து ஏ.சி.பாத்திமா உனைசா ஆகிய நான்கு மாணவரே தெரிவானதாக கிழக்கு மாகாணத்தின் கல்வித் திணைக்களத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.[illegible] தெரிவித்தார்.

# மண் சார்ந்த கலைகளையும் தமிழரின் கலை கலாசார பண்புகளையும் பேணிப் பாதுகாப்பது தென் எருவில்பற்று பிரதேசமாகும்

**- மட்டு. மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம்**

துறைநீலாவணை,

மட்டக்களப்பு மாவட்டத்திற்கே உரித்தான மண்சார்ந்த கலைகளைப் பேணிப் பாதுகாக்கின்ற பிரதேசமாகவும் தமிழர்களின் பாரம்பரிய கலை கலாசார விழுமியப் பண்புகளை இன்றும் அழிவடையாது பாதுகாக்கின்ற கிராமங்களைக் கொண்ட பிரதேசமாகவும் கல்வியில் சிறந்த அறிஞர்கள் பலரை அதிகம் கொண்ட பிரதேசமாகவும் மண்முனை தென் எருவில்பற்று பிரதேசம் உள்ளமை இப் பிரதேசத்திற்குரிய தனித்துவ பண்பாகும்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச கலாசார பேரவை ஏற்பாடு செய்து நடாத்திய பிரதேச கலாசார விழாவும் எழுமின் சிறப்பு மலர் வெளியீடும் கலைஞர் கௌரவிப்பும் கடந்த 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை பட்டிருப்பு தேசியப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச கலாசார பேரவையின் தலைவரும் பிரதேச செயலாளருமான செ. அருள்ராசா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், கௌரவ அதிதிகளாக கலந்து சிறப்பித்த மேலதிக அரசாங்க அதிபர் கே. விமலநாதன், மட்டக்களப்பு மாவட்ட கலாசார இணைப்பாளர் கவிஞர் த. மலர்ச்செல்வன், சிறப்பு அதிதியாக கலந்து சிறப்பித்த ஓய்வு நிலை பேராசிரியர் கலாநிதி. கோ. கோணேசபிள்ளை ஆகியோர் தமிழர்களின் பாரம்பரிய முறைப்படி வரவேற்கப்பட்டனர்.

அங்கு அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மேலும் பேசுகையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாரம்பரியமான பழக்க வழக்கங்கள், பண்பாடுகள் இன்றும் அழியாமல் உள்ளது. குறிப்பாக விருந்தோம்பலுக்கு பெயர் பெற்ற மண் மட்டக்களப்பாகும். இதனை ஏனைய மாகாணங்களில் வாழும் மக்கள் மட்டக்களப்பின் தனிச் சிறப்பு என்று கூறுவர்.

மேலைத்தேய கலை கலாசாரங்களின் தாக்கம், சினிமாவின் தாக்கம் என்பன எம்மை ஆட்கொண்ட போதிலும் நாம் எமது பாரம்பரிய கலை வடிவங்களில் இருந்து ஒரு கணமேனும் விடுபடலாகாது. கிராமிய கலை வடிவங்களைப் பேணி பாதுகாக்க வேண்டும். இம் மாவட்டத்தின் தனித்துவமான கலையாக விளங்கும் கூத்து கலையானது மனித வாழ்வுக்கு வேண்டிய அத்தனை அம்சங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. உடல், உள, ஆரோக்கியத் திற்கும் புராண இதிகாச கதைகளை மக்கள் மத்தியில் கலை ரசனையுடன் புகட்டி மக்களை நல்வழிப்படுத்தும் தனித்துவம் கூத்து கலைக்கு உண்டு.

தமது வாழ்நாளில் பெரும் பங்கை கலை கலாசார சமூகப் பணிக்காக அர்ப்பணித்த கலைஞர்களை வாழும் போதே வாழ்த்தும் விடயம் இந்நிகழ்வில் ஒரு அம்சமாக இடம் பெற்றமை இவ் விழாவுக்கு பெருமை சேர்க்கின்ற விடயமாகும். இன்றைய நிகழ்வில் பாராட்டப்பட்ட கலைஞர்களையும் ஏற்கெனவே பாராட்டப்பட்ட கலைஞர்களையும் இவ்வேளையில் மேலும் பாராட்டுகின்றேன்.

கலாசார அமைச்சு பிரதேச, மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் கலாசார விழாக்களை நடாத்தி கலைஞர்களை குறிப்பாக ஆக்க இலக்கியவாதிகளை கௌரவிப்பதன் நோக்கத்தை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். மனித சமுதாயத்தின் இருப்பை நிலை நிறுத்துவது இக் கலைகளேயாகும். எனவே நாம் தூர நோக்குடன் சிந்தித்து எமது பாரம்பரிய கலை கலாசார பண்பாட்டு அம்சங்களைப் பாதுகாக்க உறுதி பூண வேண்டும்.

இந் நிகழ்வில் கலைஞர்களான ச. அருளானந்தம் (துறைநீலாவணை), இ. நாதன் (கோட்டைக்கல்லாறு), அ. சிவநேசராசா (ஒந்தாச்சிமடம்), மு. பவளேந்திரன் (களுவாஞ்சிகுடி), சி. சோமசுந்தரம் (களுதாவளை), சா. தெய்வநாயகம் (தேத்தாத்தீவு) மு. கார்த்திகேசு (குருக்கள்மடம்) ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

இதே போன்று பிரதேச கலாசார விழா போட்டிகளில் பங்குபற்றிய பலர் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# விவசாய ஆராய்ச்சி சங்கத்தின் 11 ஆவது தேசிய மாநாடு

(பாலமுனை மேலதிக நிருபர்)

அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய உத்தியோகத்தர்கள் சங்கத்தின் 11வது தேசிய மாநாடு எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை அலரி மாளிகையில் இடம்பெறவுள்ளதாக சங்கத்தின் பிரதம செயலாளர் எஸ்.ஏ.டி. ஜெகத் குமார தெரிவித்துள்ளார்.

பிரதம அதிதியாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் இந் நிகழ்வில் பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் பிரதி அமைச்சர்கள், சமுர்த்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம், ஆர். திலகசிறி அதிகாரசபையின் உயரதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிகழ்வுக்கு ஒரு பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து 13 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொள்வதற்கான பெயர் விபரம் சங்கத்தினால் கோரப்பட்டுள்ளது.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை திணைக்களம் ஒன்றின் கீழ் உள்வாங்குதல் பதவியுயர்வு நிலைகள், சம்பள அதிகரிப்பு போன்ற விடயங்கள் என்பன ஜனாதிபதி மற்றும் பொருளாதார அமைச்சர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கையும் மேற்கொண்டிருப்பதாக செயலாளர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரவதைக்குட்பட்டவர்களில் காணப்படும் தாக்கங்கள் பற்றிய விளக்கங்களும் அவற்றைக் குறைப்பதற்கான இடையறுப்பு அணுகுமுறைகளும் பற்றிய பார்வை.

III

ஆக்கம்
ஸ்ரீ.நதிபரன் B.A. (Hons)



(சென்ற வாரத் தொடர்ச்சி)

போன்ற பல உடல் சார் தாக்கங்கள் (Physical injuries) காணப்படும். அத்துடன் உளரீதியான விளைவுகள் என்று பார்த்தால் சித்திரவதைக்குட்பட்டவரில் பின்வரும் பொதுவான அறிகுறிகள் காணப்படலாம்.

1. எதிர்கால வாழ்க்கையைப் பற்றிய பயம்.
2. நம்பிக்கையிழந்து தாழ்வு மனப்பான்மையில் மூழ்கியிருத்தல்.
3. சந்தோஷத்தை உணரமுடியாமல் இருத்தல். அதாவது எனது வாழ்க்கையில் இனி சந்தோஷமே விடிவே இல்லை என்ற எண்ணம்.
4. என்னால் ஒன்றும் இயலாது அல்லது நான் கையாலாகாதவன் என்ற மனப் பதிவு.
5. எந்த நேரமும் சோகத்தில் - தனிமையாக தொடர்ச்சியாக கவலைப்பட்டுக் கொண்டிருத்தல்.
6. எந்த விடயத்திலும் கவனத்தை ஒருமுகப்படுத்த முடியாதிருத்தல்.
7. ஞாபகசக்தி குறைதல் / எந்த வேலையையும் தடுமாற்றத்துடன் செய்தல்.
8. பசியில்லாது உணவில் விருப்பமில்லாது இருத்தல். இதனால் உடல் நிறை குறையும்.
9. நித்திரைக் குழப்பம் அல்லது ஆழ்ந்த நித்திரையின்மை அல்லது வழமைக்கு மாறான அதிக தூக்கம். இதனால் நாளாந்த வாழ்க்கை முறை பாதிப்படையும்.
10. தனிமையிலிருந்து அழுதல்.
11. உடலியல் சார் முறைப்பாடுகள் (Somatic complains) அதாவது ஒருவருக்கு உளவியல் சார் பிரச்சினைகள் ஏற்பட்டால் உடலியல் ரீதியாகவும் எதிர் விளைவுகள் ஏற்படும். குறிப்பாக கைகால் விறைப்பு, தலையிடி, நெஞ்சு நோ, உடல் நோவுகள் அல்லது அசதியாக இருத்தல். உளைவுகள் தலைச்சுற்று அல்லது பாரமாக இருத்தல் போன்ற உணர்வு போன்ற பல்வேறு உடல் அறிகுறிகள் ஏற்படலாம்.
12. பாலியல் ரீதியான பிரச்சினைகள் - சித்திரவதைக் குட்பட்ட ஒருவருக்கு பாலியல் ரீதியான பிரச்சினைகள் காணப்படும். குறிப்பாக பாலியல் ரீதியில் ஒருவர் துன்புறுத்தப்படுமிடத்து நிரந்தரமாகவே அவரின் பாலியல் உறுப்பு செயலிழக்க வாய்ப்புண்டு. அதுமட்டுமன்றி பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்படாது ஏனைய சித்திரவதைக்குக் கடுமையாக உட்பட்டிருந்தாலும் பாலியல் ரீதியில் பாதிப்புக்கள் ஏற்படலாம்.

இப்படியான உடலியல் சார், உளவியல் சார் தாக்கங்களால் உணர்வு ரீதியான பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும். அதாவது பயம், பதற்றம், கோபம், சந்தேகப்படல் (அநாவசியமாக) போன்ற பல உணர்வு ரீதியான மாற்றங்களுக்கும் போதைப் பொருட் பாவனை, மதுப் பாவனை, புகைப்பிடித்தல், சமூக நிகழ்வுகளில் கலந்து கொள்ளாமல் விடுதல் (உ+ம் - திருமணச் சடங்குகள், மரணச் சடங்குகள் மற்றும் ஆலய திருவிழாக்கள்) முதலிய பல்வேறு நடத்தை ரீதியான மாற்றங்களுக்கும் பாதிப்படைந்தவர்கள் ஆளாகலாம்.

எனவே, உளவளத்துணையாளர்கள் மற்றும் உள சமூகப் பணியாளர்கள் பாதிப்புற்றவர்களுடன் மனம் விட்டு உரையாடி பிரச்சினைகளைச் சரிவர இனங்கண்டு அவர்களின் தேவைகளை மதிப்பீடு செய்யவேண்டும். பிரச்சினைகளைச் சரிவர இனங்கண்டால் தான் பாதிப்புக்களைக் குறைக்கமுடியும். (தொடரும்)

## ஏலக்காயின் மருத்துவ குணங்கள்



ஏலக்காய் என்பது இஞ்சி செடி வகையைச் சேர்ந்தது. பச்சை நிறக் காய்களைக் கெண்டது. ஏலக்காய் பச்சை நிறத்திலும், அடர் பழுப்பு நிறத்திலும் இருக்கும்.

- ஏலக்காய் நறுமணப் பெருளாக மட்டும் இல்லாமல், பல மருத்துவக் குணங்களைக் கெண்டதாகும்.
- மன இறுக்கத்தைக் குறைத்து உடல் புத்துணர்ச்சி பெற ஏலக்காய் பயன்படுகிறது.
- பல் மற்றும் வாய் தெடர்பான பல பிரச்சினைகளுக்கு ஏலக்காய் நல்ல தீர்வாக அமையும்.
- செரிமானத்திற்கு உதவும். இதனால்தான் நெய் சேர்த்து செய்யப்படும் இனிப்புகளில் அவசியமாக ஏலக்காயை சேர்ப்பார்கள்.
- குரல் வளை மற்றும் தோல் தெடர்பான நேய்களைத் தீர்க்கும் ஆற்றல் ஏலக்காய்க்கு உண்டு.
- மலட்டுத் தன்மையைப் போக்குவதற்கும் ஏலக்காய் பயன்படுத்தப் படுகிறது.


## சீரகத்தின் மருத்துவ குணங்கள்

சீரகம் பெதுவாக உடலுக்கு நல்லது என்று பலருக்கும் தெரியும். அதனை எந்த விஷயத்திற்கு எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று தான் தெரிவதில்லை.

- வாந்தி எடுத்தவர்களுக்கு, வெறும் கடாயில் சீரகத்தைப் போட்டு வறுத்து அதில் தண்ணீர் ஊற்றி கொதிக்க வைத்த கஷாயத்தைக் கெடுக்க வாந்தி நிற்கும்.
- சீரகம் சேர்த்து கொதிக்க வைத்த தண்ணீரை ஆறவைத்து அடிக்கடி குடித்து வந்தால் அஜீரணக் கோளாறுகள் நீங்கும்.
- சீரகத்தை வாயில் போட்டு குளிர்ந்த தண்ணீரை குடித்தால் தலைச்சுற்றல், மயக்கம் நீங்கி விடும்.
- திராட்சை பழச்சாறுடன் சீரகம் கலந்து பருகி வர இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தலாம்.
- அகத்திக்கீரையுடன் சீரகம், சின்ன வெங்காயம் சேர்த்து கஷாயம் சாப்பிட்டு வந்தால் மனநோய் குணமாகும்.
- வறுத்த சீரகத்துடன் கருப்பட்டி சேர்த்து சாப்பிட்டு வந்தால் நரம்புத் தளர்ச்சி குணமாகும்.
- சீரகத்துடன் பூட்டை அரைத்து எலுமிச்சை சாறு கலந்து குடித்து வந்தால் குடல் நோய்கள் குணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நகங்கள்

பலர் முகத்தை அழகாக்கிக் கொள்வதில் நிறையக் கவனம் செலுத்துவார்கள். ஆனால் நகங்களைக் கவனிக்காமலே விட்டுவிடுவார்கள். அகத்தின் அழகு முகத்தில் தெரிவது போல, உடல்நிலையை நாம் நகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

ஏனெனில் உடலில் ஏற்படும் பல்வேறு பிரச்சினை களை நகம் நமக்கு எடுத்துக் காட்டுகிறது. உடலில் ஏற்படும் ஒவ்வொரு பாதிப்பிற்கும் ஒவ்வொரு விதமான பிரச்சினைகளை நகம் காட்டுகிறது. ஏதேனும் ஒரு உடல் உபாதைக்காக நாம் மருத்துவரிடம் செல்லும் போது, சிலர் நம் கை விரல்களைப் பரிசோதிப்பார்கள். ஏனெனில் அவர்கள் சந்தேகிக்கும் நோய் நமக்கு ஏற்பட்டிருப்பின் அதற்கான ஆதாரம் நகங்களில் தெரிகிறதா என்பதை அறிந்து கொள்வதற்குத்தான்.

மஞ்சள் காமாலையால் பாதிக்கப்பட்டவர்களது நகங்கள் மஞ்சள் நிறத்தில் இருப்பதே இதற்கு முதல் உதாரணம். அதுபோல தொடர்ந்து புகைப்பிடிப்பவர்களுக்கு, அதனால் ஏற்படும் பாதிப்பை பழுப்பு நிற நகங்கள் வெளிப்படுத்துகின்றன.

உடல்நிலையில் ஏற்படும் சில தற்காலிக பாதிப்புகளினால், நகங்களின் வளர்ச்சியில் கூட மாற்றங்கள் ஏற்படும்.

நகங்களைச் சுத்தமாகவும், சரியான அளவில் வெட்டி விடுவதும் ஒவ்வொருவரும் நமது உடல் ஆரோக்கியத்திற்காக செய்யும் செயலாகும்.

ஒருவரது உடலில் இரும்புச் சத்துக் குறைவாக இருப்பதனை, நகங்கள் உடைவது அல்லது பட்டையாக விரிந்து வளர்வதன் மூலம் அறியலாம். சிலருக்கு நகங்களில் மேடு பள்ளங்கள் ஏற்பட்டிருக்கும். இதுவும் ஊட்டச்சத்துக் குறைபாட்டையே காட்டுகிறது.

நகம் கடிக்கும் பழக்கம் நம்மில் பலருக்கு இருக்கலாம். எப்போதாவது மனக்கவலை ஏற்படும் பேது நகம் கடிப்பது ஒரு சிலர். ஆனால் எப்போதும் நகத்தைத் தேடித் தேடிக் கடிப்பது சிலருக்குப் பழக்கமாகவே இருக்கிறது. அவ்வாறு நகம் கடிக்கும் பழக்கம் இருப்பது கூட நரம்பு சம்பந்தமான பிரச்சினையாக இருக்கலாம் என்கின்றனர் மருத்துவர்கள்.

தன்னம்பிக்கை குறைவாக இருப்பவர்கள் பெரும்பாலும் நகம் கடிக்கும் பழக்கம் உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்கிறது ஓர் ஆய்வு.

மருதாணி இலைகளை அரைத்து வைக்கப்படும் மருதாணி நகங்களுக்கு நல்ல பயனை அளிக்கிறது. அதனை முடிந்தால் செய்து வரலாம்.

சிலர் அடிக்கடி நகப்பூச்சைப் பயன்படுத்துவார்கள். இது மிகவும் தவறு. மாதத்தில் ஓரிரு நாட்களாவது நகங்கள் காற்றோட்டத்தில் இருக்க வேண்டும். அப்போது தான் அதன் உண்மையான தன்மையை நாம் அறிய முடியும்.

மேலும், நகங்கள் காய்ந்து வரண்ட தன்மையுடன் இருந்தால் அதற்காக நல்ல மாய்ச்சுரைஸர் க்ரீம்களைப் பயன்படுத்துவது சிறந்தது.


சிலருக்கு நகங்களே வளராமல் குட்டையாகவே இருக்கும். இதுபோன்றவர்கள் கை விரல்களுக்கு மசாஜ் அளித்து வந்தால், விரைவில் நகங்களில் வளர்ச்சி ஏற்படும். அழகு நிலையங்களுக்குச் சென்று பெடிக்யூர், மெனிக்யூர் பேன்றவற்றையும் செய்து கொள்ளலாம். இதுவும் விரல் நகங்களுக்கு நன்மை அளிக்கும்.



கைவிரல் நகங்கள் லேயர் லேயராக உடைவதைப் பார்த்திருப்பீர்கள். இதற்கு வீட்டில் தூய்மைப்படுத்துவதற்காகப் பயன்படுத்தும் சோப்பினால் ஏற்படும் ஒவ்வாமையாகக் கூட இருக்கலாம். லேயர்கள் பிரிவதில் கூட சில வித்தியாசங்கள் உண்டு. சிலருக்கு நீள வாக்கில் பிரியும். சிலருக்கு குறுக்காக பிரியும். நகத்தில் உள்ள நகத்தட்டுகளுக்குத் தேவையான நீர்த்தன்மை இல்லாமல் போவதும் கூட இதற்குக் காரணமாக இருக்கலாம்.

நகச்சொத்தை ஏற்பட, நகத்தில் முன்பு எப்போதாவது ஏற்பட்ட காயம் காரணமாக இருக்கலாம். விரலில் அடிபடுவது, இடுக்கில் கைவிரல் சிக்கிக் கொள்வது போன்றவற்றால் ஏற்படும் பாதிப்பால் நகப்படுக்கையில் ஏற்படும் ரத்தக் கசிவானது, நகத் தட்டுக்கு அடியில் தங்கிவிடும். இதனால் நகச் சொத்தை ஏற்படுகிறது. இந்த நகச் சொத்தை தானாகச் சரியாகவும் வாய்ப்புள்ளது. ஆனால் நகச்சொத்தை தீவிரமடைந்து, நகப் பகுதியில் வலி ஏற்படுமாயின், நகத்தைப் பிடுங்கிவிட்டு அப்பகுதியைச் சுத்தம் செய்ய வேண்டியது அவசியமாகும்.

கை விரல் நகங்கள் இளம் சிவப்பு நிறத்தில் இருக்க வேண்டும். இதில் வெள்ளை நிறம் இரத்தச் சோகையையும், மஞ்சள் காமாளையையும் குறிக்கும். விரல் நகங்களுக்கு நடுவில் சொத்தை ஏற்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுகி அதற்கான காரணத்தை அறிவது நல்லது. கைப்பூணிற்குக் கண்ணாடி தேவையா என்பது பழமெழி. ஆனால் நம் கை விரல் நகங்களைக் கொண்டே நமது உடல் ஆரோக்கியத்தை அறிந்துகொள்ளலாம்.



## மரக்கறி புரியாணி

**தேவையான பொருட்கள்**

சீரகச் சம்பா அல்லது சம்பா அரிசி - 1 சுண்டு, உருளைக்கிழங்கு - 100கிராம், கோவா - 50கிராம், போஞ்சி -50கிராம், லீக்ஸ் - 50கிராம், கரட் - 50கிராம், தக்காளி - 50கிராம், சின்ன வெங்காயம் - 50கிராம், பச்சைமிளகாய் - 2, இஞ்சி - சிறியதுண்டு வெள்ளைப்பூடு - 4 பல்லு, கறிவேப்பிலை/றம்பை - அளவாக, ஏலம், கறுவா, கராம்பு - சிறிதளவு, நற்சீரகம் -1/2தேக்கரண்டி, பச்சைப்பட்டாணி - 1மேசைக்கரண்டி, முந்திரிப்பருப்பு - 1மேசைக்கரண்டி, முந்திரிகைவற்றல் - 2தேக்கரண்டி, மஞ்சட்தூள் - 1/4தேக்கரண்டி, தனிமிளகாய்த்தூள் - 2 தேக்கரண்டி, கொத்தமல்லி - ஒரு கைப்பிடி, உப்பு - அளவாக, பட்டர் ஒயில் அல்லது மாஜரின் - 100 கிராம்

**செய்முறை**

காய்கறிகள், தக்காளி, வெங்காயம், பச்சைமிளகாய் இவற்றைச் சுத்தஞ் செய்து குறுணலாக வெட்டிக்கொள்ளவும். இஞ்சி, வெள்ளைப்பூடு, நற்சீரகம் இவற்றை முக்காற் பதத்தில் அரைத்துக் எடுக்கவும். அரிசியைக் கொதிநீரிலிட்டு உப்புஞ் சேர்த்து வேகவிட்டு சோறு அரைப்பதமாக இருக்கம் போது வடித்து ஈரத்தன்மை இல்லாது சுண்டவிடவுடம். காய்கறிகளுடன் மஞ்சள் தூள், மிளகாய்த்தூள், உப்பு சேர்த்து அரைத் தம்ளர் நீர் விட்டு அவற்றை வேகவிடவும். கிழங்கை அவித்து உரித்து சிறுதுண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். பச்சைப்பட்டாணியை வேறாக அவித்து எடுக்கவும். காய்கறிகள் நீர் சுண்ட வெந்ததும் இறக்கிக் கொள்ளவும். இரண்டு மேசைக்கரண்டி பட்டர் ஒயிலில் வெங்காயம். பச்சைமிளகாய், கறிவேப்பிலை, றம்பை இவற்றை இட்டு வதக்கிய பின் முந்திரிகை வற்றல், முந்திரிப்பருப்பு, ஏலம், கறுவா, கராம்பு அரைத்த கூட்டு இவற்றையும் வதக்கவும். வதக்கிய பொருட்கள் பொன்னிறமாகியதும் அவற்றை வடித்து எடுத்து அப்பாத்திரத்தினுள் தக்காளிப்பழத்தைச் சேர்த்து சிறிது நேரம் வேகவிடவும். பின் அப்பாத்திரத்தினுள்ளே அவித்த காய்கறிகளை இட்டு நன்கு கலந்து அதன் மேல் அரைவாசி சோற்றைப் பரவி இட்டு கொத்தமல்லி இலையையும் கிள்ளிப்பரவிப் பின் தாளித்த பொருடுகளை இடவும். அதன் மேல் மிகுதிச் சோற்றைப் பரவிப் பின் பச்சைப்பட்டாணி மிகுதியாக உள்ள பட்டர் ஒயில் இவற்றைச் சேர்த்து பரவி மிக மெல்லிய நெருப்பில் பத்து நிமிடம் வரை வைத்திருக்கவும். பின் இறக்கி சிறிது நேரத்தின் பின் நன்கு கலந்து கொள்ளவும்.

## ஐஸ் கோப்பி



**தேவையான பொருட்கள்**

கோப்பித்தூள் - 1 1/2 தேக்கரண்டி, சீனி - 3 தேக்கரண்டி, பால்மா - 2 தேக்கரண்டி, கொதிநீர் -1 கப், வனிலா - 1 தேக்கரண்டி

**செய்முறை**

* ஒரு கப்பில் கோப்பித்தூளை இட்டு நன்றாக கொதித்த நீரை ஊற்றி ஐந்து நிமிடம் வரை மூடி வைக்கவும்.
* இன்னுமொரு கப்பில் பால் மாவையும் சீனியையும் சேர்த்து சிறிது சுடுநீர் விட்டு நன்கு கரைக்கவும்.
* கரைத்த கரைசலுடன் கோப்பியை விட்டுக்கலந்து வடித்து வனிலாவையும் சேர்க்கவும்.
* கோப்பி நன்கு ஆறியதும் குளீரூட்டியில் 3 மணிநேரம் வைத்த பின்பு எடுத்துப் பரிமாறவும்.

மங்கையரே உங்களின் சமையற் குறிப்புகள், அழகுக் குறிப்புக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
யாழ்.ஓசை வீரகேசரி கிளைக் காரியாலயம்
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசமாகப் பாதிக்கப்பட்ட பண்ணைப்பாலம் மந்த கதியில் திருத்த வேலைகள்

2008 இல் இடம்பெற்ற நிஷா புயல் அனர்த்தம் காரணமாக தீவுப்பகுதிக்கும் யாழ்ப்பாணத்துக்குமான இணைப்புப் பாதையில் பண்ணைப்பாலம் மோசமாக பாதிக்கப்பட்டதும் இதனால் தீவக மக்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர் கொண்டதெல்லாம் பழைய கதை என்றாலும் அந்த நிலை இன்னமும் தொடர்வதே யதார்த்தம்.

இப்பாலத்தின் பெரும் பகுதி முழுமையாகச் சேதமானதில் ஏதோ கொஞ்சம் மண், கொஞ்சம் கல் போட்டு நிரப்பி இன்று வரை தீவுப்பகுதி மக்களின் ஒரு முக்கிய போக்குவரத்துத் தேவை ஒரு மாதிரிப் போய்க்கொண்டிருக்கிறது. அவசியமாகவும் விரைவாகவும் பூர்த்தி செய்யப்படவேண்டிய வேலைகள் மந்த கதியில் ஏனோதானோ என்று போய்க்கொண்டிருப்பது போல் தெரிகின்றது. இதுவே தென்பகுதியில் ஏற்பட்டிருப்பின் பால வேலைகள் விரைவில் முடிந்திருக்கும் என்பவர்களும் உள்ளனர்.

இந்தப் பாதையை பல ஆயிரக்கணக்கான மக்கள் பயன்படுத்துகின்றார்கள். இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் இருந்து பெரும்எண்ணிக்கையான வாகனங்கள் தினசரி வந்துபோய்க்கொண்டிருக்கின்றன. பெரும் எண்ணிக்கையான மக்களும், வாகனங்களும் பயன்படுத்தும் இவ்வீதியின் அவல நிலை குறித்து தீவுப்பகுதி மக்கள் பெரிதும் விசனப்படுகிறார்கள். இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்களின் கருத்துக்கள் இவ்வாறு அமைகின்றன.

**எஸ். சிவலோகநாதன்**
**கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர், மண்கும்பான்.**



நிஷாவெள்ள அனர்த்தம் காரணமாக பண்ணைப்பாலம் வீதி மிகவும் மோசமாகச் சேதமடைந்தது. தீடீரென ஏற்பட்ட இந் நிகழ்வினால் மக்களின் இயல்பு வாழ்க்கை முழுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தது. இந்தப் பாதையின் முக்கியத்துவத்தை உணர்ந்த இராணுவ அதிகாரிகள் உடனடியாகவே சேதமுற்ற இடங்களில் தற்காலிகப் புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டு போக்குவரத்துக்கள் ஓரளவு இடம்பெறக் கூடியதாக உதவினார்கள். இப்போது வீதி சில இடங்களில் ஒடுங்கிக் காணப்படுகிறது. வாகனங்கள் ஒன்றையொன்று விலத்திக் கொள்ள முடியாத நிலை இருக்கிறது. வீதியின் மோசமான நிலைத் திருந்துவதற்கு அரச அதிகாரிகள் அக்கறை செலுத்துவது போல் தெரியவில்லை. ஆனால் அன்றாடப் பிழைப்பு நடத்தும் ஏழை மக்களின் வாகனங்கள் பழுதடைந்தால் அல்லது தப்பித்தவறிக் கடலில் விழுந்தால் அதனால் பாதிக்கப்படுபவர்கள் அந்த அப்பாவிகளான ஏழை மக்களே. இந்தப் பிரதேச பொருளாதார முக்கியத்துவத்துக்கு இன்றியமையாத வழித்தடம் இது என்பதால் இதன் புனரமைப்புப் பணிகள் எதிர்காலத்தையும் கருத்திற்கொண்டு இடம்பெறவேண்டும்.

*-*

**செல்வி.பொ.ஜமுனாதேவி**
**சர்வோதய அறங்காவலர் புங்குடுதீவு.**



பண்ணை தாம்போதி தீவுப்பகுதிக்கான போக்குவரத்து உயிர் நாடி நிஷா அனர்த்தத்திற்கு முன்பு இந்த வீதி ஓரளவு நல்ல நிலையில் இருந்தது. அதன் பிற்பாடு மோசமாகிவிட்டது. இப்போது இதனை அகலப்படுத்தும் வேலைகள் இடம்பெறுகின்றன. எனினும் வீதியைச் சிறிது கூடுதலாக அகலப்படுத்தினால் போக்குவரத்துக்கு இலகுவாக இருக்கும். இப்போது அதிகரித்த வாகனப்போக்குவரத்துக்கள் இந்தப் பாதையில் உள்ளதால் வேலைகளை இலகுபடுத்தக்கூடியதாக தீவுப்பகுதிக்கான போக்குவரத்தை தற்காலிகமாக அராலிக்கு மாற்றலாம். பண்ணைப்பாதைக்குப் பிரச்சினை ஏற்படுத்தும் பட்சத்தில் அராலி வீதியை பயன்படுத்தக்கூடியதாகவும் இருக்கும். புங்குடுதீவு குறிகாட்டுவான் வரை இது அகலப்படுத்தல் வேண்டும்.

*-*

**கு.ஜெகநாதன்**
**வங்களாவடி, வேலணை.**



பண்ணைப் பாலம் வீதி தீவுப்பகுதி மக்களுக்கு மிகவும் இன்றியமையாதது என்பது நான் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்றில்லை. இங்கு வாழும், கடமை நிமித்தம் வந்து போகும் மக்கள் மட்டுமன்றி இப்போது நிறையவே வந்து கொண்டிருக்கும் தென்பகுதி மக்களும் தெரிந்துகொண்ட உண்மை இது. எங்கள் பகுதியில் உள்ள பலதரப்பட்ட பிரச்சினைகள் தீர வீதிகள் புங்குடுதீவு ஊர்காவற்துறைப் பகுதிகள் வரை நல்ல முறையில் திருத்தம் செய்யப்படவேண்டும் என்பதே எமது எண்ணமாகும்.

*-*

**எஸ்.ஜே. சில்வெஸ்டர்**
**தையலாளர், புங்குடுதீவு.**




வீதிகள் புனரமைப்புப் பணிகள் இடம்பெறும் போது பொதுமக்கள் அவ் விடயங்களில் அக்கறை காண்பிப்பது இல்லை. அதனால் சம்பந்தப்பட்டவர்கள் தங்கள் வசதிக்கேற்ப வேலைகளைச் செய்து முடித்துவிடுகிறார்கள். பண்ணைப்பாலம் வீதி மட்டுமல்ல இந்தப் பகுதியில் உள்ள பிரதான வீதிகளில் பயணிப்பது என்பது கொஞ்சம் கஸ்டமான காரியம்தான். ஏனெனில் மழை தொடங்கிவிட்டது. பண்ணைப் பாலம் என்றால் என்ன மற்றைய வீதிகள் என்றாலென்ன வாகனங்கள் ஒன்றையொன்று விலத்திக் கொள்ளும் போது விபத்துக்கள் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் நிறையவே உண்டு. வெளி மாவட்டங்களில் வீதிப்புனரமைப்பில் காட்டப்படும் அக்கறை இங்கே காட்டுவதாக இல்லை. பண்ணை வீதி 25 வருடங்களுக்கு மேலாக ஓர் ஒழுங்கான திருத்த வேலைகளைக்கண்டதாக இல்லை. குண்டு குழிகளை தார் கலவைகளைப் போட்டு மூடி விடுகிறார்கள். உண்மையில் வீதி முழுமையாக் கிளறப்பட்டு உரிய திருத்த வேலைகள் இடம்பெறவேண்டும். பண்ணை வீதியூடாக அமைச்சர்கள் வந்துபோகின்றார்கள் அவர்கள் இந்த வீதி நிலையினை அவதானித்து முழுமையான திருத்த வேலைகள் இடம்பெற நடவடிக்கை எடுக்கவேண்டும். பாதையை அகலமாக்குகிறோம் என்று ஏதோ கடமைக்குச் செய்யாமல் நீண்டகாலப் பயன்பாட்டுக்கு உகந்ததாக திருத்தப் பணிகள் இடம்பெறவேண்டும்.

நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு மக்களும் பண்ணைப்பாலம் உட்பட புங்குடுதீவு, ஊர்காவற்துறை வரையிலான வீதிகளை அகலப்படுத்தி இப்பகுதிகளின் போக்குவரத்துச் சேவை நல்ல முறையில் அமைய வேண்டும் என்பதில் அக்கறை காண்பிக்கிறார்கள். பல கோடி ரூபா நிதி ஒதுக்கீடுகளில் இடம்பெறும் வேலைகள் நீண்ட காலப்பயன்பாட்டுக்கு உகந்ததாக அமைய வேண்டும் என்பதும் மக்களது எதிர்பார்ப்பாகும். தற்போது பண்ணைப்பாலம் அகலிக்கப்படுகின்றது. இது மண்டைதீவுச் சந்தி வரை விஸ்தரிப்பதற்கு ரூபா 700 மில்லியன் வரை தேவை எனவும் அதற்கான நிதியைப்பெறும் மார்க்கம் குறித்து ஆலோசிக்கப்படுவதாகவும் சில தகவல்கள் கூறுகின்றன. வீதி அகலிப்பு காசு கிடைத்தால் தானா?

*-*

**எஸ்.கணபதிப்பிள்ளை (தலைவர்)**
**அனலைதீவு ப.நோ.கூட்டுறவு சங்கம்.**

தீவுப்பகுதியில் உற்பத்தியாகும் பொருட்களைச் சந்தைப்படுத்தவும் தீவுப்பகுதி மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை யாழ்.நகரிலிருந்து இலகுவாக எடுத்துவரவும் ஏனைய தேவைக்குமாகப் பண்ணைப்பாலம் வீதி மிகவும் தேவையானதொன்று. ஒரு வீதி எப்போதும் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாதவாறு சீராக இருத்தல் வேண்டும். பண்ணைப்பாலம் 50 வருடங்களைக் கடந்தது.



அவ்வப்போது சிறு திருத்த வேலைகள் இடம்பெற்றும் பெரிய அளவிலான அகலப்படுத்தல் வேலைகள் இப்போதுதான் முதன்முறையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முதலில் ஒரு கிலோ மீற்றர் தூரமே புனரமைக்கப்படும் எனக்கூறப்படுகின்றது. ஒரு இரண்டு, மூன்று கிலோமீற்றர் தூரமான வீதியைத் திருத்தி அமைக்க நீண்டகாலத்தை எடுக்கவேண்டியதில்லை. இது துரிதமாகச் செயற்படுத்த வேண்டும். இப்போது இந்த வீதியில் கனரக வாகனங்கள் உட்பட பயணிகள் வாகனங்கள் மிகக் கூடுதலாக பயணிக்கின்றது. வாகனங்கள் பெரும் சிரமப்பட்டே பயணிக்கவேண்டியுள்ளது. இந்தப் பாதையில் உள்ள கஷ்டங்கள் அனைவரும் அறிந்ததே. அவைகளை நீங்கி எதிர்காலத்தில் பிரச்சினைகளற்ற போக்குவரத்துக்கு ஏற்ப இவ் வீதி புனரமைக்கப்படவேண்டும்.

துருந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய இன்பம்

உலகிலே இன்று நியாயம் ஒழிந்து அநியாயம் தலைவிரித்தாடுகிறது. சங்ககால மக்கள் தமது வாழ்க்கை முறையை நியாயபூர்வமாகவும் நீதி நெறி வழுவாமலும் கட்டமைத்து வாழ்ந்தவர்கள். இன்றைய சூழலில் நீதி நெறி பிறழ்ந்து அறநெறியினின்றும் வழுவி மக்கள் வாழத் தலைப்பட்டமையால்தான் இயற்கையின் சீற்றங்கள் அழிவுகளாகப் பரிணமிக்கின்றன.

எது நியாயம்? எது அநியாயம்? நல்லது எது? கெட்டது எது? என்பது பற்றியெல்லாம் சங்கப் புலவர்கள் யாத்து வைத்துள்ளனர். அவை பற்றி இலக்கிய இன்பம் வாயிலாக அறிவதற்கு முயல்வோம்.

நல்லது, தீயது என்பதை செயல்களை மாத்திரம் வைத்துப் பார்த்து முடிவெடுக்கக்கூடாது. இது நியாயம். அது அநியாயம் என்பவை செயலில் மட்டும் அமைவதில்லை. என்ன கருத்தில் செய்யப்பட்டது? என்பதை வைத்துத்தான் தீர்மானிக்க வேண்டும் என சங்கப் புலவர்கள் வகுத்துள்ளனர்.

இவ்விடத்தில் ஒரு சம்பவத்தை வைத்து நல்லது, கெட்டது பற்றி ஆராய முற்படுவோமானால் திருடன் ஒருவன் மற்றொருவரிடம் உள்ள பெறுமதியான பொருளைக் கவர்வதற்காக அவரைக் கொலை செய்கின்றான் எனவைத்துக் கொண்டால் அவனுக்கு கொலைக் குற்றம்சாட்டி நீதிபதி மரண தண்டனை விதிக்கிறார்.

இங்கு நீதிபதியைக் கொலை புரிந்த பாதகன் என உலகம் நிந்திப்பதில்லை. என்ன காரணம்? பொருளைக் கவர்வதற்காக திருடன் ஒருவனைக் கொன்றான். அவனுடைய மனம் பணத்தை நாடியது. ஆனால் நீதிபதி கொலையாளிக்கு மரண தண்டனை விதிப்பது, அத்தகைய குற்றம் இனிமேல் நிகழாதவாறு இருக்கும்பொருட்டும் மக்களைத் திருடர்களிடமிருந்து காத்தற் பொருட்டுமேயாகும்.

நீதிபதியின் மனம் உலக உபகாரத்தை நாடியது. ஆகவே நீதிபதி, திருடன் ஆகியோர் செய்தது கொலை என்றபோதும் அவர்களின் கருத்து நிலைகள் வித்தியாசமானவை என்பதால் நியாயம் நீதிபதியிடம் இருப்பதாகக் கொள்ளலாம்.

ஒருவன் தன் வயிற்றுப் பசிக்காகப் பிறரிடம் கைநீட்டி வாங்கினால் பிச்சை எடுக்கின்றான் என்று உலகமே நிந்திக்கும். ஏற்பது இகழ்ச்சி என்பது ஔவையின் வாக்கு. அதேநேரம் ஒருவன் பாடசாலை, மருத்துவமனை அல்லது கோயில் முதலியவற்றைக் கட்டும் பொருட்டு பிறரிடம் கைநீட்டி வாங்கினால் நற்பணி புரிகிறான் என உலகம் புகழ்ந்தேத்தும். இரண்டு காரியங்களுமே பிறரிடம் யாசிப்பதாயினும் தனக்கென்று யாசிப்பது இகழ்ச்சி என்றும் பிறர் நன்மக்கென யாசிப்பது புகழ்ச்சி, தர்மம் என்றும் புலவர்கள் நிச்சயித்துள்ளமையை அவர்கள் யாத்த பாடலகள் வாயிலாக அறியக்கிடக்கின்றது.

*செல்லாரும் பொழில் புடைசூழ்*
*புலியூரம்*
*பலவான தேவா வும்மைக்*
*கல்லாலும் வில்லாலும்*
*செருப்பாலும்*
*பிரம்பாலும் கடிந்து சாடும்*
*எல்லோரும் நல்லவரென்று*
*எண்ணியருள் ஈந்ததென்ன?*
*இகழ்ச்சியொன்றும்*
*சொல்லாமல் மலரால்*
*விட்டெறிந்தவனைக்*
*காய்ந்ததென்ன சொல்லுவீரே!*

என புலவரொருவர் பாடுகிறார். இதன் கருத்து யாதெனில் புலவருக்கு கடவுளான சிவபெருமான் மீது ஒரு சந்தேகம். அச்சந்தேகத்தைத் தீர்க்கும் முகமாக விருத்தப்பாவில் தமது சந்தேகத்தைக் கேட்கிறார். அதாவது அம்பலத்தில் ஆடும் சிவனே உனக்கு கல்லால் எறிந்த சாக்கிய நாயனாரையும் வில்லால் அடித்த விஜயனையும் பிரம்பால் அடித்த அரிமர்த்தன பாண்டிய மன்னனையும் செருப்பால் உதைத்த கண்ணப்பனையும் காத்தருள்புரிந்தாய். உன்னை ஒன்றுமே இகழாது மலர்க்கணையால் மலர்களைச் சொரிந்த மன்மதனை எரித்துப் பொடியாக்கினீரே, இது நியாயமா? எனக்கேட்கிறார்.

கல்லால் எறிந்த சாக்கியரும் செருப்பால் உதைத்த கண்ணப்பரும் பிரம்பால் அடித்த அரிமர்த்தன பாண்டியனும் அளவற்ற அன்பை சிவபெருமான் மீது செலுத்தினார்கள். அவர்கள் செய்த செயல் தீயது ஆயினும் அவர்களது உள்ளம் உயர்ந்த நிலையில் இருந்தது. ஆனால் மன்மதன் மலர் சொரிந்த செயல் உயர்வானதாக இருப்பினும் அவனது மனம் இறைவனை மயக்க வேண்டும் என்ற கபட நோக்கத்தில் இருந்தது. ஆகவே தான் செயல் உயர்ந்ததாயினும் நோக்கம் கொடியதாக இருந்தது. இதனாலேயே தீய செயல் புரிந்தார்க்கு அனுக்கிரகமும் நல்ல செயல் புரிந்தோருக்கு தீமையும் கிடைத்தன எனலாம்.

எனவே தான் தமிழ்ப்புலவர்களது பாடல்களில் பல்வேறு சுவைகள் இருந்தாலும் மக்களை நல்வழிப்படுத்த வேண்டும் என்ற உயர்ந்த நோக்கம் இருந்தது.இன்றைய காலகட்டத்தைப் பொறுத்தவரையில் பெரும்பாலான மக்கள் இறைவனை வழிபடுகிறார்கள். அவர்களின் வழிபாடு நன்றாக இருக்கின்றது. ஆனால் அவர்களின் எண்ணம் முழுவதும் மற்றவர்கள் கெடவேண்டும், தாழ்மை அடைய வேண்டும் என்றல்லவா, வணங்குகின்றார்கள். தனது கண் கெட்டாலும் பரவாயில்லை எதிரிக்கு சகுனம் பிழைக்க வேண்டும் என்ற சிறுமைத்தனமான மனநிலை உடையவர்களாக இருப்பதாலும் சுயநலத்தன்மைகள் மேலோங்கியிருப்பதாலுமே எமது வாழ்வு இன்றும் கடை நிலையிலேயே இருக்கின்றது. இதனை நாம் உணரத்தலைப்பட்டால் எமது வாழ்வு இன்பமயமானதாகவும் அர்த்தமுடையதாகவும் அமையும்.

**எஸ். நதிபரன்** B.A. (Hons)

# ஊர்ப் புதினம்



என்ன இருந்தாலும் பொம்பிளை இப்படி வெளிக்கிட்டிருக்கக் கூடாது. காலம் இப்பிடி மாறிப்போச்சுது'.

இந்த சம்பாசணையைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். மூன்று படித்த பெரியவர்கள், தாம் சென்று வந்த திருமண வீட்டில் தாம் பார்த்த மணமகளின் ஆடை பற்றித்தான் அவ்விதம் கதைத்தனர்.

இதைச் செவி மடுத்த இளைஞர் ஒருவர் என்ன விடயமெனக் கேட்டார்.

அப்பெரியவர்களும் தாம் காலையில் சென்று வந்த திருமண நிகழ்வில் மணமகளின் கூறைச் சேலை குஜராத்தி முறையில் உடுத்தப்பட்டிருந்தது. பிழையே பிழை தான் என அடித்துக்கூறினார்கள். காலம் மாறிப்போய் கண்ட கண்ட நாகரீகங்களும் இங்கு வந்து ஆட்களைச் சீரழிக்கிறது எனப் பெரும் ஒப்பாரியே வைத்தனர்.

இவர்களின் வாதங்களைக் கேட்ட அந்த இளைஞர் 'ஏன் மணமகள் இப்படி ஆடை அலங்காரம் செய்தது பிழையோவெனப் பவ்வியமாகக் கேட்டார்'.

'ஓம் தம்பி பிழை தானே. பொம்பிளை இப்படி ஆடை அணியும் முறையை மாற்றுவது எமது இந்துத் தமிழ் பாரம்பரியத்துக்குப் பிழைதானே. பாரம்பரியமான ஆடை அணியும் முறையை நாம் கைவிட முடியுமோ? கடைப்பிடிக்கத்தானே வேண்டும்' எனத் திருவாயும் மலர்ந்தனர்.

அந்த இளைஞன் திருப்பிக் கேட்டார் 'மாப்பிள்ளை தான் விரும்பிய மாதிரி பட்டு வேட்டி, குர்தா, சர்வாணி' என ஆடைகளை உடுத்துகின்றான் தானே. விரும்பியவாறு மணமகன் ஆடை அலங்காரம் செய்யும் சுதந்திரம் இருக்கிறது தானே.

'அதே போலப் பெண்ணும் மணமகள் ஆடை அலங்கரத்தைச் செய்தால் என்ன?' என ஒருபோடு போட்டார்.

'மணமகன் நாகரீக மாற்றத்தால் உடுத்துகின்றான். ஸ்ரைலாக ஆடை அலங்காரம் செய்கிறான். அது இயல்பானது தானே' எனப் படித்த பெரியோர்கள் ஏமாளித்தனமாக விடை தந்தனர்.

எனக்கோ இதைக் கேட்கச் சிரிப்பாகவும் வெறுப்பாகவும் இருந்தது.

அந்த இளைஞனும் விடுவதாயில்லை.

'இது என்ன நியாயம். ஆண் எப்படியும், எப்போதும் உடுத்தலாம். பெண் பண்பாடு என்ற பெயரில் நிரந்தரச் சிறையில் வைத்திருப்பது தான் நீதியா, கால மாற்றம், நாகரீக மாற்றத்தை ஆண் உள்வாங்கும் போது பெண்ணும் உள்வாங்க அனுமதிப்பதுதானே நியாயம். தமிழர் பண்பாடு என்று கூறுகின்றீர்களே எமது பண்பாட்டு நிகழ்வுகளில் மட்டுமாவது பண்பாட்டு ஆடைகளைத் துறக்காமல் சரியாகக் கடைப்பிடித்து உதவுங்கள்' என்றார்.

உலகில் தமது பண்பாட்டு வேர்களைத் தேடி எத்தனையோ இனங்கள் பயணிக்கின்றன. எமக்கு அந்த நிலைமையில்லை. வரலாற்று பதிவுகளுடன் கூடிய பண்பாட்டைக் கொண்டுள்ளோம். பண்பாட்டு நிகழ்வுகளில் பண்பாட்டு உடைகளையே அணிவோம்.

- சிவகாமி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தவைத்தியத் துறைக்கு பெருமை சேர்த்த சித்தவைத்திய கலாநிதி கோ.சின்னத்தம்பி

நோயற்ற வாழவே குறை வற்ற செல்வம் என்பார் ஆன்றோர்கள். தொன்மையும் பெருமையும் மிக்க எமது தமிழினம் தனக்கென மொழி, கலை, பண்பாடு என்று சிறந்தோங்கியது போலவே தமிழர்க்கென மரபு வழி வைத்திய முறையாக சித்த வைத்தியம் ஆனது சிறப்புற்று வளர்ந்து வந்துள்ளது. இவ் வைத்தியக் கலையானது சித்தர்களாலேயே வளர்க்கப்பட்டு வந்தமையினால் சித்தவைத்தியம் என்னும் பெயர் வழங்கி வரலாயிற்று. இத்தகு சித்த வைத்தியத்தில் சிறப்புற்ற சீர்மையாளனாக சித்த வைத்திய கலாநிதி கோ.சின்னத்தம்பி விளங்குகின்றார்.

சித்த வைத்தியம் சிறப்புற எழில் பெற்ற இடமாக வலிவடக்கு விளங்குகின்றது. மருதமும் நெய்தலும் மருவிய நிலப்பரப்பு. ஆரோக்கியத்துக்குரிய புண்ணியபூமி. உழுதுண்டு வாழும் உத்தமர்கள் வாழ்விடம் அது. பழுதிலா புராதன கோயில்கள் தந்தையும் தனயனும் வீற்றிருக்கும் மேன்மை பொருந்திய நிலம் நகுலேஸ்வரத்தில் ஆடற்திருமகனும், மாவையம் பதியில் வள்ளி மணாளனும் குடி கொண்டிருப்பது மக்கள் அறிந்ததே. மாருதப் புரவீக வல்லி தன் வினைப்பயனால் வந்த நோயை நீக்கிய மண் வலிவடக்கு. தீராதநோய் தீர்க்கும் புனித தீர்த்தம் நகுலேஸ்வரத்தில் உண்டு. இத் தீர்த்தம் பிறவிப்பிணிக்கு மருந்து என்பார்கள்.

வலிவடக்கில் சிறப்புமிகும் சிறிய பிரதேசமாக பளை என்னும் சிறிய கிராமம் அமைந்துள்ளது. காங்கேசன்துறையை வடபாலும் தெல்லிப்பளையைத் தென்பாலும், மாவிட்டபுரத்தைக் குடதிசையும் கொண்டு நடுவன் அமைந்ததே இக்கிராமமாகும். இக்கிராமத்தில் இருபதுக்கு மேற்பட்ட குடிகள் குடி கொண்டிருந்தமை ஈண்டு கவனத்திற் கொள்ளலாம். இத்தகு சிறப்பு மிகுந்த புகழ்பூத்த மண்ணில் 1908 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 30 ஆம் திகதி கோவிந்தர், மாதி தம்பதிகளுக்கு இணைய மகனாக சித்தவைத்தியர் சின்னத்தம்பி வந்துதித்தார். 3 வயதிலேயே தாய், தந்தையரை இழந்தார். ஆயினும் சிறியதாயாரினதும் மூத்த சகோதரியினதும் அரவணைப்பில் வளர்ந்தார். இவருடன் 2 சகோதரர்களும்,3 சகோதரிகளும் பிறந்தார்கள்.

இவருடைய குடும்பம் பரம்பரையாகவே வைத்தியத் தொழிலில் கண்ட வல்லாளர்கள். இவரது தந்தையார் வைத்தியர். இவரது தாயார் சகோதரிகள் போன்றோர் எமது பாரம்பரிய முறைப்படி மருத்துவிச்சிகளாக விளங்கி வைத்தியத் துறைக்கு பங்காற்றனார்கள்.

இவர் மணப்பருவம் அடைந்ததும் இளைஞன் சின்னத்தம்பியின் இல்லறம் சிறக்க அசுபதி என்னும் நேரிழையாள் வாய்க்கப் பெற்றாள். அசுபதி இயல்பாகவே தெய்வ சிந்தனையும் வைத்தியப் பாரம்பரியமும் உள்ள குடும்பத்தை சேர்ந்தவர். இவரது தந்தையார் கந்தன் வைத்தியர் என்பதும் நோக்கத்தக்கது. வைத்தியர் அவர்கள் இறைவன் அருளால் 11 மகவுகளை பெற்றெடுத்தார்கள்.

வைத்தியர் ஆரம்பக்கல்வியை சைவத்தமிழ் வித்தியதாசாலையில் கற்று அநுராதபுரத்தில் இலங்கை புகையிரதத் திணைக்களத்தில் உயர் பதவி வகித்தார். ஆனாலும் இவரது மனம் வைத்தியத் தொழில் மீது கொண்ட பற்றும் மண் மீது கொண்ட பற்றும் காரணமாக அத் தொழிலை விட்டு தனது ஊர்திரும்பி சித்தவைத்தியர் பரீட்சையில் சித்தியெய்தி பதிவு செய்யப்பட்ட சித்த வைத்தியராக தன்பணியை ஆற்றத் தொடங்கினார்.

இவர் வைத்தியத்துறையிலே சிறு பிள்ளை வைத்தியம், வாத ரோக வைத்தியம், கட்டு வைத்தியம், கர்ப்பிணி வைத்தியம், விஷகடி வைத்தியம் போன்ற சகல துறைகளிலும் சிறந்து விளங்கினார்.

இவர் தனது கிராமம் மட்டுமன்றி அயற்கிராமங்களான காங்கேசன்துறை, கீரிமலை, போயிட்டி, இளவாலை, கலட்டி, தையிட்டி, மயிலிட்டி, மாவிட்டபுரம், தெல்லிப்பளை, கருகம்பனை, பலாலி, கொடிகாமம் போன்ற இடங்களில் உள்ளவர்களுக்கு அங்கு சென்றும் தன்னிடம் நாடி வருபவர்களுக்கும் அரும்பணியாற்றியுள்ளார்.

'ஆயிரம் வேரைக் கண்டவன் அரைப்பரிகாரி' என்பது பழமொழி. எண்ணெய் காய்ச்சுவது, மருந்துக்குளிகைகள் சூரணங்கள் தயாரிப்பது சுலபமான காரியமன்று. எண்ணெய் வடித்தெடுக்க நாட்கள் பல செல்லும்.



உரிய சாறுகள் அளவு கெடாது சேர்க்கப்பட வேண்டும். பின்பு எண்ணெய் (நல்லெண்ணெய்)விட்டு காய்ச்சி பதத்திற்கு வடித்து எடுப்பார்கள். இதமாகவும் பதமாகவும் எடுத்த இறக்க வேண்டும். சிறு குழந்தைப் பிள்ளைகளுக்கும், வாத ரோகிகட்கும், தலைமுடி உதிர்வோருக்கும், புண் குணமாவதற்கும், மனநோய் நீங்குவதற்கும் எண்ணெய் வழங்குவதில் புகழ் பெற்ற வைத்தியராக விளங்கினார்.

**எஸ்.ரி.குமரன்**

இவர் சைவ சமய உத்தமராக வாழ்ந்த தரும சிந்தனையாளர். பல்லாயிரக்கணக்கான நோயாளிகள் வந்துநோய்தீர்க்கப் பெறுவார்கள். 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்ற அசையாத நம்பிக்கை கொண்டவர். அதனால் அன்னையவள் பராசக்திக்கு ஆலயம் அமைத்து பரிபாலித்தோடு அதன் பிரதான பூசகராக விளங்கினார். அன்னை மீது கொண்ட பற்றினால் அன்னையின் பெயரிலேயே தனது வைத்தியமனையை நடாத்திப் புகழ் பெற்றவர்.

பரிகாரி என்பவன் தமிழ் புலமை மிக்கவனாகவும் இருக்க வேண்டிய அவசியம் அக்காலத்தில் இருந்தது. அத்துடன் உடல், உள நோய் தீர்க்கும் திறனும் பரிகாரிக்கு அமைய வேண்டிய அவசியமும் இருந்தது. அதனால் தான் சித்த வைத்தியத்துடன் மாந்திரிகத்தையும் கற்றுத் தேர்ந்தார். மாந்திரிகத்தோடு நில்லாது சோதிடக் கலையிலும் மனையடி சாஸ்திரத்திலும் சிறப்பு பெற்று விளங்கினார். இதற்கு அன்னையின் பேரருள் காரணம் என்பார். பராசக்தியின் அருளால் வேளை (நூற்கட்டுதல்) போடுதல் பணியின் மூலமும் நோய்தீர்க்கும் வைத்தியராக செயற்பட்டார். நவீன விஞ்ஞான வளர்ச்சி இல்லாத காலத்தில் குழந்தை பிறந்த நேரம் கணிக்க நிலவின் அடி அளந்த காலமும் உண்டு. வைத்தியசாலைகளுக்கு வசதி படைத்தவர்கள் போக வசதி வாய்ப்பற்ற வறியவர்கள் சித்த வைத்தியரிடமே நாடி வருவார்கள். சித்த வைத்தியர்கள் பரோபகாரியாக இருக்க வேண்டிய கடப்பாடும் இருந்தது. பரோபகாரியாகப் பெயர் போன வைத்தியராக சின்னத்தம்பி அவர்கள் விளங்கினார். ஏழைகள் பலருக்கு இலவசமாக தன் பணியை செய்தவர்.தன்னை நாடி வரும் நோயாளிகளிடம் மருத்துவக் கூலியாக பணத்தை விலை பேசி வேண்டுவதில்லை. அவர்கள் கொடுக்கும் தொகையை ஏற்கும் பண்பாளனாக விளங்கினார்.

சித்த வைத்தியத்தின் உயிர் நாடி நாடிசாஸ்திரமாகும் இச் சாத்திரத்தினை மதிநுட்பமாகத் துல்லியமாக உணரும் திறமை ஆற்றல் படைத்தவராவர். இதனை அவரது வாழ்வில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றினூடாக விபரிக்கலாம்.

இவரது வாடிக்கை கிராமத்தில் இருந்து ஒரு கர்ப்பிணித்தாய் இணுவில் வைத்தியசாலைக்கு மகப்பேற்றுக்கு சென்றிருந்த சம்பவம் அது. புகழ் வாய்ந்த இந்தியா மகப்பேற்று வைத்தியர் கெங்கம்மா அங்கு பணியாற்றினார். குறை மாத பிரசவமாகையால் குழந்தை அழிந்த நிலையில் வைத்தியம் பார்த்து விட்டு வீடு திரும்பினார். தொடர் வயிற்று வலி வந்த போது இவரிடம் வந்து காண்பித்தார்கள். நாடி சாஸ்திர நுட்பத்தால் நஞ்சுக்கொடி இருப்பதாக கூறினார். சம்பந்தப்பட்ட தாயோ நஞ்சுக் கொடி எல்லாம் வைத்தியசாலையில் அகற்றி விட்டார்கள் என கூறி சித்தவைத்தியருடைய கூற்றை நம்ப மறுத்தார். மீண்டும் இணுவில் வைத்தியசாலைக்குச் சென்று சித்தவைத்தியருடைய கூற்றை கெங்கம்மாவிற்கு கூறினார். அப்போது மீண்டும் பரிசோதனை செய்யப்பட்டு நஞ்சுக்கொடி அகற்றப்பட்டது. குறைப்பிரசவமாகையால் குழந்தைகள் இருவர் என்பது புலனாகவில்லை. கெங்கம்மா அதிர்ந்தார் ஆச்சரியப்பட்டார். சித்த வைத்தியரை பார்க்க ஆசைப்பட்டார். அழைத்துப் பாராட்டினார். நாடி சாஸ்திரத்தின் நுட்பத்தை உணர்ந்து உவகை கொண்டார் என இவரது குறிப்பில் இருந்து அறியக் கூடியதாக உள்ளது. துல்லியமாக நாடி பார்த்து பீடிக்கப்பட்ட நோயைக் கூறும் ஆற்றல் மிக்கவராக விளங்கினார்.

வைத்தியனை அகத்தியர் பண்டிதன் என்கிறார். புராதன ஏட்டுச்சுவடிகளில் தீராத நோய் தீர்க்கும் ஔடத பாகங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. இங்கு ஓர் உதாரணம் வைத்தியன் ஏன் பண்டிதன் எனப்பட்டான் என்பதற்கு போதுமானதாய் அமையுமென எண்ணுகிறேன். நல்லெண்ணெய் என்று வாகடங்கள் கூறுவது வேப்பெண்ணெயே வேப்பெண்ணெய் பச்சிளங் குழந்தைக்கு சிறுதுளி உட்கொள்ளக் கொடுப்பதும் பார் வைத்துலக்கத்திற்கு கண்ணில்விடுவதும் தொப்புழ் புரணத்திற்கு போடுவதும் மரபு வழி விடயமாகும். வேலமரத்து எண்ணெய் நல்லெண்ணெய் அல்லாது தீயதா என்று வினா வெழும்பலாமல்லாவா? ஆகவே தமிழும் தந்து மருந்து வழி விருந்தும் செய்த அகத்தியர் கூற்று சாலப்பொருத்தமானது. இக் கூற்றுக்கு இலக்கணமாக தமிழ்ப்புலமையிலும் சித்த வைத்தியர் அவர்கள் சிறப்புற்று விளங்கினார்.

(28 ஆம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண் 5 இல் பிறந்தவர்களுக்குரிய பலன்கள் - புதன்

இந்த எண் அனைவராலும் மிகவும் விரும்பப்படும் எண்ணாகும். அனைத்து எண்களுக்கும் இந்த எண் பொதுவாக உள்ளது. மிக நன்மையும் அதிர்ஷ்டமும் தருவது இந்த எண்ணாகும். புதனின் ஆதிக்கம் வலுத்து இருப்பவர்களுக்குப் பெருத்த யோகங்களைக் கொடுக்கும். புதனின் எண் இல்லாதவர்களுக்கும்கூட இந்த ஆதிக்கமானது நல்ல பலன்களைத் தரவல்லது.

இதனாலேயே பெரும்பாலான எண் சோதிடர்கள் பெயர் எண் 5 ஆக வரும்படி அமைத்துக் கொடுக்கிறார்கள். மற்ற அதிர்ஷ்ட எண்களான 1, 3, 6, 9 ஆகியவை நல்ல அமைப்புடனும் வலுவுடனும் அன்பர்களுக்கு இருந்தால் தான் நன்மை புரியும்.

இல்லையெனில் தீய பலன்களைக் கண்டிப்பாக கொடுத்துவிடும். உதாரணமாக 3 ஆம் எண்ணில் பிறந்தவர்களுக்கு 24, 33, 42, 51, ஆகிய 6 எண்ணின் வர்க்கங்கள் எந்த ஒரு பலனையும் கொடுக்காது. அதுமட்டுமன்றி அவர்களை நிச்சயம் பல தோல்விகளுக்குள்ளும் வேதனைகளுக்குள்ளும் ஆழ்த்திவிடும்.

ஆனால், 5 மட்டும் யாருக்கும் தீமை புரியாது. சோதிட சாத்திரத்தில் நவக்கிரகங்களில் சந்திரனுக்கு மட்டும் எல்லா இராசி வீடுகளிலும் சமமாகவும், நட்பாகவும் (விருச்சிகம் தவிர) சொல்லப்பட்டுள்ளது. அதனால் தான் சந்திரனின் ஆதிக்கம் ஜாதகத்தில் பொதுவாக எல்லா இராசிகளுக்கு நன்மையான பலன்களையே கொடுக்கும். கோசார பலன்களும் சந்திரனின் நிலையையே அடிப்படையாகக் கொண்டுள்ளது.

### இவர்களது திருமண வாழ்க்கை

இவர்களுக்குக் காதல் மீது மோகம் அதிகம். துணிந்து காதலகளில் ஈடுபடுவார்கள். அதுவும் 5, 9 ஆகிய எண்களில் பிறந்தவர்களால் மிகவும் ஈர்க்கப்படுவார்கள். 1, 3, 6 இல் பிறந்தவர்களையும் மணக்கலாம். 9, 18, 27, 1, 10, 19, 28 ஆகிய திகதிகளும் கூட்டு எண் 1, 9 வரும் திகதிகளும் திருமணத்திற்கு உகந்தவை.

**பாபுஜீ**

மேலும் 6, 15, 24 ஆகிய திகதிகளும் கூட்டு எண் 6 வரும் திகதிகளும் ஓரளவுக்குச் சாதகமானவையே. குழந்தை பாக்கியம் இவர்களுக்குக் குறைவு. எனவே 2, 6 ஆகிய எண்களில் பிறந்தோரைத் திருமணம் செய்தால் குழந்தை பாக்கியம் உண்டு.

### நண்பர்கள்

பொதுவாக மற்ற எண்காரர்கள் அனைவரும் இவர்களுக்கு நண்பர்களே. குறிப்பாக 9, 1, 6 திகதிகளில் பிறந்தவர்கள் இவர்களுடன் மிகவும் அதிகமாகப் பழகுவார்கள். இவர்கள் யாருடனும் கூட்டுத் தொழில் சேர்ந்து செய்யலாம். மற்ற எண்காரர்களை, அனுசரித்துச் சென்று, வெற்றி பெற்று விடுவார்கள்.

### தொழில்கள்

இவர்கள் கதை, கவிதை, நாடகம் எழுதல் சிற்பம் செதுக்குதல் ஜோதிடம் பார்த்தல் காகிதம் மொச்சை பயிறு மஞ்சள் முத்து வெற்றிலைப் பாக்கு கொடி வகைகள் போன்ற வியாபாரங்கள் / தொழில்கள் நன்மை பயக்கும். கல்வித் துறை கணக்குத்துறை தபால் துறை போன்ற வற்றில் பணிசெய்தல் சொற்பொழி வாற்றுதல் புரோகிதம் செய்தல் போன்றவையும் ஒத்து வரும்.

ஜோதிடம் போன்ற சாஸ்திர ஆராய்ச்சியிலும் ஈடுபடுவார்கள். சிலர் நாட்டின் தூதுவர்களாகவும் இருப்பார்கள்.

### 5ஆம் திகதி பிறந்தவர்கள்

புதன் கிரகத்தின் முழு அம்சம் பெற்றவர்கள். நல்ல தெய்வீக வாழ்க்கை அமையும். அறிவும் தெளிவும் உண்டு. இவர்கள் மற்றவர்களை மதிப்பவர்கள். அழகான தோற்றம் உடையவர்கள். இவர்களின் பேச்சிலும் நடத்தையிலும் ஒருவித ஈர்ப்புச் சக்தி உண்டு.

சிறு வயது முதலே குறிப்பிட்ட இலட்சியத்துடன் வாழ்க்கையை நடத்துவார்கள். மற்றவர்களை ஏமாற்றத் தெரியாது.

### 14ஆம் திகதி பிறந்தவர்கள்

இவர்கள் மிகுந்த அதிர்ஷ்டம் உடையவர்கள். பயணத்தில் சலிக்காத நாட்டம் இவர்களுக்கு இருக்கும். பலர் புகழ் பெற்ற வியாபாரிகளாக இருப்பார்கள். இருந்தாலும் இவர்களது வாழ்க்கையில் அடிக்கடி விபத்துகள் சரிவுகள் ஏற்படும். இறைவனின் அருளால் இவர்களுக்கு துன்பங்களைச் சமாளிப்பதற்கான சூழ்நிலையும் அறிவும் உருவாகும். காதல் விஷயங்களில் கவனமாக இல்லாவிட்டால் பின்பு வாழ்க்கையே கசந்துவிடும்.

மக்களைக் கவர்கின்ற சிறந்த எண் இது. எனவே எப்போதும் இவர்களைச் சூழ்ந்து 10 பேர் இருப்பார்கள். அரசியலிலும் இவர்களுக்கு அதிர்ஷ்டம் உண்டு!

### 23ஆம் திகதி பிறந்தவர்கள்

இவர்கள் மிகுந்த அதிர்ஷ்டசாலிகள். குருச்சந்திர யோகம் நிறைந்தவர்கள். அரசாங்கத்தாரால் எப்போதும் ஆதரவு கிடைக்கும். சமூகத்தில் உயர்ந்த பதவிகள் கிடைக்கும்.

ஓர் அரசனைப் போன்று அனைத்து வசதிகளுடனும் வாழ்வார்கள். பண்பாடு ஒழுக்கமும் நிறைந்தவர்கள். இவர்கள் உலகத்தில் சாதனை புரியப் பிறந்தவர்கள். மக்களைக் கவர்கின்ற சக்தி நிறைந்தவர்கள். புன்னகை புரிந்தே மற்றவர்களை வென்று விடுவார்கள். இவர்கள் சொல்லும் வார்த்தைகளுக்கு மறுப்பு இருக்காது.

அனைத்து மக்களின் அன்பும் ஆதரவும் கிடைப்பதால் பெரும் வியாபாரிகளாகவும் ஆன்மிகம் மற்றும் அரசியல் துறைகளில் புகழ் பெற்றதும் விளங்குவார்கள்.




" என்ன உங்க மனைவி உங்களுக்கும் முழுச் சுதந்திரம் குடுத்திருக்காங்களா?"

" ஆமாம், சமையலில், வீட்டு வேலையில் சலவையில் அவர் துளி கூட தலையிடுவதில்லை!




"இவ்வளவு தூரம் காதலிச்சு என்ன புண்ணியம், இன்னும் என்னை மூணாவது மனுஷனாகத்தானே நினைக்கிறேன்"

"என்ன சொல்றீங்க"




"எங்க கணக்கு வைத்தியார் தேனீ மாதிரி!"

"அவ்வளவு சுறுசுறுப்பு?"

"இல்லை தலையில் கொட்டிக் கொண்டே இருப்பார்"




"தீவிரவாதிகளுக்கெதிரா ஒரு படம் எடுத்தீங்களே, படம் ஹிட்டா?"

"இல்லை இப்போ தீவிரவாதிகளின்
ஹிட் லிஸ்ட்டில் இருக்கிறேன்!"

**சித்த வைத்தியத்துறைக்கு....(தொடர்ச்சி)**

சித்த வைத்தியர் சின்னத்தம்பி அவர்கள் யுத்தம் காரணமாக வலி.வடக்கை விட்டு இடம்பெயர்ந்த வேளையில் மல்லாகம்,உடுவில்,கொடிகாமம் போன்ற பிரதேசங்களில் வாழ்ந்த போதும் அங்கெல்லாம் தனது பணிமூலம் சிறந்து விளங்கியவர். அவரைத் தொடர்ந்து இவரது 5 ஆவது மகன் தங்கரட்ணம் வைத்தியப் பணிமனையைத் திறம்பட நடத்திக் கொண்டிருக்கின்றார். இன்றைய நவீன விஞ்ஞான உலகின் சவாலிலும் வளர்ச்சிப் போக்கிலும் சித்தவைத்திய பாரம்பரியத்தை வளர்க்கவேண்டும். சந்ததியை இடையறாது தொடரவேண்டும் என்ற நோக்கில் இவரது பேர்த்தி த.உமா லங்கா சித்த ஆயுர் வேத மருத்துவக் கல்லூரியில் மருத்துவக் கல்வியை கற்றுவருகின்றார்.

சித்த வைத்தியத்துறையில் மண்வாசனையோடு பரம்பரையாக செல்வாக்கு செலுத்திய சித்த வைத்தியர் கோ.சின்னதம்பி சித்தவைத்திய சேவையை பாராட்டி வலி.வடக்கு பிரதேச செயலகமானது 'வைத்தியகலாசூரி' என்ற சிறப்பு கௌரவ பட்டத்தை பரிந்துரை செய்தமை வலி.வடக்கு மண்ணுக்கும்,மக்களுக்கும், சித்தவைத்தியத் துறைக்கும் அவர் ஆற்றிய உயர் சேவையின் வெளிப்பாடேயாகும்.

சித்தவைத்தியகலாநிதி கோ.சின்னத்தம்பி 2000.11.04 இல் 92 வயதில் பராசக்தி அன்னையிடம் சரண்புகுந்தார். இவருடைய பணிகள் சிறப்புகள் இவரது 10 ஆவது ஆண்டு நினைவு தினத்தில் நினைவு கொள்ளப்பட்டது. இத்தகு சான்றோர்களின் அயராத பணியினால் எமது வலி.வடக்கு மண்ணானது பெருமை பெறுகின்றது.

வேரும் நாரும், இலையும், பூவும், கொடியும், சித்த வைத்திய முத்துக்களே. இறைவனால் எமக்கு அருளப்பட்ட அரியகொடை. இவையாவும் எம் அயலிலுள்ளவையே. எனவே எமது பாரம்பரிய சொத்தான சித்தவைத்தியத்தைப் பேணிக்காத்து சுகத்துடன் வாழவேண்டியது நமது கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச ஆங்கில மொழிக்கான திறனாய்வுத் தேர்வு பற்றிய விழிப்புணர்வு உயர்கல்விக்கோர் திறவுகோல்

**(சென்றவாரத் தொடர்ச்சி)**

ஏனெனில் 'அயெல்ஸ்' என்பது ஒரு சுருக்கப்பெயர் (Acronym) ஆகும்.

இந்த சர்வதேச ஆங்கில மொழிக்கான திறனாய்வுப் பரீட்சை முறையில் இரண்டு வடிவங்கள் உள்ளன.

1. கல்விசார் வடிவம் (Academic Training)
2. பொது பயிற்சி வடிவம் (General Training)

இவற்றில் உங்களுக்கு பொருத்தமான பரீட்சை முறையை நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

**கல்விசார் வடிவம்**
**(Academic Training)**

கல்விசார் வடிவம் ஆங்கில மொழியின் ஊடாக இளங்கலை (Bachelor), முதுநிலை (Master), பட்டப்படிப்புக்கான பல்கலைக்கழகங்களின் நுழைவு அனுமதி, உயர்கல்விக்கான பயிற்சிநெறிகள், கல்வி நிறுவனங்களின் நுழைவு அனுமதி, மருத்துவத்துறை போன்ற உயர் கல்வி போன்றவற்றிற்கானது. அதற்கு பரிட்சையாளர்கள் குறிப்பிட்ட பல்கலைக்கழகம், அல்லது குறிப்பிட்ட நிறுவனம் கோரும் ஒருங்கு கூட்டு மதிபெண் (Band Score), பெற்றிருக்க வேண்டும்.




அபி.தேவகுமார்

தற்போது அமெரிக்காவலுள்ள சில பல்கலைக் கழங்களும் அயெல்ஸ் தேர்வு ஒருங்கு கூட்டு மதிப்பெண் அடிப்படையில் ஏற்றுக்கொள்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

**பொது பயிற்சி வடிவம்**
**(General Training)**

ஆங்கிலம் பேச்சு மொழியாக உள்ள நாடுகளில் பொதுவான வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கு, பாடசாலை அல்லது கல்லூரி போன்றவற்றில் கல்வியை தொடர்வதற்கு, மற்றும் ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா, கனடா, நியுஸ்சிலாந்து போன்ற நாடுகளுக்கான குடிபுகல் போன்ற காரணங்களுக்காக பொதுப் பயிற்சி வடிவமுறை ஒருங்கு கூட்டு பெறுபேறுகளின் அடிப்படையிலேயே ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

இந்த அயெல்ஸ் தேர்வு நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

1. கேட்டல் (Listening)
2. வாசித்தல் (Reading)
3. எழுதுதல் (Writing)
4. பேசுதல் (Speaking)

தேர்வுக்கு தயாராகும் பரீட்சையாளர்கள் இந்த நான்கு பிரிவு குறித்தும் அறிந்து வைத்துக்கொள்ளல் அவசியம். அநேகமாக பரிட்சைக்கு தோற்றுவோரின் மனதில் எழும் எண்ணங்கள்; ஒவ்வொரு பிரிவுக்கும் எவ்வெவ்வளவு நேரம் வழங்கப்படும்? ஒவ்வொரு பிரிவுகளினதும் உட்பிரிவுகள் எத்தனை? உட்பிரிவுகளுக்கு வழங்கப்படும் நேரம் எவ்வளவு? பரீட்சைகள் எப்படி நடைபெறும்? அவற்றில் என்னென்ன உள்ளடக்கப்பட்டிருக்கும்? போன்றவைகளாகவே இருக்கும். உண்மையில் இவற்றை அறிந்து வைத்துக் கொண்டால் பரீட்சைக்கு தோற்றுபவர்கள் தம்மை தயார்படுத்திக் கொள்ள எளிதாக இருக்கும்.

**(தொடரும்)**

## 'யாழ் ஓசையின்' வார ஜோதிட பலன் [10.12.10 முதல் 16.12.10 வரை]

### கலாநிதி துன்னையூர் ராம் தேவலோகேஸ்வர குருக்கள் (சாரதாபீட ஜோதிடம்)

*** மேஷம்**

மேஷ ராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றிகள் ஏறப்டும். குடும்ப நிலையில் அனுகூலமான பலன்கள் அமையும். பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. எதிர்பாராத வகை திடீர் செலவுகளுக்கும் பலன் உண்டு. தொழில் நிலைகளில் சற்று அலைச்சல் இழுபறி நிலை இருக்கும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு வெற்றி ஏற்படும்.

*** இடபம்**

இடபராசி அன்பர்களுக்கு சிறப்பான பலன்களுக்கு இடமுண்டு. குடும்ப நிலையில் மகிழ்வும் நிறைவுகளும் அமைந்திடும். தொழில் நிலையில் அனுகூலமான பலன்கள் ஏற்படும். பணவரவு சிறப்பான நிலையில் அமைய இடமுண்டு. மனைவி வழியால் அனுகூலமான பலனுக்கு இடமுண்டு. கடன் நிலைகளில் சிறு சிறு மந்த நிலைகள் இருக்கும். பெண்களுக்கு அனுகூலமுண்டு. மாணவர்கள் முயற்சி வேண்டும்.

*** மிதுனம்**

மிதுன ராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் சிறு சிறு இழுபறி நிலை இருக்கும். தொழில் நிலையில் வேலைப் பளு, அலைச்சல் நிலை இருக்கும். பணவரவு சற்று சுமாரான மத்திமமான நிலையில் அமையும். எதிரிகளின் சூழ்ச்சிகள், பிரச்சினைகள் எதிர்கொள்ளும் கடன் நிலையில் நிதானமான செயற்பாடு வேண்டும். பெண்களுக்கு மந்த பலன் அமையும். மாணவர்கள் முயற்சி வேண்டும்.

*** கடகம்**

கடக ராசி அன்பர்களுக்கு சிறப்பான பலன்கள் அமைகின்ற நிலையுண்டு. தொழில் நிலைகளில் நல்ல முன்னேற்றம் இருக்கும். குடும்பத்தில் அனுகூலமான பலன்கள் ஏற்படும். பணவரவு மிகவும் திருப்திகரமான நிலையில் அமையும். எதிர்பாராத வகையில் திடீர் நன்மைகள் ஏற்பட பலனுண்டு. கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் அமையும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.

*** சிம்மம்**

சிம்ம ராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன் அமையும் நிலையுண்டு. தொழில் நிலைகளில் ஓரளவிற்கு முன்னேற்றங்கள் அமையும் நிலைப்பாடு இருக்கும். குடும்ப நிலையில் சற்று மந்தமான பலாபலன் இருக்கும். திடீர் சுகயீனம், மருத்துவ செலவுகள் அமைய இடமுண்டு. கடன் நிலைகளில் சற்று அலைச்சல் இழுபறி நிலை இருக்கும். பெண்களுக்கு சஞ்சல நிலை இருக்கும். மாணவர்களுக்கு அனுகூலமுண்டு.

*** கன்னி**

கன்னிராசி அன்பர்களுக்கு சற்று மத்திமமான பலன்களே அமையும். எடுக்கும் முயற்சிகளில் நிதானம் தேவை. தொழில் நிலைகளில் ஓரளவிற்கு அனுவல பலனுண்டு. குடும்ப நிலையில் சுமாரான மத்திம பலன்களே இருக்கும். சகோதர வழியில் மனச் சஞ்சலங்கள் அமைய இடமுண்டு. கடன் நிலைகளில் சிறு சிறு அலைச்சல் நிலை இருக்கும். பெண்களுக்கு வெற்றியுண்டு. மாணவர்கள் முயற்சி தேவை.

*** துலாம்**

துலாம் ராசி அன்பர்களுக்கு அனுகூலமான பலாபலன்கள் ஏற்படும். தொழில் நிலையில் சிறப்பான முன்னேற்றம் ஏற்படும் நிலை உண்டு. குடும்பத்தில் அனுகூலமான பலன்கள் ஏற்படும். பணவரவு மிகவும் திருப்திகரமான நிலையில்அமையும். உறவினர்களின் மூலம் அனுகூலமான நன்மை உண்டு. கடன் நிலைகளில் சுமுகமான பலன்கள் அமைந்திடும். பெண்களுக்கு வெற்றி உண்டு. மாணவர்கள் முயற்சி தேவை.

*** விருச்சிகம்**

விருட்சிக ராசி அன்பர்களுக்கு சுமாரான மத்திமமான பலனே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானம் தேவை. தொழில் நிலைகளில் அலைச்சல், இழுபறி நிலைகள் அமைந்திருக்கும். குடும்பத்தில் சற்று சுமாரான மத்திமமான பலன்களே அமையும். பணவரவு சற்று மத்திமமான நிலையிலேயே ஏற்படும். கடன் நிலைகளில் நிதானமான செயற்பாடு வேண்டும். பெண்களுக்கு அனுகூலமுண்டு. மாணவர்களுக்கு முயற்சி வேண்டும்.

*** தனுசு**

தனுசு ராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன் அமையும். எதிர்பாராத வகை செலவீனங்கள் அதிகமாகும். குடும்ப நிலையில் சற்று மத்திமமான பலன்களே அமையும். பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. எடுக்கும் முயற்சிகளில் நிதானமான செயற்பாடு வேண்டும். கடன் நிலைகளில் மத்திமமான பலன்களே அமையும். பெண்களுக்கு மத்திம பலன் அமையும். மாணவர்கள் முயற்சி தேவை.

*** மகரம்**

மகர ராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான பலா பலன்கள் அமையும். தொழிலில் நல்ல முன்னேற்றங்கள் அமையும் நிலை உண்டு. குடும்பத்தில் மகிழ்வும் நிறைவான விடயங்களும் ஏற்படும். பணவரவு அனுகூலமான நிலையில் அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நல்ல வெற்றிகள் ஏற்படும். கடன் நிலைகளில் அனுகூலமான பலன் அமையும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.

*** கும்பம்**

கும்ப ராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன் அமையும். தொழில் நிலையில் முன்னேற்றம் ஏற்படும். குடும்பத்தில் அனுகூலமான பலாபலன்கள் அமையும். பணவரவு சற்று மத்திமமான நிலையிலேயே இருக்கும். எடுக்கும் முயற்சிகளில் கூடுதலான கவனம் வேண்டும். கடன் நிலைகளில் ஓரளவிற்கு அனுகூல பலன் உண்டு. பெண்களுக்கு அனுகூலமுண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.

*** மீனம்**

மீன ராசி அன்பர்களுக்கு சிறப்பான அனுகூலமான பலன் உண்டு. தொழில் நிலையில் சிறப்பான பலன் அமையும். குடும்பத்தில் சிறப்பான பலாபலன்கள் அமையும் பலனுண்டு. பணவரவு அனுகூலமான நிலையில் அமையும் பலன் உண்டு. முயற்சிகளில் வெற்றிகள் அமையும் நிலையுண்டு. கடன் நிலையில் சுமுகமான பலாபலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இலங்கையில் 'நாக மரபில்' இனம், நாடு, அரசு

(சென்ற வாரத் தொடர்ச்சி)

கலாநிதி இரகுபதி சாசனத்தில் வரும் இந்த 'நாகநகர்' அக்காலத்தில் கந்த ரோடையின் தலைநகராக இருந்திருக்க லாம் அல்லது கந்தரோடையைக் குறித்தி ருக்கலாம் எனக் கருதுகிறார் (Ragupathy 1991). ஆனால் நிக்லஷ் என்ற அறிஞர் கி.பி.9ஆம் நூற்றாண்டுக்குரிய சாசனம் மொன்றில் வரும் நாகநகரை ஆதாரம் காட்டி பிராமிச் சாசனத்தில் வரும் நாக நகரை வவுனியாவுக்கு வடக்கில் இருந்த ஒரு நகரம் என அடையாளப்படுத்துகிறார் (Nicholas 1963:81) இந்நகரம் எங்கு அமைந்திருந்தாலும் இந்த நகரில் வாழ்ந்த நாகர்கள் தமிழர்களாக இருந்தனர் என் பதை இச்சாசனம் உறுதிப்படுத்துகிறது என்பதில் ஐயமில்லை..

அண்மையில் தென்மராச்சி உடுத்துறை என்ற கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கி.பி.2 ஆம் நூற்றாண்டைச் நேர்ந்த நாண யம் ஒன்று நாகதீபத்தை அடையாளப்ப டுத்துவதில் முக்கிய இடத்தைப் பெறுகி றது. இந்நாணயத்தின் முன்பக்கத்தில்' 'நாகபூமி' (Nakapumi) என்ற பெயரும், பின்பக்கத்தில் பொலம் என்ற பெயரும் காணப்படுகிறன. இலங்கைப் பிராமிச் சாசனங்கள் சிலவற்றில் 'புமி' (Bumi) என்ற சொல்லும், 'நஹபுமி' என்ற பெய ரும் காணப்படுகின்றன (Paranavitana 1982:168-9). அவற்றில் நஹபுமி (Nagabumi) என்ற வாசகம் பிராகிருத மொழிக்குரிய வடபிராமியில்' எழுதப்பட் டிருக்கும் போது உடுத்துறையில் கிடை த்த நாணயம் தமிழ் மொழிக்கே சிறப்பான தமிழ்ப் பிராமியில் எழுதப்பட்டுள்ளமை முக்கிய வேறுபாடாக உள்ளது (புஷ்பரட் ணம் 2003:116-119). இந்த வேறுபாடு பாளியில் நாகதீபம் என அழைக்கப்பட்ட பிராந்தியம் தமிழில் நாகபூமி என அழைக் கப்பட்டதை எடுத்துக்காட்டுவதாக கருத இடமுண்டு (படம்-5). ஆயினும் சற்றுப் பிற்பட்ட காலத்தில் தமிழகத்தில் தோன்றிய இருபெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை தமிழகத்திற்கு அப்பால் கடல்கடந்து செல்லவேண்டிய இடங் களில் ஒன்றாக நாகநாட்டைக் குறிக்

**மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்படும் தொல்லியல், இலக்கியச் சான்றுகள்**

5


கின்றது. இதன் பின்னர் தோன்றிய கலிங் கத்துப்பரணியில் ஜெயங்கொண்டார், இராஜபாரம்பரியம் பற்றிக் கூறும் போது சோழவம்சத்த கிள்ளிவளவன் நாகநாட்டு இளவரசியை மணந்த கதை கூறப்படுகிறது.

இதேபோல் வேலூர்ப்பாளைச் செப் பேட்டில் பல்லவ மன்னன் ஒருவன் நாக குல மகளை மணந்த செய்தி சொல்லப் படுகிறது (பாலசுப்பிரமணியம். மேற் கூறப்பட்ட மூலாதாரங்களில் கூறப்படும் நாகநாட்டையும், அதனோடு தொடர்பு டைய வரலாற்றுச் சம்பவங்களை ஆய்வு செய்த அறிஞர்கள் இவற்றில் சுட்டிக்காட் டப்படும் நாகநாடு ஈழத்துப் பாளி நூல் கள் கூறும் நாகதிபத்தையே குறிப்பதாக கருதுகின்றனர் (Rasanayakam,C., 1926, சிற்றம்பலம் 1991:67-80).

ஆறாம் நூற்றாண்டின் பின்னர் பாளி இலக்கியங்களில் வடஇலங்கை நாகதீபம் என்ற பெயருடன் உத்தரதேசம் என்ற இன் னொரு பெயராலும்' அழைக்கப்படுகிறன. இப்பெயர்கள் ஒரோபிராந்தியத்தை குறித் தனவா அல்லது அப்பிராந்தியங்களின் எல்லைகள் வேறுபட்டிருந்தனவா என்ப தற்கு அவ்விலக்கியங்களில் ஆதாரங்கள் காணப்படவில்லை. ஆயினும் நாகதீபம், உத்தரதேசம் ஆகிய பிராந்தியங்க ளுடன் தொடர்புடைய வரலாற்றுச் சம்பவங்களை நோக்கும் போது அவை ஒரு பிராந்தியத்திற்குரிய நிகழ்ச்சிக ளாகவே காணப்படுகின்றன. இதற்குப் பின்வரும் சம்பவங்களைக் குறிப்பிட லாம். ஏழாம் நூற்றாண்டில் ஹட்டதத்தன் அநுராதபுரத்தில் ஆட்சி செய்த போது அவனுக்குப் பயந்த சிங்கள இளவரசன் 'மாணா' என்பவன் உத்தரதேசத்தில் அடைக்கலம் பெற்றுப் பின்னர் தமிழ்நாடு சென்றதாக சூளவம்சம் கூறுகிறது (Culavamsa 47: 2-7). ஏட்டாம் நூற் றாண்டில் ஸ்ரீநாக தலைமையில் உத்தர தேசத்தில் இருந்து அநுராதபுரத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட படையெ டுப்பு பற்றிய செய்திகள் சூளவம் சத்தில் காணப்படுகிறது (Culavamsa 44: 70-73). ஒன்ப தாம் நூற்றாண்டில் (கி.பி.835) பண்டியமன்னன் ஸ்ரீமாறஸ்ரீவல்லபன் அநுராதபுரத்திற்கு எதிராகப் படை யெடுத்து வந்து உத்திரதேசத்தில் தங்கி யிருந்த போது மாதோட்டத்தில் வாழ்ந்த தமிழர்களும் அவர்களுடன் இணைந்து அநுராதபுர அரசைத் தோற்கடித்தனர்

பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(Culavamsa 50:12-42). ஏறத்தாழ இதேகாலப்பகுதியில் பத்தி இயக்கத்தை தலைமையேற்று நாடாத்திய நாயன்மார் களுள் ஒருவரான சுந்தரர் தோவரத்தில் தமிழகத்தை அடுத்து முதன்மை பெற்ற ஆலயங்களில் ஒன்றாக வடஇலங்கை யில் மாதோட்டத்திலுள்ள திருக்கேதீஸ் வரத்தையும், கிழக்கிலங்கையில் திரு கோணமலையிலுள்ள கோணேஸ்வரர் ஆலயத்தையும் போற்றிப்பாடுகிறார். பேராசிரியர் வேலுப்பிள்ளை மாதோட் டத்திலுள்ள ஆலயம் கேதீஸ்வரம் என்ற பெயரைப் பெற்றதற்கு அது நாகரின் ஆலயமாக இருந்ததே காரணம் எனக் குறிப்பிடுகிறார் (Ketu is considedered to be a cobra repreaening the Nagas. Veluppillai 2002:154). கி.பி.10 ஆம் நூற்றாண்டில் தென்னிந்திய மன்னன் வல்லபன் என்பான் நாகதீபத்தின் மீது படையெடுத்த செய்தி



படம்-5

காணப்படுகிறது (Culavamsa 53:12-16) இப்படையெடுப்பு தோல்வியில் முடிந்திருக்கலாம் என்பதை வெசகிரியல்' கிடைத்த சிங்களச் சாசனம் உறுதிப்படுத்துகிறது (E.Z,I:35-51). கி.பி.13ஆம் நூற்றாண்டில் எழுந்த ராஜ வளி என்ற சிங்கள இலக்கியத்தில் வட இலங்கை 'மணிநாகதீப' என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. இவ்விடம் கந்த ரோடையாக இருக்கலாம் என கொடகும் புர குறிப்பிடுகிறார் (Godakumbara 1968:7). ஏறத்தாழ இதேகாலப்பகுதியில் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைமீது படையெடுத்த கலிங்கமாகன் யாழ்ப் பாணத்தில் வந்திறங்கி அங்கு நாகர்குல அரசனைச் சந்தித்ததாக மட்டகளப்ப மானியம் கூறுகிறது (மட்டகளப்புமான் மியம் :54). மேற்கூறப்பட்ட ஆதாரங்க ளில் இருந்து அநுராதபரத்திற்கு வடக்கி லிருந்த பிராந்தியம் கி.பி.13ஆம் நூற் றாண்டுவரையாவது நாகதீபம்,' நாகநாடு, நாகபூமி முதலான பெயர்களில் அழைக் கப்பட்டிருக்கலாம் என்பது தெரிகிறது.

ஆயினும் மொழியால் தமிழராக இருந்த நாகர்கள் வடஇலங்கைக்குள் மட்டும் வாழ்ந்தாதக எடுத்துக் கொள்ள முடியாது.

(தொடரும்)

## யாழின் ஓசை யாழ் ஓசை

யாழில் உதித்த யாழ் ஓசையே
யாழ் மக்கள் விரும்பும் யாழ் ஓசையே
யாழில் மிளிரும் யாழ் ஓசையே
யாழ் கீதம் இனிக்கட்டும் யாழ்
ஓசையே

யாழ்ப்பாண சமையலோடும்
யாழ் ஓசை சினிமாவோடும்
சின்னஞ் சிறு சிறார்களுக்கு
சிறுவர் மலர் பகுதியோடும்

இராசிபலன் பகுதியோடும்
இன்னும் பல அம்சங்களோடும்
வெள்ளிதோறும் யாழெங்கும்
வெளிவரும் யாழ் ஓசையே

கே.கண்ணன்
தரம் 8F
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

## ஹைக்கூ

எதற்காக
உன் புகைப்படத்தை
அனுப்புகிறாய்
நீ எனக்குள்
உயிராய் இருக்கும் போது

ஓ...
முகில்களே
நீங்கள் எப்போது
கணவரை
இழந்தீர்கள்...?

அப்போது
நீ ஏற்காத காதலை
இப்போது
உன் கல்லறை
ஏற்றுக் கொள்கிறது
என் கண்ணீராய்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் இடம்பெற்ற நிகழ்வுகளின் தொகுப்பு




புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலை மன்ற ஆண்டு விழாவில் இன ஒற்றுமையை பேணும் வகையில் தமிழ், சிங்கள, முஸ்லிம் குடும்பங்களாக சிறுவர்கள் நிற்பதை படத்தில் காணலாம். (படம்:- வடமராட்சி நிருபர்)



ஆசிரிய உதவியாளர் நியமனத்தின்போது புறக்கணிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தர நியமனம் வழங்கக் கோரி யாழ்.கல்வி வலயத்தின் முன்னால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருப்பதை படத்தில் காணலாம்.



வட்டுக்கோட்டை தொகுதி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயற்குழு தெரிவுக் கூட்டம் அண்மையில் சுழிபுரம் நாவலர் சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவரான சி.குலநாயகம் உரையாற்றுவதையும் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், பேராசிரியர் க.சிற்றம்பலம், பெ.கனகசபாபதி ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்:- சங்கானை நிருபர்)



வலி.கிழக்கு பிரதேச ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் அண்மையில் ஆவரங்கால் சிவசக்தி மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் நிதியத்தின் செயலாளர் மா.புவனேந்திரன் உரையாற்றுவதையும் பிரதேச செயலக அதிகாரிகள் மற்றும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்:- கைதடி நிருபர்)



வரணி பொது நூலகத்தில் இடம்பெற்ற மரம்நடுகை வைபவத்தின்போது வரணி இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலய அதிபர் சு.தர்மலிங்கம் மரம் நாட்டுவதையும் நூலகர் பொ.ரவீந்திரன் சமுர்த்தி வங்கி முகாமையாளர் திருமதி யோகராசா மற்றும் நூலக அபிவிருத்தி சபை அங்கத்தவர்களையும் படத்தில் காணலாம். (படம்:- வரணி நிருபர்)



சங்கானை ஈசிற்றி ஆங்கில கல்வி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது நிகழ்வில் மானிப்பாய் இலங்கை வங்கி முகாமையாளர் கே.லட்சுமணசர்மா உரையாற்றுவதையும் அருகில் ஐ.டி.எம்.யாழ்.மாவட்ட முகாமையாளர் என்.சுதானந்தசர்மா மற்றும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸ்திரேலியாவின் பரிதாபம்



அவுஸ்திரேலியா என்றாலே வயிறு கலங்கி நின்ற எதிரணிகள் அண்மைக்காலமாக அந்த அணி குறித்து அலட்டிக்கொள்வதாக தெரியவில்லை. ஏனெனில் சொந்த மண்ணில் கூட தனது திறமையை வெளிக்காட்ட முடியாது திணறிவருவதுடன் எதிரணியின் பரிகாசத்துக்கும் ரசிகர்களின் விமர்சனத்துக்குமென அந்த அணி தன்னை படம்பிடித்து காட்டிக்கொடுத்துள்ளது.

அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ஸ்ரீவ்வோஹ் ஓய்வு பெற்றதையடுத்து அந்த அணியின் வெற்றி நாயகனாக வெற்றித்தலைவனாகவும் வலம் வந்தவர் தான் தற்போதைய அணித்தலைவர் ரிக்கி பொண்டிங். இவரது தலைமையின் கீழான அவுஸ்திரேலிய அணி டெஸ்ட் கிரிக்கெட் ஆனாலும் சரி ஒரு நாள் கிரிக்கெட் ஆனாலும் சரி இரண்டினிலும் வெற்றிகளுக்கு மேல் வெற்றிகளைக்குவித்து ஏனைய அணிகளைவிட உச்சத்தில் நின்றதை கிரிக்கெட் உலகம் மறந்துவிட முடியாது.

அக்காலகட்டத்தில் அவுஸ்திரேலிய அணியின் துடுப்பாட்டம் எதிரணிப்பந்துவீச்சாளர்களை வெறுப்பேற்றும் வகையில் அமைந்திருந்த அதேவேளை, அந்த அணியின் பந்துவீச்சு எதிரணியின் துடுப்பாட்ட வீரர்களை மிரட்டிக்கொண்டும் இருந்தது. எந்தப் போட்டியிலும் சரி எவ்வாறான இலக்குகள் நிர்ணயிக்ககப்பட்டாலும் சரி அதில் வெற்றி காணாது களத்தை விட்டு வெளியேறாத அணிதான் அவுஸ்திரேலியாவாகும்.

இவ்வாறு வெற்றிக்கொடி பிடித்து உலகையே வலம்வந்த அவுஸ்திரேலிய அணிக்கு கண்பட்டது போல் அல்லது சூனியம் செய்துவிட்டதைப்போல் ஆகிவிட்டது அந்த அணியின் இன்றைய கதை. இன்று அந்த அணியைப்பார்த்து ஏனைய அணி வீரர்கள் எள்ளிநகையாடிக்கொண்டிருக்கின்றனர். அவுஸ்திரேலியா என்றால் அநாசயமாக நினைத்து எதிரணிகள் களம் இறங்குகின்றன. இதற்கு ஏற்றால் போல் அவுஸ்திரேலியா அணியின் தனது முழுமையான திறைமையை வெளிப்படுத்தாது வெற்றிகளை எதிரணிக்கு விட்டுக்கொடுப்பது போல் விளையாடிக்கொண்டிருக்கின்றது.

அந்த அணி இறுதியாக இந்தி அணியை எதிர்கொண்ட போது டெஸ்ட் தொடரையும் ஒருநாள் தொடரையும் தாரைவார்த்து தனது ரசிகர்களிடமிருந்தும் கிரிக்கெட் உலகத்திடமிருந்தும் ஏகப்பட்ட விமர்சனங்களைப் பெற்றுக் கொண்டது.

இதுதான் இப்படி என்றால் இங்கிலாந்து அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான பெரும்போர் என வர்ணிக்கப்படுகின்ற வரலாற்று சிறப்பு மிக்க ஆஷஸ் (சாம்பர் கிண்ணம்) போட்டியில் சாதித்துக்காட்டுவதாக வாயடித்த அவுஸ்திரேலிய அணி தற்போது அந்தத் தொடரிலும் தனது நிலைமையை உணர்ந்து செயற்படுவதாகத் தெரியவில்லை. ஐந்தே போட்டிகளைக் கொண்ட இந்த ஆஷஸ் தொடரின் முதலாவது போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ள நிலையில் இரண்டாவது போட்டியை போராட்டமே இல்லாது விட்டுக்கொடுத்து இனிங்ஸால் தோல்வியடைந்திருப்பதானது தனது நாட்டுக்கே பெருத்த ஏமாற்றத்தை கொடுத்திருக்கின்றது.

மிகுதியாக மூன்று போட்டிளே எஞ்சியிருக்கின்ற நிலையில் தனது திறமையின் வெளிப்பாடு இவ்வாறே தொடருமானால் அது அவுஸ்திரேலிய அணிக்கு பாதகத்தை அதிகரிக்கவே செய்யும். எனவே அடுத்து வரும் போட்டிகளில் அவுஸ்திரேலியா பழையை நிலைமைக்கு திரும்புவது மட்டுமல்லாமல் பந்து வீச்சிலும் துடுப்பாட்டத்திலும் விஸ்வரூபம் எடுக்க வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. சாம்பர் கிண்ணமானது இரண்டு அணிகளினதும் உயிர் மூச்சாக மதிக்கப்படுகின்றமையினால் அதனைதம்வசப்படுத்திக்கொள்ள இரண்டு அணிகளுமே போராடுகின்ற போதிலும் இங்கிலாந்து அணி தொடரில் முன்னிலை வகிப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். எனவே அவுஸ்திரேலிய அணியின் செயற்பாட்டில் முழுமையான மாற்றங்கள் எதிர்பார்க்கப்படுகின்றனமு



இல்லாத நிலையில் சாம்பர் கிண்ணத்தின் சுவாரஸ்யமும் எதிர்பார்ப்பும் கானல் நீராகிவிடுமோ என்ற கவலையும் இருக்கத்தான் செய்கிறது.

# இந்தியா தென்னாபிரிக்காவில் சாதிக்குமா?

அண்மைக்காலமாக தொடர் வெற்றிகளைக் குவித்து வருகின்ற இந்திய அணி நியூஸிலாந்து அணியுடனான டெஸ்ட் மற்றும் ஒரு நாள் தொடரின் வெற்றியினையடுத்து எதிர் வரும் 16 ஆம் திகதி தென்னாபிரிக்க அணியுடனான டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக அங்கு சென்றுள்ளது

இந்தத் தெடரையும் வெல்லும் நோக்கில் அங்கு சென்றுள்ள இந்திய அணி பயிற்சியாளர் கேரி கர்ஸ்டன் தலைமையில் தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளது. தென்னாபிரிக்காவின் ஆடுகளம் இந்தியாவுக்கு பெரும் சவாலாக இருப்பதனாலேயே இந்த முன்கூட்டிய முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.



'பந்து எகிறும் ஆடுகளம்'

'ஷோட் பிட்ச் பந்துகள்' என்பது இந்திய வீரர்களுக்கு பெரும் சவாலாக இருந்து வருகின்றது. எனினும் அதனை முறியடிக்க கர்ஸ்டன் தயாராகிவருகிறார். பொதுவாக இந்திய துடுப்பாட்ட வீரர்கள் பந்துகள் எழும்பும் கடினமான ஆடுகளங்களில் தடுமாறுவார்கள் என்பது தெரிந்ததே. இந்திய துடுப்பாட்டக்காரர்கள் மட்டும்தான் தடுமாறுகிறார்கள் என்று கூறமுடியாது. பந்துகள் எழும்பும் ஆடுகளங்களில் அனைத்து துடுப்பாட்ட வீரர்களும் தடுமாறத்தான் செய்கின்றனர். ஆனால் அந்த அணிகளில் ஒரிரு சிறந்த வீரர்கள் இனிங்ஸைச் குறிப்பிடத்தகுந்த பங்களிப்பைச் செய்து ஒரு நல்ல திடமான ஓட்ட எண்ணிக்கையை எட்டுவர். இந்தியாவின் சுனில் கவாஸ்கர், அமர்நாத் போன்றோர் இவ்வாறான ஆடுகளங்களில் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்தனர். தற்போது சேவாக், கம்பீர், டிராவிட், சச்சின், லஷ்மண், டோனி என்று இந்திய துடுப்பாட்ட வரிசை பலமாக உள்ளது.



அதனால் பௌன்ஸ் பந்துகள் மட்டுமே இவர்களை அச்சுறுத்தி விடமுடியாது. எந்த பிட்ச் ஆனாலும் பந்து வீச்சு அளவிலும் திசையிலும் துல்லியமாகவும் இருந்தால் விக்கெட்டுக்களை வீழ்த்துவதில் வெற்றி காணமுடியும்.

ஆனால் இன்றுள்ள ஆடுகளங்கள் பெரிதாக பௌன்ஸ் ஆகும் ஆட்டக்களங்களாக இல்லை. வேகப்பந்து வீச்சாளர்கள் கடினமாக உழைத்தே விக்கெட்டுகளை வீழ்த்த வேண்டியிருக்கின்றது.

இந்நிலையில் உலகக் கிண்ணப் போட்டி அண்மித்துக்கொண்டிருக்கும் வேளையில் தொடர் வெற்றிகளைக் குவித்து கம்பீரமான அணியாக வலம் வருகின்ற இந்திய அணியின் அனுபவம் தென்னாபிரிக்காவுக்கு பெரிய அச்சுறுத்தலாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அதேவேளை, தன் சொந்த மண்ணில் இந்தியாவிடம் மண்டியிடாது அதன் கனவுகளை தென்னாபிரிக்கா தகர்க்கும் எண்ணத்திலேயே களமிறங்கும் என்பதில் மாற்றமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and published by Express Newspapers (Cey) Ltd. at No. 185, Grandpass Road, Colombo 14. On Friday December 10, 2010